295

வசந்தம்

சுபானு ௵ ஆடி ௴

1943, ஜூலை



ஸெண்ட்ரல் ஸ்டுடியோஸ்

வால்மீகி

டைரக்ஷன் — S. M. ஸ்ரீராமுலு நாயடு

வசனம் — இளங்கோவன் + பாபநாசம் சிவன் — பாட்டு

தியாகராஜ பாகவதர் • ராஜகுமாரி

ரங்காச்சாரி • கிருஷ்ணன் • மதுரம்

2-4
72
2.11, N42 ML
N43.2.4
199787

வசந்தா தையல் நூல்

★

No. 600.

மிகச் சிறந்த முறையில் நேர்த்தி
யாகத் தயாரிக்கப்படுகிறது:

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும்
பெயர் பெற்றது:

உறுதியுடன் உழைக்கும் என்ப
தற்கு உத்திரவாத மளிக்கிறோம்:

மேற்கொண்டு விவரங்களுக்கு
எழுதித்தெரிந்து கொள்ளலாம்:

★

விலாசம்:-

The Vasanta Sewing Thread Company

14/280. Oppanakara Street

COIMBATORE.

தந்திவிலாசம் : **FLOWER.** டெலிபோன் நெ. **175.**

சௌத் இந்தியா கார்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்.

இரும்பு, எலக்ட்ரிக், மில் ஸ்டோர்ஸ் வியாபாரிகள், அவனாசி ரோடு, கோயமுத்தூர்.

8-MAY 1944

சேர்மன் போர்டு ஆப் டைரக்டர்ஸ்

டாக்டர். ராஜா. சர் அண்ணாமலை செட்டியார், KT. LL. D.

ஆப் செட்டிநாடு.

தலைமை ஆபீஸ் செட்டிநாடு.

எங்களிடம், எல்லாவிதமான டாட்டா இரும்புச் சாமான்களும், கலாய் குழாய்களும், நீலகிரி மார்க் சிமிண்டும், குட்லஸ் வால்வர்ணம் வகையருக்களும், சானிபட்டரிச் சாமான்களும், எலக்ட்ரிக் பல்புகள், வயர்கள், பங்காக்கள், மோட்டார், சுவிட்சுகள், முதலியவைகளும், மில் ஸ்டோர்ஸ்,பாபின்ஸ், தோல் பெல்ட்டுகள், கிராப்ட் பேப்பர், ஊப் தகடுகள், கித்தான்கள் கிடைக்கும்.

பிராடியூஸ் டிபார்ட்மெண்டு,

21/138, 139, ரெங்கய்ய கவுடர் தெரு

நெல், அரிசி, கோதுமை, ரவை, மாவு தினுசுகள், சர்க்கரை நவதானியங்கள், மற்றுமுள்ள மளிகை சாமான்கள் எங்களிடம் மொத்தமாகக் கிடைக்கும்.

பீஸ் கூட்ஸ் டிபார்ட்மெண்டு ("கமர்ஷியல் எம்போரியம்")

21/138, 139 ரெங்கய்ய கவுடர் தெரு

பல மில்களில் தயாராகும் ஷர்ட்டிங், கோட்டிங், மல், லாங்க்ளாத், வாயில்ஸ், சீட்டி தினுசுகள், டிரில், டுவில், வேஷ்டிகள், துண்டுகள், இன்னும் பலவிதமான மில் ஜவுளி தினுசுகளும், எங்களிடம், மொத்தமாகவும், சில்லரையாகவும், சகாயமாகவும் கிடைக்கும்.

PSG

மோட்டார்களை

ஸ்தாபனம் செய்து



செலவை

சிக்கனம் செய்யுங்கள்

PSG அண்டு சன்ஸ், தர்ம ஸ்தாபன இண்டஸ்டிரியல்
இன்ஸ்டிடியூட், பூளமேடு, கோயமுத்தூர்.

டெலிபோன் : 100. தந்தி: "தாஸ்கௌட்"

N. தாசேகவுண்டர் & கோ.

ஏஜண்டுகள்: அண்டர்வுட் டைப்ரைட்டர், பேவர் லூபா, மெரிடின, ஒமெகா, டிஸ்ஸாட் வாட்சுகளுக்கும் மற்ற வகை கடியாரங்களுக்கும்.

மருந்து வகைகள், வைத்தியக் கருவிகள், நூதன சாமான்கள், எனமல் கண்ணடி சாமான் தினுசுகள் முதலியவைகளுக்கும் சிறந்த இடம்.

இன்னும்,

உங்கள் தேவைகளுக்கு எங்களை விசாரியுங்கள்.

N. Dasai Gownder & Co.,

CHEMISTS & DRUGGISTS,

Avanashi Road, Coimbatore

போர் வீரன் மட்டுமல்ல
அவன் குடும்பத்தாரும்

உங்கள் உதவிக்கு நன்றி செலுத்துவார்கள்.

ஆகவே

கவர்னர்

யுத்த நிதிக்கு உதவி புரியுங்கள்.

"போர் வீரர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் சகாயம் செய்யும் நிதி"

என்று குறிப்பிட்டுப் பொருளுதவி செய்யுங்கள்.

இதைவிடச் சிறந்த காரியம் வேறெதுவும் இல்லை.

யுத்த காரண கட்டிடங்களுக்கு சிமெண்ட் மதிக்கத்தக்கபடி உழைக்கிறது. இதைப்பற்றிய விபரங்களடங்கிய பரிசுரங்கள் தற்காலம் தயாராயிருக்கின்றன அவைகளில் சிமெண்டின் பலவித உபயோகங்கள் விரிவாக உள்ளன. 50 பரிசுரங்களின் லிஸ்ட் வேண்டுவோர் கூபனை பூர்த்தி செய்து அனுப்பவும்.

தி கான்கிரீட் அஸோஸியேஷன்
ஆப் இந்தியா,
199. மவுண்ட் ரோடு மதருஸ்.

தயவு செய்து எமக்கு விலை ஜாபிதாவுடன் சிமெண்டின் பலவித உபயோகங்களைப்பற்றியுள்ள பரிசுரங்களின் லிஸ்ட் அனுப்பவும்.

பெயர் ....

அட்ரஸ் ....

மலர் 2 **வசந்தம்** இதழ் 4

பொருளடக்கம்

கவிஞருக்கு ஏன் பயம்! ...	...	டி. கே. சி	
வாழ்க்கை லட்சியம் ...	...	ரா. நா	10
கோவில்க் காளை ...	...	க. லக்ஷ்மி	12
சிலப்பதிகாரம் ...	...	ஆர். கே. எஸ்	19
புத்தக ஆராய்ச்சி ...	...	... ...	24
கலைக் கோயில் ...	...	சுத்தானந்த பாரதி	25
பஞ்சாயத்து ...	...	ரா. வெங்கடாசலம்	32
மனோதர்மம் ...	...	'ரதி'	39
மனுவின் ராணி ...	...	குமாரி கிருஷ்ணா	40
இன்பக் காட்சிகள் ...	...	கே. வி	48
தர்ம சங்கடம் ...	...	பி. கோதண்டராமன்	52
கயிறறுந்த காற்றாடி ...	...	வெ. ராமராவ்	59
மன மயக்கம் ...	...	ஆர். ஷண்முகசுந்தரம்	68
திரைக்குப் பின் ...	...	ஆர். டி	73
மலர் மணம் ...	...	... ...	76

விலை 12 அணா



எமது நிகரற்ற உத்திர வாத

நல்லெண்ணெய்

உங்களது குடும்ப உபயோகத்திற்கு மிக்க மேலானது. சமையலுக்கும் ஸ்னனத்திற்கும் அனேக கனவான்களால் 30 வருஷ உபயோகத்தில் நன் மதிப்பும் நற் சாக்ஷி பத்திரங்களும் பெற்றது. ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

டிரேட்மார்க் :

A. P. ராமசாமி செட்டியார்

உத்திரவாத நல்லெண்ணெய் ஸ்டோர்ஸ் (Redg.)

புதுமார்க்கட், கோயமுத்தூர்.

R. L. சுப்பிரமணிய செட்டி, நிர்வாகஸ்தர்.

ஸ்தாபகர்.

ஜுலை 2 முதல் ஆரம்பம் ஜுலை 2

தமிழுலகப் பெண் மக்களின்
தவமகிமையே உருவான
தனி முதல் கற்புக்கரசி

அருந்ததி

பல பிரதம நகரங்களில்

செருகளத்தூர் சாமா	U. R. ஜீவரத்னம்
ஹொன்னப்ப பாகவதர்	M. R. சந்தானலக்ஷ்மி
N. S. கிருஷ்ணன்	T. A. மதுரம்
காளி N. ரத்னம்	P. S. சிவபாக்யம்
K. K. பெருமாள்	M. M. ராதாபாய்
K. R. காமாக்ஷி	J. சுசீலாதேவி

மற்றும் பல நட்சத்திரங்கள்

விபரங்களுக்கு.

மாடர்ன் தியேட்டர்ஸ் சேலம், மதுரை.

நீண்டதமி ழால் உலகை
நேமியன் அளந்தான்

—கம்பர்

கவிஞருக்கு ஏன் பயம்!

[டி. கே. சிதம்பரநாத முதலியார்]

கூறியது கூறல் என்னும் சூத்திரத்தைச் சொல்லி பயமுறுத்தியவர்கள் பலர். பயந்து போனவர்களும் பலர்.

மேல்நாட்டு ஹாஸ்ய நிபுணர் (மார்க்டுவைன்) இந்த விஷயத்தைப் பற்றி ஒரு நல்ல குறிப்புக் கொடுத்தார். அதாவது: கூறியது கூறல் என்னும் சூத்திரத்தைக் கண்டு ஆங்கிலேயர் தான் பயப்படுவார்கள். ஆனால் ஜெர்மனியர் பயப்பட மாட்டார்கள் என்று சொன்னார்.

நமக்கு நேர் அனுபவமாகத் தெரியும்: தமிழும் தமிழரும் அதற்கு பயப்படுவதில்லை என்று.

தமிழின் நயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் வேறொரு பாஷையில்க் கொஞ்சமாவது பயிற்சி இருந்திருக்க வேண்டும். ஒரு பாஷையை மாத்திரம் கற்றவனுக்கு ஒரு பாஷையுமே தெரியாது: இது நல்ல பாஷை அனுபவம் உள்ளவர் சொல்லிய சொல்.

நமக்குள் ஆங்கிலம் கற்றவர்கள் சிலராவது இருக்கிறார்கள். விஷயத்தை விளக்க இது சௌகரியமான காரியந்தான்.

தமிழில் "போய்ப் போய்ப் பார்த்தேன். காரியம் கைகூடவில்லை" என்பதிலுள்ள பாவத்தைப் பார்க்க வேணும். "போய்ப் போய்" என்று அடுக்கிச் சொல்லுவதில்த் தான் பாவம் உண்டாகிறது. "போய்ப் பார்த்தேன்" என்றால் பாவம் உண்டாவது கிடையாது. ஆங்கிலத்தை ஒட்டிப் "பல்காலும் போய்ப்

பார்த்தேன்'' என்ருலும் பாவம் இல்லை.

"நாளாக நாளாகத் தான் அவனை இனங்காண முடியும்'' என்பதில் உண்மை என்ன பாவத்தோடு வருகிறது பாருங்கள்!

"கடை கடையாய்ப் போய்ப் போய்ப் பார்த்தேன். ஒரு கஜம் துணி கிடைக்க வில்லை'' அலைந்த ஆசாமியின் அலுப்பும் கால்வலியும் அப்படியே நமக்கு வந்து விடுகின்றன.

ஆனாலும் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேணும்:

ஒரு வார்த்தையை இரண்டு தடவை சொல்லுகிறோம் நாம். ஆனல் நாம் சொல்லுகிறபடி அயல் நாட்டார் சொல்ல முடியாது. எப்படி என்று பார்க்கலாம்:

"போய்ப் போய்ப் பார்த்தேன்'' என்பதில் முதல்ப் "போயில்'' அழுத்தம் விழும். இரண்டாவதாக அதைச் சொல்லும் போது ஓசை குறைந்து விடும். குழந்தைப் பருவத்திலிருந்தே சுரத்தோடு உச்சரிக்கக் கேட்டு வந்ததால் தமிழர்கள் எல்லாரும் பாவத்தோடு உச்சரிக்க முடிகிறது. ஆங்கிலேயர் யாராவது உச்சரிக்க எத்தனித்தால் நமக்கு வேடிக்கையாகத் தான் இருக்கும்.

போய்ப் போய் என்று ஒரே சுரத்தில்ப் பேசினல் நாம் சிரிக்காமல் என்ன செய்கிறது. அயல் நாட்டாருக்கும் தமிழ் வழக்கைப் புறக்கணிக்கிற நம்மவருக்கும் கஷ்டந்தான் இதெல்லாம்.

"நாளாக நாளாக'' என்பதிலும் "கடை கடையாக'' என்பதிலும் சுர வேற்றுமை இருப்பதைக் காணலாம். தமிழ் நாட்டவரை இனங்கண்டு பிடிக்க வேண்டுமானல் மேலே சொன்ன அடுக்குத் தொடர்களைச் சொல்லச் சொன்னல்ப் போதும்.

இந்த அடுக்குத் தொடர்களின் வேகத்தையும் ரஸத்தையும் அனுபவிக்க வேண்டுமானல் குக்கிராமங்களில் உள்ளவர்களையோ பெண்டுகளையோ பேசச் செய்து கேட்க வேண்டும். பவணந்தியும் தொல்காப்பியரும் அவ்வளவாக நமக்கு உதவிபுரிந்து விடமாட்டார்கள்.

சாதாரணப் பேச்சிலேயே இவ்வளவு ரஸம். பேச்சை விட்டு விட்டு கவிக்குள்ப் புகுவோமானல் ஒரே அதிசயத்தில் முழுக வேண்டியது தான்.

ஒரு ஞானி பேசுகிருர்.

கடவுள் சொரூபத்தைக் கண்டு அனுபவிப்பது மிக அருமை. கடவுள் தத்துவத்தைக் கண்டு விட வேண்டும் என்று ஆத்திரப் பட்டவர்கள் எத்தனையோ பேர். அதற்காக அவர்கள் எங்கே எல்லாமோ போய் அலைந்து திரிந்திருக்கிருர்கள். அலைச்சலுக்குக் குறை வில்லை. கடவுள் தத்துவத்தைக் கண்டார்களோ. இதை நினைக்கும் போதுதான் மனம் இடிகிறது.

ஓடி ஓடி

ஓடி ஓடி

இந்த இரண்டு வரிகளிலும் "ஓடி" என்று நாலுதடவை வந்திருக்கிறது. ஆனால் முதல் இரண்டிலுமே வேறு பட்ட சுரங்கள். அடுத்த இரண்டிலும் தாழ்ந்த குரலில்ப் பாடவேண்டிய தனியான சுரங்கள். சுர வேற்றுமை ஏற்பட்ட காரணத்தினால் கூறியது கூறல் என்று சொல்லக் கூடாது. வேறு வேறு பாவத்தை எடுத்துக் காட்டுகிற பாங்கு என்றே சொல்ல வேண்டும். சங்கீதத்தில் பாவத்தை வேறு படுத்திக் காட்டும் சங்கதிகளோடு ஒத்துச் சொல்ல வேண்டும். இந்த முறையில்ப் பாடிப்பார்க்கலாம் செய்யுளை:

ஓடி ஓடி ஓடி ஓடி,—
உட்க லந்த சோதி யை
நாடி நாடி நாடி நாடி
நாட்க ளும்க ழிந்து போய்
வாடி வாடி வாடி வாடி
மாண்டு போன மாந்தர் கள்,-
கோடி கோடி கோடி கோடி
எண்இ றந்த கோடி யே

-*சிவவாக்கியர்.*

கவியில் பாவம் வேண்டும் என்கிறோம். உருவம் வேண்டும் என்கிறோம். சிவவாக்கியர் பட்ட ஏமாற்றத்தை நாமும் அனுபவிக்கிறோம் அல்லவா. இதைச் சாதிக்கச் செய்வது தமிழ் பாஷையின் உணர்ச்சி தத்துவமும் தமிழ்க் கவியின் அபூர்வமான உருவமுந்தான். கூறியது கூறலைக் கண்டு அஞ்சவில்லை, சிவவாக்கியர். கவிஞர் ஏன் பயப்பட வேண்டும்.



வாழ்க்கை லட்சியம்

[ரா. நா]

(1)

எங்கோ வடநாட்டிலிருந்து வந்தான். கைபார்த்துக் குறி சொல்லுகிறேன் என்முன். 'வேண்டாம்' என்று சொல்ல எனக்குத் துணிவு இல்லை. தாடியும், மீசையும், காவி வஸ்திரமுமாக அவன் அளித்த தோற்றம் அவன் கூறியதை மறுத்துச் சொல்ல முடியாதபடியிருந்தது. மேலும் பெரிய பெரிய ஆசாமிகளின் எதிர்காலத்தைக் குறிப்பாக அவன் அறிந்து கூறியதை மெச்சி அவர்கள் அத்தாட்சிப் பத்திரம் வேறு அளித்திருந்தார்கள். இது என் ஆசையைக் கிளறியது. என் கையையும் நீட்டி வைத்தேன். ஏதோ புஸ்தகத்திலிருந்து படிப்பது போல், மடமடவென்று சொல்லிக் கொண்டே போனுன். என்னென்னமோ சொன்னுன். "அவைகளெல்லாம் பலித்ததா?" என்று மாத்திரம் கேட்டு விடாதீர்கள்.

அது வேறு விஷயம். ஆனல் ஒன்று மாத்திரம் அவன் சொல்லியது எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. "உனக்கு விரோதியே கிடையாது. அப்படியாக உன் மீது கோபத்தோடு வந்தாலும் உன்னைப் பார்த்தவுடன் கோபம் மறைந்து விடும்" என்முன். இது அவனுக்கு எப்படித் தெரிந்தது? என் வாழ்க்கையிலேயே எனக்குப் பேரானந்தத்தை அளிப்பது எனக்கு விசேஷமாக விரோதிகள் இல்லாமலிருப்பதுதான். இதற்குக் காரணம் என்ன? பிறர் நோக எதுவும் பேசவோ செய்யவோ கூடாது என்னும் என் லட்சியம் தான் என்று நினைக்கிறேன். இப்படித்தான் இருக்க வேண்டும் என்று எனக்கு யாரும் உபதேசம் செய்ததில்லை. என் இளமைப் பருவத்திலிருந்து பரம சாதுக்களே என் சகாக்களாக இருந்து வந்திருக்கிமுர்கள். இந்த "சகவாச தோஷம்" தான் என்னுடைய குணத்திற்குக் காரணம் என்று எண்ணுகிறேன்.

* * *

அன்று தொட்டு இன்றுவரை இந்த லட்சியம் என் வாழ்க்கையுடன் பின்னிக் கொண்டு வந்திருக்கிறது. இந்தக் குணத்தை என் நண்பர்களிற் சிலர் குறையாகக் கொள்கிமுர்கள். நான் யாரையும் வன்மையாகத் தாக்குவதில்லை தாக்க முடியாது என்பது அவர்கள் குற்றச் சாட்டு. நான் இந்த முறையில் குற்றவாளிதான் என்று ஒப்புக் கொள்கிறேன். ஆனல் இந்த "குறை" யிருப்பது எனக்கு எவ்வித மனத்தாங்கலையும் உண்டாக்கவில்லை. என் நண்பர்களில் மாறுபட்ட அபிப்பிராயமுள்ளவர்கள் இருக்கிமுர்கள். அவர்களுடன் வாதம் செய்து அவர்களை என் கட்சிக்கு மாற்ற முயலுவதுண்டு. அந்த முயற்சி பலிக்காவிட்டால் அவர்கள்மீது குரோதமோ ஆத்திரமோ கொள்வதில்லை.

இந்த லட்சியம் என் உள்ளத்தில் இடம் பெற்றதின் விளைவாகத்தான், நம்மால் பிறர் நலமடைய வேண்டும் என்கிற எண்ணம்

உதித்தது. இந்த லட்சியத்தின் மற்றொரு பகுதி "பிறர் கையை எதிர்பார்த்து வாழலாகாது" என்பது. இவ்விரு லட்சியங்களையும் பூரணமாக அனுஷ்டிக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை. ஆசை பூர்த்தியாகிற்று என்று கேட்டு விடாதீர்கள். ஆசைப்படுவது சுலபம், அடைவது துர்லபம். முயற்சி இடைவிடாது நடந்து வருகிறது. வெற்றி பெறும் சக்தி பெருக வேண்டும், கடவுள் கண் திறக்க வேண்டும்.

பிறப்பிலிருந்தே கடவுள் பக்தியில் நம்பிக்கை உண்டு. ஆலயம் செல்லுதலுடன் இது திருப்தியடைவதில்லை. உற்சவங்களைக் கண்டு உற்சாகம் பெருகுவதில்லை. தனிமையில், உள்ளம் குவிந்து பரம் பொருளை வணங்குவதில் ஆனந்தம் ஏற்படுகிறது. இந்த வழியில் தாயுமானவரின் "பராபரக்கண்ணி"களும், ராமலிங்க சுவாமிகளின் அருட்பாவும் பேருதவியாயிருந்து வருகின்றன. சங்கீதத்தில் தேர்ச்சி பெறவில்லையே என்கிற குறை என் காலமுள்ள மட்டும் தீராது. சங்கீதம் பயின்று கச்சேரி செய்து கரகோஷம் பெற முடியாமல் போய்விட்டதே என்ற மயக்கம் கிடையாது. பரம் பொருள் வணக்கத்திற்கு, அகத் தூய்மைக்கு சங்கீதம் பெரிய சாதனமாயிருந்திருக்குமே என்பதனால்தான் அதைப்பற்றிக் குறிப்பிடுகின்றேன். கடவுள் பற்று பொதுஜன சேவைக்கு உறுதியளிக்கிறது என்பது என் துணிபு.

* * *

லட்சியம் பொது வாழ்வுக்கு மட்டும் அஸ்திவாரமல்ல. தனி வாழ்வு சிறப்புறுவதற்கும் லட்சியம் வேண்டும். மனிதன் மனம் சந்தோஷமாயிருந்தால்தான் அவனால் பிறருக்கு உபயோகம். உயிர்ச் சவமாயிருந்தால் அவனுக்குத்தான் என்ன பிரயோசனம் உலகத்தைத்தான் எப்படி உய்விக்க முடியும்? மனத்தைத் தூய்மைப்படுத்த, நெஞ்சை உறுதிப்படுத்த கலைப்பற்றுதல், இலக்கிய ஆர்வம் அவசியம். படிக்கத் தெரிந்த நாள் முதல் இலக்கியச் செல்வங்களை ஆராய்ந்து அனுபவிக்க முயன்று வருகிறேன். ஆனால் ஆசை நிறைவேறவில்லை. இன்னும் படிக்க வேண்டியது எவ்வளவிருக்கிறது? எவ்வளவோ காலம் வீணாகப் போய்விட்டதே என்று வருந்துகிறேன். நாடகம், நடனம், சங்கீதம், சிற்பம் இவைகளைத் தூரத்திலிருந்து அனுபவித்து ஆனந்தமடைந்திருக்கிறேன். அவைகளில் கலந்ததில்லை. காரணம் அதற்கேற்ற மனப் பக்குவம் இல்லை. எல்லாவற்றையும் விட பாக்கியம் இல்லை என்பதைத்தான் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்- எதற்கும் "கொடுத்து வைக்க" வேண்டாமா?

* * *

சில காலமாக எழுத்து உலகம் என்னை இழுத்திருக்கிறது. இதிலும் ஜனங்கள் மனதைக் கவரும் சக்தி வேண்டும்; அதற்குத் தக்க சொற்கள் வேண்டும். பிறர் உள்ளம் நெகிழப் பேசவேண்டும் எழுதவேண்டும் என்கிற பேரவா என்னைத் தூண்டி வருகிறது. இதில் வெற்றி பெற்றிருக்கிறேனா என்று கேட்டால் "எனக்குத் தெரியாது" என்றுதான் கூறவேண்டும். மேலும் அதற்குப் பதில் கூற வேண்டியவர்கள் நீங்கள்தான்.

என்னைப் பொறுத்தமட்டில்,

"எல்லோரும் இன்புற்றிருக்க
நினைப்பதுவே யல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே"

என்று பதில் கூறிவிட்டு உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொள்கிறேன்.



கோவில்க்காளை

க. லக்ஷ்மி

மனோகரமான காலை நேரத்தில், இயற்கையின் பொன்மேனி மலர்ச்சி பெறும்போது, பையன் வேலன் மட்டும் தாங்க முடியாத் துயரத்தால் வெந்து வெதும்பினான். நெஞ்சையடைக்கும் துக்கம் அவனை வாட்டியது. கண்ணீர் தாரை தாரையாக அவன் கன்னங்களில் வழிந்தோடிற்று. அழுது அழுது கண்கள் சிவந்து முகம் கூட வீங்கிப்போய் விட்டது.

அவன் மனதில் குடிகொண்ட சோகத்திற்குக் காரணமென்ன?

நகரத்தின் ஒரு புறத்திலிருந்த 'கவாத்து' மைதானத்தில் பெரிய ஆலமர மொன்றுண்டு. அதன் கீழ் அவன் உட்கார்ந்திருந்தான். மரத்தின் புதிய தளிர்கள் மேலே ஏறிவரும் இளஞ் சூரியனின் ஒளியை ஏந்தி மெல்லிய காற்றில் அலைந்து கொண்டிருந்தன. பட்சிகள் இன்னிசை பாடிக்கொண்டே அங்குமிங்கும் பறந்து மலர்க் கொம்புகளைக் கோதி விட்டன. அணிற் பிள்ளைகள் ஒன்றை யொன்று துறத்திக் கிளைக்குக் கிளை தாவி விளையாடுவதும் ஆனந்தமாகத் தானிருந்தது. அதோ, சற்று தூரத்தில், ரஸ்தாவின்மீது புது உலகின் ஆரவாரம், ஒன்றன்பின் ஒன்றாய் விரைந்து செல்லும் வண்டி வாகனங்களும்; மனிதக் கூட்டமும் புது விழிப்பை ஞாபக மூட்டிக் கொண்டிருந்தது. ஆகா! சமுத்திரத்தின் அலைகளாவது ஒரு சமயம் ஓயுமென்று எதிர் பார்க்கலாம் போலிருக்கிறது, ஆனால் இந்த மனித சாகரம்! இதொன்றும் அந்தப் பையன் மனத்தை மலரச் செய்யச் சக்தியற்றதாகி விட்டது. உலகக் கவலையை உணராத பாலர்களிடை இயற்கையாய் இருக்க வேண்டிய உற்சாகமும் சுறுசுறுப்பும் பனிரண்டு வயது நிரம்பப் பெறாத அந்தப் பையனிடம் காணப்படவில்லை. 'இந்த உலகம் எக்கேடோ கெட்டுப் போகட்டும்' என்று மௌனமாக இருந்தான்.

ஏனோ?

சாதாரணமாய் அவன் அவ்வளவு நேரத்திற்கெல்லாம் தன் பள்ளித் தோழர்களுடன் சேர்ந்து 'குஷாலாய்' விளையாடிக் கொண்டிருக்கவேண்டும். உண்மையில், அவன் ஒரு ஏழைப் பையனாக இருந்த போதிலும் தன் தோழர்களிடையே அவன்தான் தனித் தலைவன்! குழந்தைகளுக்குள் ஏழை பணக்காரனென்ற வித்தியாசம் ஏது? அவனில்லாவிட்டால் குழந்தை உலகமே குதூகலமின்றிப் போய்விடும். அப்படியிருந்தும்கூட அன்று, அவன் தன் சிநேகிதர்களுடன் போய்ச் சேர்ந்து கொள்வதென்பது முடியாத காரியமாய்ப் போய் விட்டது.

அப்படி நேர்ந்த அதிசயம் எதுவாக இருக்கலாம்?

அன்று பள்ளிக்கூடம் கிடையாது. சீக்கிரமாகவே சாப்பிட்டு விட்டுத் தன் தோழர்களுடன் போய்ச் சேரவேண்டுமென்று நேரத்தோடு தான் கிளம்பினான். அந்த ரஜா நாளை அவன் எவ்வளவோ ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான். முன்னதாகவே நண்பர்களுடன் என்னென்னவோ பேசி வைத்திருந்தான். பொதுவாய், பள்ளிக்கூட நாட்களில் வகுப்பு நேரத்தில் உபாத்தியாயர்கள் பாடம் சொல்லிக் கொண்டிருக்கும்போது போட்டு வைக்கும் திட்டங்கள் எல்லாவற்றையும் அடுத்துவரும் விடுமுறை நாளில் தானே பிள்ளைகள் செய்து முடிப்பது. ஆகா! என்னென்ன திட்டங்கள், மனக் கோட்டைகள்! "இயற்கையறிவு" உபாத்தியாயர் பூமியின் "ஆகர்ஷண சக்தியைப்" பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, பையன் ஊரார் மாந்தோப்பிலுள்ள மாங்காய்களுக்கு "ஜாதகம்" கணித்துக் கொண்டிருப்பான். கணக்கு உபாத்தியாயர் தொண்டையைக் கிழித்துக் கொண்டு "நேரமும் தூரமும்" கற்றுக் கொடுக்கும்போது, பையன், ஒரு மைலுக்கப்பாலுள்ள மணல் மேட்டில் நடக்கும் "சர்க்கஸ்" ஆட்டத்தை வீட்டுக்குத் தெரியாமல் போய்ப் பார்த்து விட்டு வந்து கடைத் தெருவுக்குப் போய் வந்ததாய்ச் சொல்லி தப்பித்துக் கொள்ள 'பிளான்' போட்டுக் கொண்டிருப்பான். சரித்திர வகுப்பில் சிவாஜியைப் பற்றிப் பாடம் நடந்து கொண்டிருக்கும் பொழுது, சண்டைக்காரப் பையன் சாம்புவைத் தந்திரமாய், சறுக்காம் பாறைக்கு வழுக்கி விளையாட என்று சொல்லி அழைத்துக்கொண்டுபோய் அங்கிருந்து காலை வாறி விட்டு கை தட்டிச் சிரிக்க யோசனை செய்வான். தமிழையா 'கிளாஸ்' என்றாலோ கேட்க வேண்டியதில்லை. அவர் பாட்டில் காளமேகப் புலவர் வரலாற்றைக் கண்ணை மூடிக் கொண்டே சொல்லிக் கொண்டு போவார். பையனோ, உபாத்தியாயர்கள் ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் அங்க அமைப்பு குணாதிசயம் இவற்றுக்குத்தக்கவாறு "பெயர்கள்" வைப்பதில் முனைந்து நிற்பான். இவைகளையெல்லாம் அமுலுக்குக் கொண்டு வர பிள்ளைகள் ரஜா நாளை எவ்வளவு ஆவலுடன் எதிர் பார்ப்பார்கள்!

வேலன் வீட்டை விட்டு வெளியே புறப்படும் சமயம், இரவு முழுதும் உணவும் தூக்கமுமின்றி நோயினால் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்த அவன் தாயின் பரிதாபக் குரல் அவன் காதில் விழுந்தது.

'வேலு, இந்தா, இதைக் கொண்டு போய் கடையில் ரொட்டி வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து விட்டுப்போ அப்பா!"

ஒரு கணம் மனக்கசப்புடன் வேலன் தலையைச் சொரிந்து

கொண்டான். மறு விநாடியே மனசு மாறிவிட்டது. "சரி" என்றான். பக்கத்தில் கடைகள் கிடையாது. அவள் தந்த நாலணாவை எடுத்துக் கொண்டு நகரத்திற்கு ஓடினான், சீக்கிரம் திரும்பி வந்து தன் தோழர்களிடம் போய்ச் சேரும் ஆத்திரத்தில் கடையை அடைந்ததும் ரொட்டியை அவசர அவசரமாய்க் கையில் வாங்கிக் கொண்டான். பணத்திற்காக மற்றொரு கையைச் சட்டைப் பையில் விட்டுத் துளாவினான். அவன் மனம் 'பகீர்' என்றது. ஜேபியில் போட்டிருந்த நாணயத்தைக் காணவில்லை. எங்கே போயிருக்கும்? மறந்து போய் விட்டோமோ! என்று சொக்காயிலிருந்த எல்லாப் பைகளையும் சோதித்தான். கீழே விழுந்திருக்கலாமோ என்று பதட்டத்துடன் சுற்றிலும் தரையைப் பார்த்தான். ஊஹூம்!......பணம் எங்கேயோ தவறி விட்டது. அவன் மனசு "குப்" என்றது.

"என்னப்பா, காசை எடு" என்று அவசரப் படுத்தினான் கடைக்காரன். காசு இருந்தால் தானே எடுப்பதற்கு? அப்படியே ரொட்டியைக் கடைக்காரனிடம் கொடுத்துவிட்டு, மனமொடிந்து வந்த வழியே திரும்பினான்.

ஆனால் வீட்டுக்குப் போக அவன் கால் எழவில்லை. தாயாரிடம் என்ன பதில் சொல்வது? கையில் காசின்றி, இரவெல்லாம் பட்டினியாய் இருந்து விட்டு, விடிந்ததும் பக்கத்து வீட்டுப் பெண்ணிடம் அந்த நாலணாவைக் கடனாக வாங்குமுன் தாயார் பட்ட பாடு அவன் அறியாததா? கடனாகத்தான் கேட்டாள். வைத்துக் கொள்ளவா செய்வாள். மில்லில் அண்ணனுக்குச் சம்பளம் போட்டதும் முதலில் அதைத் திரும்பக் கொடுத்து விட்டு மறு வேலை பார்க்கப் போகிறாள். முன் எத்தனையோ தடவை வாங்கிக் கொடுத்ததில்லையா? இருந்துங்கூட பக்கத்து வீட்டுக் காரிக்கு அவ்வளவு அவ நம்பிக்கை. முகத்தை மாற வைத்துக் கொண்டே அவள் கொடுத்ததானது, "இல்லை" என்று சொல்வதை விடக் கடூரமாக வல்லவா இருந்தது. அப்படி வாங்கிய பணம் காணாமல் போய் விட்டதென்றால்? உலகத்திலுள்ள பணக்காரர்களிடமுள்ள ஏராளமான பணக் குவியல்களில் ஒரு பைசாவாவது தவறிப் போகுமா? இந்த தரித்திர இருப்பிடம் தேடி ஒரே நாணயம் மாயமாய் மறைந்து விட்டது. இதற்குத்தான் "விதியின் விளையாட்டு" என்பதோ?

பாவம், இந்தத் தவறுதலுக்கு அவன் பூராவாக ஆட்டாளியல்ல. அவன் அண்ணனின் பழைய சொக்காய் ஒன்றை அவன் அன்று போட்டுக் கொண்டிருந்தான். முழங்கால் வரை வந்து நின்றது அந்தச் சொக்காய். கைகளை மணிக்கட்டுக்கு மேல் எடுத்து மடித்து விட்டிருந்தான். அந்தச் சொக்காயிலிருந்த உட்புற ஜேபியில்தான் அந்த நான்கணா நாணயத்தை மிகவும் கவனத்துடன் பத்திரப்படுத்தி வைத்தான். ஆனால் அந்த ஜேபியில் இருந்த ஓட்டையை அவன் எப்படி முன்னதாய் அறிந்து கொண்டிருக்க முடியும்? அந்த ஓட்டையே அவனைச் சதி செய்து விட்டது.

செய்வதறியாமல் வேலன் வழியிலிருந்த மைதானத்தில் உட்கார்ந்து விட்டான். தன்னையறியாமல் அழுகையும் வருத்தமும் அவனை ஆட்கொண்டு விட்டது.

பலவித எண்ணங்கள் அவனை வாட்டின. அவன் தாய் எப்படி இருக்கிறாளோ? இவ்வளவு நேரமாய்ப் போனானென்று சபிப்பாள். கடைசியில் பணத்தையும்

தொலைத்து விட்டு ரொட்டியுமில்லாமல் அவள் எதிரில் போனால் எப்படியிருக்கும்? இந்த நினைவு ஒருபுறம். மற்றொருபுறம் தன் பள்ளிக்கூடக் கூட்டாளிப் பிள்ளைகளின் நினைவு. இந்நேரத்துக்கெல்லாம் அவர்கள் எவ்வளவு 'குஷியாய்' விளையாடிக் கூத்தடிப்பார்கள்! அவன் மட்டும் அவ்விடத்தில் தன்னந் தனியனாய் நின்று ஏங்க வேண்டியதாயிற்று. இப்படி நினைக்கவும் அவன் கண்களில் வெள்ளம் போல் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது.

"வேலு,........வேலு!.........!!"

யாரோ தன்னை அழைக்கிறார்களே! யாராக இருக்கலாம்?

மைதானத்தின் எதிர்ப்புறமுள்ள ஒரு அழகிய மாளிகையின் வெளிவாயிலில் நின்று கொண்டிருந்த பெண்ணின் குரல்தான் அது. அந்த வீட்டில் அவ்வூர் சுகாதார அதிகாரி முனிரத்தினம் குடியிருந்தார். அவருடைய பெண் வல்லியே அந்தச் சிறுமி. அவளுக்கு சுமார் பதினொரு வயதிருக்கும். தூரத்தில் தன் பள்ளிக்கூட நண்பன் உட்கார்ந்திருந்ததைக் காணவும் ஆனந்தத்துடன், அவனைக் கூப்பிட்டபடி அவனை நோக்கி ஓடிவந்தாள்.

அருகில் வரவும் வல்லியின் முகம் சட்டென்று மாறிவிட்டது. வேலன் ஏன் அழுதுகொண்டிருக்கிறான்? அதுவும் அந்த இடத்தில், தன்னந்தனியாய்?

ஆச்சரியத்தால் அவள் முகம் சிவந்தது. குரல் அநுதாபத்தால் தழுதழுத்தது.

"வேலு, வேலு, நீ ஏன் அழுகிறாய்? என்னிடம் சொல்லு?" என்று பதை பதைப்புடன் கேட்டாள்.

அடடா! குழந்தைகள் மனம் எவ்வளவு தெய்விகமானது! மலைச் சாரல்களில் பாறைகளின் இடையேயிருந்து கொப்புளித்தெழும்பும் நீர் ஊற்றுக்களைப்போல அது எவ்வளவு பரிசுத்தமாகவும், களங்கமற்றும் இருக்கிறது! குழந்தைகள் நிமிஷ நேரத்திற்குள் ஒருவர் உள்ளத்தை ஒருவர் உணர்ந்து அந்தரங்க சுத்தியுடன் பழகி மகிழ்கின்றனர். நீர் ஊற்றுக்கள் சிற்றோடைகளாகிப் பெரிய நதியாக மாறித் தரைப் பரப்பில் ஓடும் பொழுதுதானே மாசு படிந்து தரையின் உவரையும் ஊர்ப்புரங்களின் அசுத்தங்களையும் வாரி அணைத்து முற்றும் மாறிப் போகிறது. இது போலவேதான் மனித உள்ளமும்!

தன் அன்புக் கேள்வியால் வேலனுடைய அழுகை முன்னையைவிட அதிகரித்ததைக் காண மனம் பொறாதவளாய், வள்ளி சொல்லுகிறாள்:

"வேலு, சும்மா அழாதே. யார் என்ன செய்தார்கள்? எங்கிட்டே சொல்ல மாட்டியா?"

அவள் மெதுவாக அவன் முகவாயைப் பிடித்து நிமிர்த்தினாள்.

வேலனும் விம்மல்களுக்கும் விக்கல்களுக்குமிடையில் நடந்ததை ஒருவாறு சொல்லி முடித்தான்.

அவர்கள் மிகவும் ஏழைகள் என்பதையும், அவன் தாய் எப்படிப் பட்ட கோபமுடையவள் என்பதையும் வல்லி நன்றாய் அறிவாள். ஐயோ, பாவம்; அவனுக்கா இப்படி நேரவேண்டும்? வேலன் எவ்வளவோ நல்லவனாயிற்றே! பள்ளிக்கூட நண்பர்கள் எல்லோரையும்விட அவன் எவ்வளவு 'தமாஷாகவும்' இருப்பவன்? எல்லோரும் அவனிடம் ஒரு தனி அன்பும் அபிமானமும் காட்டுவார்களே! மேலும் அவளிடம் அவன்

எப்பொழுதும் எவ்வளவு பிரியமாகவும் நேசமாகவும் நடந்து கொள்வான்?......அன்றொரு நாள்! வெற்றிக் கொண்டாட்ட தினத்தன்று! கொண்டாட்டத்தைப் பார்க்கப்போயிருந்தாள். கொண்டாட்டம் முடிந்து ஜனங்கள் வீடு திரும்புகையில் எதிர்பாராத வண்ணம் வல்லி கூட்டத்தில் அகப்பட்டுக் கொண்டாள். கூட வந்திருந்த பெண்களையும் காணவில்லை. தனிமையாய் எப்படி வீடுபோய்ச் சேருவது என்று தவித்துக் கொண்டிருந்த சமயம், வேலன் வந்து சேர்ந்தான் எங்கிருந்தோ. பத்திரமாய் அவளை வீட்டு வரை அழைத்துக்கொண்டு போய் விட்டு விட்டு அப்புறம் தன் வீட்டுக்குப் போனான். அந்தக் கூட்டத்தில், சாயங்காலம் இருண்டு வரும் நேரத்தில், வேறு யார் அப்படிச் செய்வார்கள்? தவிரவும், அன்று அவனுடன் சேர்ந்து வந்ததற்காக அவளை அம்மா கடிந்து கொண்டாள். பாவம், அவனால்தான் வல்லி நேரங்கழித்து வீட்டுக்கு வந்ததாய் நினைத்துக் கொண்டாள்

அவன் இல்லாவிட்டால் அப்பொழுது கூட வந்து சேர்ந்திருக்க முடியாதே. ஜனக்கூட்டத்தில் ஒண்டியாய் நின்று தத்தளிக்க வேண்டியதுதான். வேறு என்ன நேர்ந்திருக்குமோ, யார் கண்டது? இதை அம்மா அறியாமல் கோபித்தாள். அதோடு, "நீ வரவரக் கெட்டுப் போனாய், துஷ்டப் பிள்ளைகளோடும் ஏழைப் பிள்ளைகள்கூடவும் உனக்கென்ன சேத்தி? மேலே கிடக்கும் நகையைக்கூடக் கழற்றிக் கொண்டாலும் கொள்வான். கழுதை! இனி அவனுடன் சேரு, அப்புறம் சொல்லுகிறேன்" என்றெல்லாம் அதட்டினாள். அடடா! அப்படிச் சொல்லலாமா? அதெல்லாம் அவன் காதில் விழுந்திருந்தால் எப்படிப் பட்ட வருத்தம் அவன் மனதில் ஏற்பட்டிருக்கும்?

உண்மையில் தன் தாய் அவனுக்கு ஒரு பெரிய பாதகத்தையே செய்து விட்டதாக வல்லி நினைத்தாள். துஷ்டன்! அவனா துஷ்டன்? அவன் பரிந்து உதவி செய்ததற்கு இது தானா கைமாறு? ஏழை! ஏழையாய் இருந்தால் என்ன? அது ஒரு பாபமா, குற்றமாகுமா? ஐயோ! அம்மாவின் போக்கை என்னவென்பது! குணமல்லவா முக்கியம். வேலன் எவ்வளவு நல்ல குணமுள்ளவன். அது சரி......அவள் மட்டும் அவனுக்கு இந்த இக்கட்டில் உதவி செய்யக் கூடுமானால்!.........

இப்படிப் பலவித எண்ணங்கள் அப்பெண்ணின் பச்சை மனத்தில் தோன்றிக் கொண்டிருந்தன. சுளித்த புருவத்துடன் அவள் பார்வை தரையைப் பார்த்த வண்ணம் நிலைத்திருந்தது. நெற்றியில் விழுந்திருந்த மயிர்ச் சுருள் இளங் காற்றில் அசைந்து கொடுத்துக் கொண்டிருந்தது. கலைஞன், கவிஞன் கண்களில் எல்லாம் என்னவோ அபூர்வ அழகும், சிந்தனையும் தோன்றும் என்று சொல்வார்களே, அதெல்லாம் இப்போது அவள் கண்களிலும் தோன்றிக் கொண்டுதான் இருந்தது! இருண்ட மேகத்திரைகள் வானில் சஞ்சரிக்க, மங்கியும் சுடர்விட்டும் மாறி மாறிப் பிரகாசிக்கும் சூரியனைப் போல, நிமிஷத்திற்கு நிமிஷம் மாறி மாறிச் சிவந்தும் வெளுத்தும் போய்க் கொண்டிருந்த அச்சிறுமியின் வதனம், அவள் மனத்தில் எழுந்த உணர்ச்சிகளைப் பிரதிபலித்தது.

ஒரு பெரிய மேகப் படலத்திலிருந்து வெளிப்பட்டு சூரியன் அற்புதமாய்ப் பிரகாசிக்கலானான். அப்பொழுது உலகமே ஒரு 'சமாதி' யோகத்திலிருந்து எழுவதுபோல்

சுற்றிலுமுள்ள பொருள்கள் யாவும் அவன் ஒளியால் சோபை பெற்றது.

திடீரென்று வல்லியின் முகமும் மலர்ந்தது. ஆனந்த மேலீட்டால் அவள் ஒரு குதி குதித்தாள்.

"வேலு, 'தோ, ஒரு நிமிஷம் இரு. நொடிப் பொழுதில் வந்து விடுகிறேன்." என்று சொல்லி விட்டு அவன் பதிலையும் எதிர் பாராமல் வீட்டை நோக்கி ஓடினாள். வேலனுக்கு இன்னதென்று விளங்காத அவள் செய்கையால் ஏற்பட்ட ஆச்சரியம் நீங்கு முன்னலேயே, கையில் ஏதோ பச்சை வர்ணமான வஸ்துவுடன் வல்லி அவனை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தாள்.

"பார், வேலு, இதென்ன சொல்லு பாக்கலாம். உனக்குத் தெரியுமா?"

வேலுவுக்கு அது தெரியாது. பதில்ஒன்றும் சொல்லாமல்அதைப் பார்த்து விட்டு அதில் ஒரு வித நிராசையுடன் முகத்தைத் திருப்பிக்கொண்டான். அது என்ன வாய் இருந்தால்தானென்ன ? ஒரு அபூர்வ விளையாட்டுப் பொருளாக வும் இருக்கலாம். அவனுடைய அப்பொழுதைய நிலைமையில் மனம் விளையாட்டில் செல்லுமா?

வல்லி சிரித்துக்கொண்டே சொன்னாள் :

"இதோ பாரு வேலு, இது வெறும் காயிதம் இல்லே. நம்ம ஊரு கூட்டுறவு சாலே, பண்டக சாலே இல்லே, பண்டகசாலே. அங்கே குடுக்கிற போனஸ் கூபன் நாலணுவாக்கும் இது. என்னவோ ஏதோன்னு நெனேக்காதே"

வேலு அவளது முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். "இது ஏது" என்று கேட்பது போலிருந்தது அவன் பார்வை.

பிறகு வல்லி, தன்னுடைய அப்பா அந்த ஸ்டோரிலே ஒரு 'மெம்பர்' என்பதையும், போன வருஷம் சாமான் வாங்கின தொகையின் பேரிலே ஐந்து ரூபாய் போனசாகக் கிடைத்ததையும், அது இருபது நாலணுக் கூபனுக வந்ததும், தனக்கு பொம்மை வாங்க அதிலே ஒன்று அப்பாவிடமிருந்து கிடைத்ததையும், கதை போலச் சொன்னுள்.

அப்புறம், "வா, போகலாம் ரொட்டி வாங்க" என்று அவன் கையைப் பிடித்து வல்லி இழுத்தாள். இருவரும் அருகாமையிலிருந்த நகர கூட்டுறவு பண்டகசாலே கிளே ஒன்றுக்கு வேகமாகப் போய்ச் சேர்ந்தார்கள்.

கிளே டிப்போவிலிருந்தவன் கூபனைப் பெற்றுக் கொண்டு இரண்டு ரொட்டிகளும் பாக்கிக்கு 'சாக்லெட்டு'களும் கொடுத்தான்.

வீட்டில் வேலுவின் தாயார் முகம் எள்ளும் கொள்ளும் வெடிக்கிறுப்போல் சினந்திருந்தது. வேலனைக் காணவும் அவள் கோபம் உச்ச நிலையை அடைந்தது. "ஏண்டா கழுதை.........! என்று தான் அவள் ஆரம்பித்தாள்.

வல்லி, வேலுவுக்கு முன்னல் சென்று பதில் சொன்னுள். "ஐயையோ, வேலன் கடைக்குப் போகும்போது என்ன நடந்தது தெரியுமா? ஒரு பெரிய மாடு, கோவில்க் காளேயாம், அது கயிற றுந்து வந்து துறத்த ஆரம்பிச்சுது. வேலு தப்பிப் பிழைக்க அங்கு மிங்கும் ஓடினுன். அப்புறம் பார்த்தால் வைச்சிருந்த காசு எங் கேயோ விழுந்திட்டுது. நாங்க

ரண்டு பேருமா மணலையெல்லாம் பறிச்சு அதை ஒரு மட்டுக்கும் கண்டுபிடிச்சோம். அதான் இவ்வளவு நேரமாயிட்டுது. எம்மா, பாவம், ரொம்பப் பசியாய் இருப்பீங்க, சாப்பிடுங்க'' என்று பரபரப்புடன் சொல்லிக் கொண்டு போனாள்.

வேலனுடைய தாய் நம்பி விட்டாள். நேரமாய் விட்டாலும் போகிறது. பிள்ளை தப்பிப் பிழைத்து பத்திரமாய் வீடு வந்து சேர்ந்தானே!

அன்று வேலனுக்கும் வள்ளிக்கும் விளையாடப் போகக் கொடுத்து வைக்கவில்லை. ஆனால் அதை அவர்கள் பொருட்படுத்தவுமில்லை. வெகு நாள் வரை அவர்களில் யாராவது ஒருவர் ''கோவில்க் காளை''யை நினைவூட்ட வேண்டியதுதான். உடனே இருவரும் விழுந்து விழுந்து சிரிப்பார்கள்.

சிலப்பதிகாரம்

புகார்க் காண்டம்

மங்கல வாழ்த்துப் பாடல்

[சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்.]

(1—19) புகார்க் காண்டத்தில், புகார் நகரமென்னும், காவிரிப்பூம் பட்டினத்தில் நடந்த செய்திகள் சொல்லப்படுகின்றன. இந்தக் காண்டம் "மங்கல வாழ்த்துப் பாடல்" முதல் "நாடுகாண்காதை" வரை பத்து அத்தியாயங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றது. மங்கல வாழ்த்துப் பாடலில், கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமணம் நடந்ததும், அது சமயம் மகளிர் அவர்களை வாழ்த்தியதையும் பற்றிச் சொல்லப்படுகின்றது. கண்ணகி கோவலன் இவர்களுடைய பிறப்பு வளர்ப்பில் விசேஷமாகச் சொல்லத்தக்க நிகழ்ச்சிகள் ஒன்றுமே இல்லை போலும். திருமணத்திலிருந்து கதை ஆரம்பிக்கப்படுகின்றது.

நூல் ஆரம்பத்தில் கடவுள் வாழ்த்துக் கூறுவது வழக்கம். இளங்கோ அடிகள் கண் கண்ட தெய்வங்களை வாழ்த்துகிறார். சூரியன், சந்திரன், மழை — இவை எல்லா உயிர்களின் வாழ்க்கைக்கும் இன்றியமையாதவை. ஆகையால், சந்திரனைப் போற்றுவோம்; சூரியனைப் போற்றுவோம்; கரிய மேகங்களைப் போற்றுவோம் என்று ஆரம்பிக்கிறார். பின், புகார் நகரத்தைப் போற்றுவோம் என்று சொல்லுகிறார். இவைகளைப் போற்றுவதில் சோழ மன்னனின் செங்கோல் நீதியையும், வலிமையையும், அருளையும், புகழையும் வெகு அழகாக வெளிப்படுத்துகின்றார். சந்திரனுடைய இனிய குளிர்ச்சி சோழ மன்னனின் வெண்குடைக் குளிர்ச்சிபோல் மக்களைக் காப்பாற்றுகின்றது. சோழ மன்னனுடைய ஆணை ஒரு சிறிதும் தவறாமல் நடை பெறுவதுபோல், சூரியன் சிறிதேனும் தவறாமல் மேரு மலையைச் சுற்றுகின்றான். சோழ மன்னன் வேற்றுமை இல்லாமல் எல்லா மக்களுக்கும் தன் அருளை அளிப்பதுபோல், கரிய மேகம் வானத்திலிருந்து எல்லா மக்களுக்கும் மழையைத் தருகின்றது. சோழ மன்னனின் குடிப்புகழ் ஓங்க, ஓங்க அவன் தலை நகராகிய புகாரின் புகழும் பெருமையும் ஓங்கிப் பரவுகின்றன.

பொதிகை மலையையும், இமய மலையையும் போலப் புகார் நகரம் எக்காலத்திலும் அழியாமல் நிலை பெற்றிருக்குமென்று கல்வி கேள்விகளில் சிறந்த பெரியோர் சொல்லுகிறார்கள். ஏன்? இந்த மூன்று இடங்களிலும் சான்றோர் வாசம் செய்கிறார்கள். பொதிகை மலை அகத்தியருடைய இருப்பிடம். இமயமலையில் ஞானிகள் வசிக்கிறார்கள். புகார் நகரத்தில் பழங்குடிப் பெரியோர்கள் இருக்கின்றார்கள். புகார் நகரத்தின் மற்றொரு விசேஷம் என்னவென்றால், இப் பட்டினத்து மக்கள் தங்கள் நாட்டை விட்டுப் பிற நாடுகளுக்குக் குடியேற வேண்டுமென்று நினைத்ததுகூட இல்லை. நாட்டின் சிறப்பையும், அரசனின் பெருமையையும் விளக்க இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? மக்கள் தங்கள் நாட்டை விட்டுப் போவதற்கு நான்கு

முக்கிய காரணங்கள் உண்டு. பகைவர் பயம், அரசன் அநீதி, வறுமையின் கொடுமை, நோயின் துன்பம் இந்த நான்கு கஷ்டங்களையும் அறியாத நகரம் புகார் நகரம். இவ்வளவு சிறந்த நகரம் இருந்த இடமும் கூடத் தெரியாமல் அழிந்து போய் விட்டது. எக்காலத்திலும் அழியாமல் நிலை பெற்றிருக்கும் நகரம் என்று இளங்கோ அடிகள் சொன்ன வாக்கு பொய்யாகி விட்டதா? இல்லை, இல்லை. அழியாமைக்கு அடிகள் சொன்ன காரணம் என்ன? சான்றோர் வசிக்கும் இடம் என்னும் காரணம்தான். புகார் நகரத்தில் சான்றோர் குறையவும் நகரம் அழிந்து விட்டது போலும்.

திங்களைப் போற்றுதும், திங்களைப் போற்றுதும்;
கொங்கு அலர்தார்ச் சென்னி குளிர்
வெண் குடைபோன்று இவ்
அங்கண் உலகு அளித்தலான்.
ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்;
காவிரி நாடன் திகிரிபோல், பொற் கோட்டு
மேரு வலம் திரிதலான்.
மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்,
நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்,
மேல் நின்று தான் சுரத்தலான்.
பூம்புகார் போற்றுதும்; பூம்புகார் போற்றுதும்;
வீங்கு நீர் வேலி உலகிற்கு, அவன் குலத்தோடு
ஓங்கிப் பரந்து ஒழுகலான்.
ஆங்குப்,
பொதியிலாயினும், இமயமாயினும்,
பதி எழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொது அறு சிறப்பின் புகாரே யாயினும்,
நடுக்கு இன்றி நிலை இய என்பது அல்லதை
ஒடுக்கங் கூறார் — உயர்ந்தோர் உண்மையின்
முடித்த கேள்வி முழுது உணர்ந்தோரே.

பதவுரை

[திங்களைப் போற்றுதும், திங்களைப் போற்றுதும்—சந்திரனைப் போற்றுவோமாக! சந்திரனைப் போற்றுவோமாக!; கொங்கு அலர் தார்ச் சென்னி—தேன் நிறைந்த பூக்களால் தொடுத்த மாலையை உடைய சோழ மன்னனின்; குளிர் வெண் குடைபோன்று—குளிர்ச்சியான வெள்ளிய குடையைப்போல்; இவ் அம் கண் உலகு அளித்தலான்—இந்த அழகிய இடத்தையுடைய உலகைக் காப்பாற்றுதலால்.

(கொங்கு—தேன்)

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்—சூரியனைப் போற்றுவோமாக! சூரியனைப் போற்றுவோமாக!; காவிரி நாடன்—காவிரி பாயும் சோழ நாட்டின் மன்னனுடைய; திகிரிபோல்—ஆணைச் சக்கரம்போல; பொன் கோட்டுமேரு—பொன் விளையும் கொடுமுடியை

யுடைய மேரு மலையை; வலம் திரிதலான்—வலப்பக்கமாக சுற்றி வருவதால்.

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்—கரிய மேகத்தைப் போற்றுவோம்! கரிய மேகத்தைப் போற்றுவோம்!; நாம நீர் வேலி—அச்சத்தைத் தரும் கடல் நீரை வேலியாக உடைய; உலகிற்கு—இந்த உலகத்திற்கு: அவன் அளிபோல்—அந்தச் சோழ மன்னனின் அருளைப்போல; மேல் நின்று தான் சுரத்தலான்—மேலே வானத்திலிருந்து பொழிதலால்.

(நாமம்—அச்சம்; அளி—அருள்)

பூம் புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்—அழகிய காவிரிப் பூம் பட்டினத்தைப் போற்றுவோம்; வீங்கு நீர் வேலி—நிறைந்த நீரையுடைய கடலைத் தனக்கு எல்லையாக உடைய; உலகிற்கு—இந்த உலகத்தில்; அவன் குலத்தோடு—சோழ மன்னனுடைய குலத்தோடு; ஓங்கிப் பரந்து ஒழுகலான்—தானும் சேர்ந்து புகழ் பெற்று வருவதால்.

அதாவது சோழ மன்னனின் புகழ் ஓங்க, ஓங்க அவன் தலை நகராகிய காவிரிப்பூம் பட்டினத்தின் புகழும் ஓங்கியது.

வீங்கு—மிகுந்த; வீங்கு நீர்—கடல்; வேலி—எல்லை; ஆங்கு—ஆதலால்; பொதியிலாயினும்—பொதிகை மலையேயாயினும்; இமயமாயினும்—இமய மலையேயாயினும்; பதி எழு அறியா—எக்காரணத்தாலும் ஊரினின்றும் வெளியே குடியேருத; பழம் குடி கெழீஇய—பழமையான குடிமக்கள் பொருந்திய; பொது அறு சிறப்பின்—தனக்குத்தானே நிகரான சிறப்பினையுடைய; புகாரேயாயினும்—காவிரிப்பூம் பட்டினமேயாயினும்; நடுக்கு இன்றி நிலை இய—"பண்டைக்கால முதல் குறைபாடு இல்லாமல் நிலை பெற்றது"; என்பது அல்லதை—என்று சொல்லுவதல்லாமல்; உயர்ந்தோர் உண்மையின்—சான்றேர் இந்த இடங்களில் வாழுதலால்; ஒடுக்கம் கூறுர்—இவைகளுக்கு முடிவு உண்டு என்று சொல்லமாட்டார்கள்; (யாரெனில் அவர்தாம்) முடித்த கேள்வி—கேட்க வேண்டிய அறிவைத்தரும் நூல்களையெல்லாம் கேட்டு முடித்த; முழுது உணர்ந்தோர்—எல்லாவற்றையும் முற்றும் அறிந்த பெரியோர்.

அதாவது, பொதிகை மலை, இமய மலை, புகார் நகரம் இந்த மூன்று இடங்களிலும் சான்றேர் வாழுதலால், எல்லாவற்றையும் அறிந்த பெரியோர் இந்த மூன்று இடங்களுக்கும் முடிவு உண்டு என்று சொல்ல மாட்டார்கள்.]

(20—39) சோழ மன்னனுடைய தலைமைப் பட்டினமாகிய புகார் நகரம் தேவலோகத்தைப்போல் கீர்த்தியும் புகழும் பெற்ற பட்டினம். பெரிய துறைமுகம். பல தேசங்களிலிருந்தும் வியாபாரக் கப்பல்கள் வரும். அதனல் காவிரிப்பூம் பட்டினமென்ருல் எல்லாத் தேசங்களிலும் நன்ருய்த் தெரியும். இந்தப் பட்டினத்திலுள்ள செல்வர்கள் பணத்தைச் சம்பாதித்துப் புதைத்து வைத்து லோபிகள்போல் இருந்தார்களா? இல்லை. எல்லா இன்பத்தையும் அனுபவித்தார்கள். நாகலோகம் போகத்தில் சிறந்தது என்று சொல்வதுண்டு. அந்த நாகலோகத்தைப்போல் சிறந்த போகம் நிறைந்த பட்டினம் புகார். இவ்வூரில் மாநாய்கன் என்னும் வணிகன் ஒருவன். இவன் கொடையில்

கர்ணன். வானத்திலிருந்து மழை தாராளமாய்ப் பெய்வது போலிருக்கும் இவனுடைய கொடை. மானாய்கனுடைய குலத்திற்கு ஒரு பூங்கொம்புபோல் ஒரு பெண் பிறந்தாள். அவள்தான் கண்ணகி. அவளுக்கு வயது பன்னிரண்டு. வானத்திலே பொற் கொடியாய்த் தோன்றும் மின்னலைப் போன்ற மேனி படைத்தவள் கண்ணகி. அவளோ, "அழகில் திருமகள், கற்பில் அருந்ததி" என்றே எல்லோரும் போற்றினார்கள், புகழ்ந்தார்கள்.

அந்நகரத்திலே பெருங்குடிகளில் ஒன்றைச்சேர்ந்த மாசாத்துவான் என்னும் ஒரு செல்வச் சீமானும் இருந்தான். வாணிபத் தொழிலில் தான் சம்பாதித்த பெருஞ் செல்வத்தைத் தான் மட்டும் அனுபவிப்பதல்லாமல், பிறருக்கும் தாராளமாய் பொருளை இவன் கொடுத்தான். இப்பேர்ப்பட்ட கருணை உள்ளம் படைத்தவனுடைய மகன்தான் கோவலன். பதினாறு வயதை அடைந்த வாலிபன். சிறு வயதிலேயே பெரும் புகழைச் சம்பாதித்தவன். கோவலனுடைய அழகைக் கண்டு மயங்கிய பெண்கள், "இவன் கண் கண்ட முருகன்" என்று தங்கள் தோழியர் கூட்டத்தில் இவனைப் புகழ்ந்து பேசுவார்கள்.

அதனால்,
நாக நீள் நகரொடு, நாக நாடதனொடு,
போக நீள் புகழ்மன்னும் புகார் நகர் அது தன்னில்,
மாகவான் நிகர்வண்கை மாநாய்கன் குலக் கொம்பர் ;
ஈகைவான் கொடி அன்னாள் ; ஈராறு ஆண்டு அகவையாள் ;
அவளுந்தான்,
போதில் ஆர் திருவினாள் புகழ் உடை வடிவு என்றும்,
தீது இலா வடமீனின் திறம் இவள் திறம் என்றும்,
மாதரார் தொழுது ஏத்த வயங்கிய பெருங் குணத்துக்
காதலாள் ; பெயர், மன்னும் கண்ணகி என்பாள் மன்னோ.
ஆங்குப்,
பெரு நிலம் முழுது ஆளும் பெருமகன் தலை வைத்த
ஒரு தனிக் குடிகளோடு உயர்ந்து ஓங்கு செல்வத்தான் ;
வரு நிதி பிறர்க்கு ஆர்த்தும் மாசாத்துவான் என்பான் ;
இருநிதிக் கிழவன் மகன், ஈரெட்டு ஆண்டு அகவையான் ;
அவனும்தான்,
மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
"கண்டு ஏத்தும் செவ்வேள்" என்று இசை போக்கிக் காதலான்
கொண்டு ஏத்தும் கிழமையான் கோவலன் என்பான் மன்னோ.

பதவுரை

[அதனால்—இந்தச் சிறப்புகளையெல்லாம் உடையதானதால்; நாக நீள் நகரொடு—விண்ணுலகத்தோடும்; நாக நாடதனொடு—நாக லோகத்தோடும்; போகம் நீள் புகழ் மன்னும்—ஒத்த இன்பங்கள் நிறைந்து

புகழ் நிலை பெற்ற; புகார் நகர் அது தன்னில்—; மாகவான் நிகர்—வானத்தில் உள்ள மழையை ஒத்த; வண்கை மாநாய்கன்—வண்மை பொருந்திய கையை உடைய மாநாய்கன் என்பவனுக்கு; குலக் கொம்பர்—அவன் குலத்திற்கு ஒரு பூங்கொம்பு போலவும்; ஈகைவான் கொடி அன்னாள்—பொன் நிறமாய் வானத்தில் கொடியாக விழுகின்ற மின்னலைப் போலவும் உள்ளவள்; ஈராறு ஆண்டு அகவையாள்—பன்னிரண்டு ஆண்டுகளுக்கு உட்பட்ட வயதினள்; அவளும்தான்—; போதில் ஆர் திருவினாள்—மலரில் வாழும் திருமகளுடைய; புகழ் உடை வடிவு என்றும்—புகழ் நிறைந்த வடிவு இவள் வடிவுபோல் இருக்குமென்றும்; தீது இலா வடமீனின்—குற்றம் இல்லாத அருந்ததியின்; திறம்—கற்பு; இவள் திறம் என்றும்—இவள் கற்பை ஒக்கும் என்றும்; மாதரார் தொழுது ஏத்த—மகளிர் எல்லோரும் போற்றிப் புகழும்படியாக; வயங்கிய பெருங் குணத்து—விளங்குகின்ற உயர்ந்த குணங்களை; காதலாள்—விரும்பும் தன்மையை உடையவள்; பெயர் மன்னும் கண்ணகி என்பாள்—அவள் கண்ணகி என்று பெயர் கூறப்படுவாள்.

ஆங்கு—அந்த நகரத்திலேயே; பெரு நிலம் முழுது ஆளும்—உலகம் முழுமையும் ஆளுகின்ற; பெருமகன் தலைவைத்த—அரசனாகிய சோழமன்னனை முதலாகவுடைய; ஒரு தனிக் குடிகளோடு—ஒப்பற்ற பெருங் குடிகளில்; உயர்ந்து ஓங்கு செல்வத்தான்—செழித்து வளர்ந்த செல்வத்தையுடையவன்; வரு நிதி பிறர்க்கு ஆர்த்தும்—தான் திரட்டுகின்ற பொருளைத் தான் மட்டும் அனுபவிக்காமல் ஏழைகளுக்கும் கொடுத்து உதவுகின்ற; மாசாத்துவான் என்பான்—மாசாத்துவன் என்னும் பெயரை உடையவனாகிய; இருநிதிக் கிழவன் மகன்—பெரும் செல்வம் நிறைந்தவனுடைய மகன்; ஈரெட்டு ஆண்டு அகவையான்—பதினாறு வருஷங்களுக்கு உட்பட்ட வயதினன்; அவனும்தான்—அவன்தான்; மண் தேய்த்த புகழினான்—மண்ணுலகம் சிறுகும்படி அவ்வளவு வளர்ந்த புகழையுடையவன்; மதிமுக மடவார்—நிலாப் போலும் அழகிய முகத்தையுடைய மகளிர்; தம் பண் தேய்த்த மொழியினர் ஆயத்து—இசையையும் பழிக்கும் அவ்வளவு இனிய மொழிகளைப் பேசும் தமது தோழிகளின் கூட்டத்தில்; பாராட்டி—; கண்டு ஏத்தும் செவ்வேள் என்று—கண்ணால் பார்த்துப் புகழப்படுகின்ற முருகனே என்று சொல்லி; இசை போக்கி—எங்கும் அவன் புகழைப் பரப்பி; காதலால் கொண்டு ஏத்தும்—காதலுடன் மிகப் புகழப் படுகின்ற; கிழமையான்—புகழ்ச்சிக்கு உரியவன்; கோவலன் என்பான்—அவன் கோவலன் என்று பெயர் சொல்லப்படுகிறவன்.

ஆயம்—தோழியர் கூட்டம்; மன்னோ என்பது மன் ஓ என்ற இரண்டு சொற்களால் ஆனது. இரண்டும் பொருள் இல்லாமல், இசையை நிறைக்க வந்த அசைச் சொற்கள்.]



[குண்டலகேசி அகவல்: யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார். பிரசுரம்: அன்பு நிலையம். இராமச்சந்திரபுரம், விலை அணா-4.]

குண்டலகேசி ஐம் பெருங் காப்பியங்களில் ஒன்று. அது மறைந்து விட்டது. அதிலடங்கிய கதையை அற்புதமான அகவலாகத் தமிழ் உலகுக்குத் தந்திருக்கிறார் யோகி சுத்தானந்தர்.

சுத்தானந்தருடைய கனிந்த தூய இதயத்திலிருந்து மலர்ந்த கவிதைச் சுவையை அனுபவித்துப் பாருங்கள். இரண்டொரு அடிகளைக் கீழே தருகிறோம்.

கல்வியும் வாணிகச் செல்வமுஞ் செழித்து
வாழ்ந்தான் இசை பெறு வாணிக மணியே.
அன்னவன் பெற்ற மின்னிடை யன்னம்,
மதிவளர் முகத்தாள்; மலர்தரு விழியாள்;
அமுதம் பொழியும் குமுத வாயாள்;
புயலும் புகையும் போலச் சுருண்ட
கூந்தல் அழகி; குண்டலகேசி
என்னும் * பத்திரை, பதுமினி,
சித்திரத் தெழு தோணுத் திருவுடை மாதே!

[* இதுவே, அவள் இயற்பெயர்]

சுவாமிகள் வழக்கம் போல் அருமையாகக் கதையை இனிய பாடல்களில் அமைத்துத் தந்திருக்கிறார். இப்பேர்ப்பட்ட அரிய முயற்சிகளைக் கண்டு, நாடு பெருமை கொள்ள வேண்டும். பயன் பெற வேண்டும். நாம் விரும்புவதும் அதுவே.

[நீதி நெறி விளக்கம்: மூலமும் உரைவளமும்: திரு. காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை அவர்கள் தொகுத்தது. விலை அணா-8.]

சாதாரண தமிழ் மக்கள் எளிதில் படிக்கக்கூடிய விதத்தில் உரையுடனும் ஆராய்ச்சியுடனும், தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிடுவது தமிழ் மொழி வளர்ச்சிக்குச் செய்யப்படும் பெரிய தொண்டாகும். நீதி நெறி விளக்கம் என்னும் அருமையான நூலை கண்ணுசாமி பிள்ளை அவர்கள் பதிப்பித்திருக்கும் முறையை மிகவும் பாராட்டுகின்றோம்.

ஒவ்வொரு செய்யுளுக்கும் செய்யுளின் சொற்களை யொட்டி தெளிவான பதவுரையும், செய்யுளின் கருத்துரையும், ஒத்த கருத்துடைய மேற்கோள்களும், சொற்றொடர்களைப் பிரித்திருக்கும் விதமும் — இவையெல்லாம் சேர்ந்து ரொம்ப அழகாகவும், எளிதாகவும் இருக்கின்றன. செய்யுள்களுக்குப் பலர் எழுதிய ஆங்கில மொழி பெயர்ப்பும் கொடுக்கப் பட்டிருக்கின்றது. குமர குருபர அடிகளால் செய்யப்பட்ட 'நீதிநெறிவிளக்கம்' திருக்குறளைப் போன்ற பெரிய நீதிநூல்களில் ஒன்று.

இந்த அழகிய பதிப்பைத் தமிழ் உலகத்திற்குக் கொடுத்தவர் தருமபுர ஆதீனத்தில் இப்போது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆவர். இப்பெரியார் கால நிலையை ஒட்டி, தமிழுக்குச் செய்யும் உதவி அருமையானது. தமிழ் நாட்டிலுள்ள பெரிய சைவ மடங்களுக்குத் தலைவர்களாயிருக்கும் பெரியோர்கள் இவ்விதமாகத் தமிழ் வளர்ச்சிக்கு உதவி புரிய முன் வருவார்களென்று நம்புகின்றோம்.

கலைக் கோயில்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

சவுந்தர பாண்டியன் காலத்திலே தான் தனவணிகர் சோழ நாட்டிலிருந்து மதுரையில் குடியேறினர். வைகைக்கு வடக்கு, பிரான்மலைக்குக் கிழக்கு, வெள்ளாற்றிற்குத் தெற்கிலுள்ள நாட்டில் இவர்கள் குடியேறி வசித்தனர். இவர்கள் தரையிலும் துறையிலும் பல வகை வாணிபங்கள் செய்தனர். சுமார் 250 ஆண்டுகளுக்கு இப்புறந்தான் வட்டித்தொழில் செய்தனர். இவர்கள் 96 ஊர்களில் குடியேறியதால் **தொண்ணூற்றாறு கூட்டம்** எனப்பெற்றனர். ஆனால் இப்போது 73-ஊர்களிலே இவர்கள் சிறப்பாயிருக்கிறார்கள். தொண்ணூற்றாறு கூட்டம் **கோயிலூரில்** கூடித் தீர்மானித்த விதிகளையே இவர்கள் அனுட்டித்தனர். எந்தப் புதிய சீர்திருத்தம் செய்யவேண்டுமானாலும் தொண்ணூற்றாறு கூட்டம் நாட்டார் சம்மதித்தாலே இயலும். இவர்கள் ஒன்பது கோயில்களில் சிவனை வழிபட்டனர்.

(1) மாற்றூர் பெரிய நாயகி கோயில்

(2) இளையாற்றங்குடி நித்ய கல்யாணி கோயில்

(3) வைரவன் கோயில்

(4) பிள்ளையார்பட்டி திருவீசர் கோயில்

(5) இரணியூர் ஆள்கொண்டநாதர் கோயில்

(6) நேமம் சௌந்தரநாயகி கோயில்

(7) இலுப்பைக்குடி தான் தோன்றி நாதர் கோயில்

(8) வேலங்குடி காமாக்ஷி கோயில்

(9) சூறைக்குடி ஆவுடைநாயகி கோயில்

இக்கோயில்களைக் கட்டப் பாண்டிய மன்னரும் துணை செய்தனர். இந்த ஒன்பது கோயிலாரும் 23 உட்பிரிவாகப் பிரிந்தனர். கொள்வது கொடுப்பதில் வகுப்பு வேறுபாடுகள் உண்டு. தனவணிகர் பெரும்பாலும் கொண்டு விற்கக் கடல் கடந்து செல்வதால் வீட்டில் பெண்கள் சிறுவர், முதலியவர்களே இருப்பர். இவர்கள் பொருளும், இலங்கை பர்மா மலேயா நாடுகளில் கோடிக் கணக்காக முடங்கிக் கிடக்கின்றன.

ஆனால் இங்கே தமிழ்நாட்டில் அங்குமிங்கும் வட்டிக் கடைகளே காண்கின்றன. தமிழ் வணிகர் பணம் தமிழகத்தைச் செழிப்புறுத்தாமல் பிறநாடுகளிற் சுழன்றுகொண்டிருந்தது. இலங்கையில் மட்டும் பத்துக்கோடி ரூபாய் சுற்றிக்கொண்டிருக்கிறது. பர்மாவை

பசுவளங் குலுங்கச் செய்தது தனவணிகர் பணமே. ஆயினு மென்ன? பிறநாடுகளில் அவர்கள் அன்னியர்களே! சுதேசிகள் கண்ணில் இந்த அன்னிய வணிகர் உறுத்திக் கொண்டேயிருந்தனர்.

தனவணிகர் செல்வம், பணங் காய்ச்சி மரத்தை எளிதாக உலுப்பி வந்ததன்று. அவர்கள் படும்பாடு, உழைக்கும் உழைப்பு, செய்யும் தியாகம் மிகப்பெரிது. இளம் மனைவிகளை பிரிந்து, ஆண்டுக்கணக்காக அவர்கள் தொலைநாடுகளில் வசிக்கின்றனர். அங்கே இரவு பகலாகப் பாடு பட்டுக் காசுகாசா கணக்கிட்டுச் சேர்த்து ஒருதொகையைக் கொண்டு வருகின்றனர். அதற்குள் இங்கே மனைவி மக்கள் படும் கவலை கொஞ்சமன்று. அக்காலப் பெண்களுக்குக் கல்வியில்லை. நூல் நூற்பது தடுக்கு ஓலைப்பெட்டி பின்னுவது முதலிய சிறு தொழில்களைச் செய்வது மீதி நேரமெல்லாம் குடும்ப விவகாரம் நடக்கும். குடும்பச்சண்டை சச்சரவுகளுக்குக் குறைவில்லை. பெண்கள் "ஆத்தாவீட்டில்" அடிக்கடி சென்றிருப்பர்.

தங்கள் காசு பணங்களைச் சந்தை வட்டிக்குத் தந்து வளர்ப்பர். உறவும் பணமும் பார்த்து ஈடின்றி சிறு பையன்களுக்குப் பெரிய பெண்களைக் கட்டுவதுண்டு! அந்த பையனும் கப்பலேறிக்கொண்டு விற்கச் சென்றுவிடுவான். இங்கே இளம் பெண்கள் படுந்துயரம் அவர்களுக்கே தெரியும். இவர்களாவது பரவாயில்லை; இளங்கைப் பெண்கள் பாடு மிகத்திண்டாட்டம். வெள்ளைப்புடவை ஆசையை வெளுக்காது, உள்ளே வயதுக்குரிய கவலைகள் குடைந்து கொண்டிருக்கும். கல்வி, கலைப் பயிற்சியிருந்தாலாவது நல்ல பொழுது போகும்! அதுவுமில்லை. பொதுவாகத் தமிழர் கூட்டமே காலக் கேட்டால் பல தீமைகள் படர்ந்து வளங்குன்றியிருந்தது.

இந்நிலையை மாற்ற முதன் முதல் முயன்றவர் சுப்பையா செட்டியாரே. சுப்பையா செட்டியார் நல்ல கேள்வியறிவுடையவர். தமிழிலும் சைவத்திலும் பற்றுதலுடையவர். தமது சமுதாய நிலையைக் கண்டிரங்கிச் சீர்திருத்தம் செய்யமுயன்றவர். அவரது முதல் தாரம் அழகம்மை ஆச்சி அண்ணாமலையை ஈன்று மாண்டாள். அழகம்மை மதுரையில் பிரபலமான மெ. சித முரு. குடும்பத்தைச் சேர்ந்தவள். அண்ணாமலை நன்றாகப் படித்து அறிவாளியாகிக் குலத்தொழிலாகிய வாணிகமும் நடத்தினான். இராமநாதபுரத்திலிருந்த சுப. கடை அவனாலேதான் முன்னுக்கு வந்தது. சுப்பையா செட்டியார் அதில் அவனுக்கே சர்வாதிகாரமும் தந்தார். சுப்பையா செட்டியார் மாற்றூர் பெரியநாயகி கோயிலில் வணங்கும் நகரக்கூட்டத்தைச் சேர்ந்தவர். இந்தக் கோயில் கட்டுப்பாடுகளை உடைக்கவே அவர் பிள்ளையார்பட்டிக் கோயிலைச் சேர்ந்த வள்ளிஆச்சியை இரண்டாந்தாரமாகக்கொண்டார் வள்ளி ஆச்சிக்கு விசாலாட்சி பெண்குழந்தை, முத்தையா ஆண் குழந்தை; சுப்பையா செட்டியார் இருவருக்கும் போதிய கல்வியளித்தார். முதன் முதல் பெண்ணைப் பள்ளிக் கூடத்திற்கனுப்பியது அவரே. அதுமட்டுமன்று, "வினைத் தெரியுமுன் என் விசாலாட்சிக்குக் கலியாணம் செய்யமாட்டேன்" என்று பிடிவாதமாயிருந்தார். அதனால் அவருக்கு வந்த எதிர்ப்புகள் பல. உறவின் முறையார் அவரை ஒதுக்கி வைத்தனர். இடித்துரைத்தனர். புறம்பேசினர். பதினாறு வயது மட்டும் கன்னியாகவே கல்வி பயின்றாள், இசைப்பயிற்சியும் பெற்றாள். அரண்மனையில் நடக்கும் கதை கச்சேரிகளுக்குத்

தந்தை அவளை அழைத்துச் சென்றார். மற்றொரு புதுமை தமிழிசை பயிற்றினர். விசாலாட்சி பண்ணுடன் தமிழ்ப்பாடல்களை இனிமையாகப் பாடுவாள். அண்ணாமலைக்கு விசாலாட்சியிடம் அன்பதிகம், இருவரும் முற்போக்கான கொள்கையுடையவர்கள்.

சுப்பையா செட்டியாருக்குக் கலைவளர்ச்சியில் ஆர்வமதிகம். முதன்மையாகத் தமிழ்க்கவி இசை கூத்து, ஓவியம், சிற்பம், தமிழர் அருட்கலை இவற்றை வளர்க்க அவர் பேரார்வங் கொண்டார். ஊருக்கு வரும் எந்தக் கலைவாணரும் அவரைப் பார்த்துப் பேசி அவரது கலையார்வத்தை மெச்சிச் செல்வதுண்டு. ஒருநாள் கவிஞர்சரி பாரதிகள் அவருடன் பேசும் போது "இதுகாறும் செட்டியார் கற்கோயில் கட்டிவந்தனர். தாங்கள் கலைக்கோயில் கட்டவேண்டும். இப்போது சத்திரம் கட்டி அன்ன தானம் செய்வதுபோல் கலைக்கோயில் கட்டி ஞானதானம் செய்யவேண்டும்" என்றார். கலைக்கோயில் என்ற அச்சொல் செட்டியாரைப் பற்றிக் கொண்டது. மதுரையில் ஒரு பெரிய கலைக்கோயில் கட்டி அதில் தமிழருக்கு எல்லாக்கலைகளும் கற்றுத்தரவேண்டும் என்று அவர் கனவு கண்டு கொண்டிருந்தார்.

அவருக்குத்தகுந்த மாப்பிள்ளையாக சிவநேசம் அமைந்தார். சிவநேசம் கலைப்பித்தரில்லை; என்றாலும் மாமனார் சொல்லை தேவவாக்காகக் கொண்டவர். அவரும் விசாலாட்சியும் மனமொத்து இல்லறம் நடத்தினர், இரண்டு குழந்தைகளையும் பெற்றனர். "விசாலாட்சி, நான் திருத்தலம் சுற்றி வந்து கலைக்கோயில் கட்டுவேன், அதற்குள் சிவனடி சேர்ந்துவிட்டால் உன் மகனைக் கலைக்கோயில் கட்டச்சொல்லு" என்று சொல்லி சுப்பையா செட்டியார் யாத்திரை சென்றார். திருக்காளத்தியில் அவர் காலஞ்சென்றார். விசாலாட்சிக்கு தன் கடைக்குட்டி இராமனாதனிடந்தான் பிரியம் அதிகம். ஆதலால் தந்தை தனக்குச் சொன்னதை மகனுக்குச் சொல்லிச் சென்றாள். கலைக்கோயில் அவள் உள்ளத்திலும் உருக்கொண்டிருந்தது. அவ்வுருவே தமிழ்மணி இராமநாதன் உள்ளமானது.

அன்று முதல் இராமனாதன் மனக்கோயில் கட்டிவந்தான். அவன் இளமனத்தில் ஒரு பெரிய மாளிகை எழுந்தது; அதில் புலவரும் மாணவ மாணவிகளும் குடிகொண்டனர். தமிழிசையும், கூத்தும், காவியமும், ஓவியமும், சிற்பமும் காலத்திற்கேற்ற கணக்கற்ற தொழில் முயற்சிகளும் சுறுசுறுப்பாக நடந்தன; விவேகானந்த வடிவும் வாழ்வும் அவருக்குச் சேதுபதி நாட்டிய வெற்றித்தூணும் அவன் முன் கம்பீரமாக நின்றன, இந்த மனக்கோயில் கண்ணுக்கு மெய்யாக உலகில் உருவாகவேண்டும். அதற்குத் தானே ஒரு கலைக் கோயிலாக வேண்டும். பிறகு எண்ணம் நிறைவேறப் பொருளீட்ட வேண்டும். இவையே அவன் நினைப்பு. ஆனால் மனித நினைப்பெல்லாம் எளிதில் செயலாகின்றனவா? வாழ்க்கைப் போரில் எத்தனையோ வாள் வீச்சிற்குப் பிறகே வெற்றிமுரசு கேட்கிறது.

காளிசொரூபம்

ஊடல் கூடல், நல்லது பொல்லது, இன்பம் துன்பம், உறவு, பகை இந்த இரு விகாரநாடகமே குடும்பம். விசாலாட்சியின் மறைவு, சிவநேசர் குடும்பத்தில் பெரிய மாறுதலை உண்டு பண்ணி விட்டது. மனைவியைப்பிரிந்த சிவநேசர் உள்ளம் உடைந்துபோனது அத்துடன் பர்மாவில் பலமான விவகாரம்; வெள்ளையன் அழிச்சாட்டம். இராமனாதபுரம்

கடையின் ஊழல் எல்லாம் சேர்ந்து அவர் வாழ்வைக் கவலைக் காடாக்கின. அத்துடன் தனக்கு இதுகாறும் உதவியாயிருந்த முத்தையாவின் மாறுதலும், அண்ணமலை வீட்டார் போக்கும் அவர் அமைதியைத் தகர்த்தன. உள்ளும் புறமும் புயல்: இப்புயல் இராமனுதனையும் பலமாகச் சோதித்தது. தந்தை அவனை பர்மாவிற்கு வரும்படி தந்தியனுப்பினர்; தமிழ்மணி திகைத்து நின்றுன். கேளுங்கள் கதையை.

அவன் இப்போது அண்ணமலை வீட்டிலேதான் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அண்ணமலை அவன்மேல் பிரியம் வைத்திருந்தான். அதற்குக் காரணம் இராமனுதன் தமிழ்மணி யாயிருப்பது மட்டுமன்று, மற்றெரு ஆசைதான் அதற்குக் காரணம். உலகில் சுயநலமில்லாத அன்பேது? கேளுங்கள்.

அண்ணமலை மனைவி காளிஆச்சி சாக்ஷாத் பத்ரகாளிசொரூபந்தான். அண்ணமலை, வீட்டுததிண்ணையிலிருந்து சீர்திருத்தம் பேசுவான்; உள்ளே போனல் அவனைத்தான் அவள் சீர்திருத்துவாள். அவள் போடு உக்கி என்ருல் "எண்ணிக் கொள்" என்பான் அண்ணமலை. இன்றேல் தான் வீரப்பசெட்டிக்குப் பிறந்தது பூப்போல் வளர்ந்தது முதல், இந்த இழவு வீட்டில் வந்து இப்படிப் பாடுபடுவது வரையில் கட்டுக்கதையைச் சுருள் சுருளாக அவிழ்த்துப் புயலாகச் சீறுவாள். சாலாச்சிக் (விசாலாட்சி) கும் அவளுக்கும் பசுவுக்கும் புலிக்கும்உள்ளதைவிட ஒரு பங்கு அதிகமாகவே நேசமுண்டு. "மீனுட்சி, உனக்குக் கண்ணிருந்தா அவளை நோக்காடு கொண்டு போகணும்!" என்று காளி மண்ணை வாரித் தூற்றிக்கொண்டிருந்தாள். விசாலாட்சி இறந்தது காளி மனம் குளிர்ந்தது. மீனுட்சிக்கு அபிஷேகத்துடன் அவள் நன்றி தெரிவித்தாள். அடுத்தபடி அவள் தீவிழிகள் தமிழ்மணி பக்கம் திரும்பியது. அண்ணமலைக்கும் காளிக்கும் ஒரு மகன் சோக்கஞ் செட்டி, செல்லமாக வளர்ந்தவன்; இணக்கம் என்பதே அறியாத முரடன். வயது இருபது; இன்னும் ஒருவேலைக்கு லாயக்கில்லை; ஏதாயினும் வேலை தந்தால் அது உருப்படாது. "சொக்கு, இந்தா பத்து ரூபாய் கடைக்குப்போய் இந்தப் பட்டியல்படி வாரச்சாமான் வாங்கிவா" என்று அண்ணமலை அனுப்புவர்ன். சொக்கு தனது ஜமாவுடன் தமாஷாக ஊர்சுற்றி பணத்தைக் காப்பிக்கடையிலும் கிப்பிக்கடையிலும் வாரித்தந்து "அப்பா இன்று மோகினிவிலாசில் ஹல்வாவும், ஜிலேபியும், சேமியாவும் வெகு ருசி, ஹேவ்!" என்று வந்து வயிற்றைத் தடவுவான். அண்ணமலைக்குக் கோபம்வரும். "அடதடிப்பயலே சாமானெங்கே, பணமெங்கே" என்று சீறுவான். "எல்லாம் எங்கே? வயிற்றுக்குள்ளே ஹஹஹ!" என்று அசட்டுச் சிரிப்புச் சிரிப்பான்.

"அட சண்டாளா, தண்டத் தடியா! உன்னை இதற்கா பெற்றேன்? என்வாயில் மண்ணைப்போடவா வந்தாய்? அடப்பாவி! பத்து ரூபாயைச் சூறையாடி வந்து விட்டாயே! காளியாத்தா பார் உன் மகன் லட்சணத்தை" என்பான் அண்ணமலை. காளி சமயலறையில் குழம்பு கலக்கிய அகப்பையுடன் வருவாள். உடனே ஒரு எரிமலை கிளம்பும். "என் மவனைச் சொல்லாட்டி உங்களுக்குப் பொழுது போகாதே என் மவனுக்கென்ன? ராசா கணக்காட்ட இருக்கான். அந்தப்பட்டுவான் (ராமனுதன்) போல சும்மா புத்தகத்திலேயே நாண்டுகொண்டு உயிர் விடச் சொல்லுறீங்களாக்கும்? என் ராசா நாலு பேரோடே

கலகலப்பாயிருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையாக்கும்......" என காளி தொண்டை கிழியும். "அம்மா பசித்தது, ஹல்வா வாங்கி சாப்பிட்டேன். அப்புச்சி கோவிக்கிறுர்" என்று சொக்கு தூபம் போடுவான். நல்லாச்சாப்பிடுடா துரையே" என்பாள் காளி.

"அடியே கடைச்சாமான் வாங்கத் தந்த பத்து ரூபாயைச் சாப்பிட்டுவிட்டானே இதுநியாயமா?" என்பான் அண்ணுமலை. "அதனுலென்ன? நமது பிள்ளைதானே சாப்பிட்டது; இன்னெரு பத்து ரூபாய் முனியாண்டியிடம் தந்தால் சாமான் வந்துவிடுகிறது. இதற்காகப் பிள்ளைமேல் 'சள்புள்' என்று விழுவானேன்?" என்று கூச்சலிடுவாள் காளி. "போதுமடீ ஆத்தா, அடக்கு தொண்டையை; போ உள்ளே" என்பான் அண்ணுமலை. "அடக்கமும் ஒழுக்கமும் அவரவருக்கு இருக்கவேண்டும்" என்று காளி தீக்கோழி—நடை போட்டு உள்ளே செல்வாள். சொக்குவும் அவள் பின்னே செல்வான். பாவம் அண்ணுமலை தானே சென்று சாமான் வாங்கிவருவான். சொக்கு நான்கு வகுப்புப் படித்தான்; அதற்குள் உபாத்தியாயர் பாடு வெகு திண்டாட்டமாய்விட்டது; "எனக்கு சொத்தில்லையா? படிப்பெதற்கு?" என்று வீட்டுக்கு வந்துவிட்டான். சொக்குவைப் பெட்டியடியில் போட்டார் தந்தை; முறுக்கு சீடை மென்றுகொண்டே ஒருமாதம் தூங்கிவிழுந்தான். பிறகு அதுவும் ராசியில்லையென்று விட்டுவிட்டான். ஆள்மட்டும் குறுக்கும் நெடுக்கும் தொந்திதள்ளி வளர்ந்துவிட்டான். "படி" யென்ருல் "அடி" என்று கிளம்ப இப்போது அவன் தயார். அவனுக்கும் இராமனுதனுக்கும் எழாம் பொருத்தம் என்பது சொல்லவேண்டியதில்லை. இராமனுதன் படித்ததும் தமிழ்மணியானதும் அவனுக்கு வயிற்றெரிச்சல்; காளியாத்தாளுக்குக் கடுகடுப்பு. "எனக்குப் பிறகு பிறந்த அம்[illegible]ப்பயல் என் தோளுக்குக்கூட வரமாட்டான், இவன் தமிழ்மணியாம்; ஒரு குத்து விட்டால் குப்புற விழுவான்" என்பான் மகன். "என் ராசா உனக்கேன் புத்தகச்சனி? உன்னப்பன் லட்சமாக வைத்திருக்கிறுன்" என்பாள் காளி.

சொக்கு இராமனுதனைக் கேலி செய்வான். புத்தகப்பூச்சி என்பான். அவன் படிக்கும் அரிய நூல்களை எடுத்து ஒளிப்பான், அவற்றில் வசையெழுதுவான்; தூங்கும்போது இராமனுதன் முகத்தில் வண்டிக் கீலால் மீசை போடுவான்; எழுந்ததும் கண்ணுடி பார் என்று சிரிப்பான். இராமனுதன் அரிய பாடல்களைப் பாடும்போது இவன் கழுதைத் தொண்டையைக் கிளப்பி அவனைக் கட்டிக்கொண்டு ஒப்பாரி வைப்பான். புத்தி சொன்ஞல் ஒரு கை பார்த்து விடுவான். இவன் தொல்லையால் இராமனுதன் வீட்டில் தங்காமல் தனியிடங்களுக்கோ நண்பர் வீட்டிற்கோ சென்றிருப்பான்.

காளியாத்தாள் மகள் அழகம்மை இப்போது பதின்மூன்று வயதுப் பெண். தாயை வர்ணித்தபிறகு மகளை வர்ணிக்கவேண்டியதில்லை. தாயைவிடப் பெண் அழகுதான்; மாநிறம் மூக்கும் முழியும் செதுக்கிய சிற்பம் போல் அமைந்தன. ஆனல் குரலைத் திறந்தால் காளிதான். தலைவலி, வயிற்றுவலி என்று தினம் படுப்பாள். ஒரு வைத்தியனுக்குச் சரியான வேலையிருக்கும். தினம் மஸ்தான சாப்பாட்டுடன் அவளுடலில் லேகியம் பஸ்மம், சிந்தூரம், கஷாயம் சேர்ந்து கொண்டிருக்கும். அவளுக்கு யாரிடமும் அச்சமில்லை இராமனுதனைக் கண்டால் மட்டும்

சிறிது நாணம், வாய்பேசாமல் உள்ளே ஓடிப்போவாள். அவன் அப்புறம் சென்றதும் "கண்ணைப் பாரு, மூக்கைப்பாரு" என்று கேலிசெய்வாள். அவளைக் கண்டாலே, "கடவுளே இந்த விலங்கை எனக்கு மாட்டிவிடாதே" என்று இராமனுதன் திடுக்கிடுவான்.

அண்ணாமலைக்கு எப்படியாவது விலங்கை மாட்டி இராமனுதனைத் தன் வீட்டிலேயே வைத்து, அவன் சொத்தையும் தனதாக்கிவிட வேண்டுமென்பது ஆசை. காளிக்கு வெள்ளையன் மேலேதான் மனம். விசாலாட்சிக்குச் சடங்குகள் முடிந்ததும் அண்ணாமலைக்கும் காளிக்கும் நடந்த இரகசியப் பேச்சு இது; மனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

அண்ணு: காளியாத்தா, எல்லாம் உன் மகன் நன்மைக்குத் தான் சொல்வது. இராமனுதபுரம் சுப. கடை என் அப்பாவைத்தது; அதில் சிவநேசம் போட்ட பங்கு லட்சம். அது இப்போ இரண்டு லட்சமாயிருக்கிறது. பர்மாவில் தம்பி முத்தையா பங்கு லட்சம். சிவநேசம் பங்கு இரண்டு லட்சம் இராமனுதனை நம் அழகம்மைக்குக் கட்டிவிட்டால் இங்கே இரண்டு லட்சம், அங்கே இரண்டு லட்சம் நமக்குத்தான், ஈப்போக் கடை சிவநேசங்கடை. அதிலுள்ள மூன்று லட்சம் அப்பனும் வெள்ளயனும் வைத்துக் கொள்ளட்டும்.

காளி: ஏன் அதுவும் நமக்கு வந்தால் கசக்குமா? நான் சொல்லுவதைக்கேளும். இந்த மூதேவி சும்மா புத்தகத்தை வைத்து அழுகிறுன்; ஓடியாடி உழைக்க மாட்டான், தேவாரதிருவாசகம் அவன் மூளையிலே கனமா ஏறிப்போய் விட்டது; இவன் அழுவது தவிர குடும்பத்தைக் கவனிக்க மாட்டான். இவன் ஆண்டி மடத்தில் பாடம் சொல்லிக் கொண்டிருக்கத்தான் லாயக்கு.

என் மகளுக்கு அழகாக கட்டுறுதியாக, திடமாக, கண்குளிர, கலகலப்பான பிள்ளைவேண்டும். ஆசாபாசம் அபிமானம் இருக்கவேண்டும். அவள் சொன்னபடி அவன் கேட்கவேண்டும். நமது அழகம்மை செல்லமாக வளர்ந்தபெண் சிடுக்கென்றல் அவளுக்கு அழுகை வரும். அவளைச் சந்தோஷமாக, பூப்போலே கிளிபோலே வைத்துக் கொள்ளும் அழகன் வேண்டும்; அவன் நமக்கும் இணங்கி நடக்க வேண்டும்; நமது தொழிலையும் கூட்டாக கவனித்துக் கொண்டு பணங்காசெல்லாம் நம்மிடமே தந்துவீட்டுடன் ஒட்டுறவாயிருக்க வேண்டும். நம் அழகம்மை பெரியபெண். தைக்கு பதினறு ஆகப் போகிறது. இந்தச் சோனிக்கு அவளைக் கொடுத்தால் பயனில்லை.

அண்ணு: காளியாத்தா அப்படி நினையாதே; இராமனுதன் தங்கக் கம்பி; பெரிய அறிவாளிகளெல்லாம் தமிழ்மணி என்று போற்றும் புலவன்; இன்னும் படித்து முன்னுக்கு வரும் பிள்ளை.

காளி: இப்படிப் படித்தால் மேலுக்குப் போகவேண்டியதுதான். அவன் திருஞான சம்பந்தர் மடத்திற்குத்தான் லாயக்கு; குடும்பத்திற்கும் இவனுக்கும் ஒத்துவராது; நாகைச் சொல்லவில்லை உடுக்கு மாயாண்டி, குடுகுடுப்பை குப்பன், பஞ்சாங்கையர் எல்லாரும் என் மனப்படியே குறி சொல்லியிருக்கிறுர்கள்.

அண்: உன் எண்ணம் என்ன?

காளி: நான் சொன்னபடி செய்வதானல் சொல்லுகிறேன்; இன்றேல் உங்களுக்குச் சொல்லாமலே.........

அண்ணு: உன் சமர்த்து தெரியுமே சொல்லு.

காளி: சொன்னபடி நடப்பீர்களா!

அண்ணு: அப்படித்தானே நடக்கிறேன்; சரி; சொல்லு.

காளி: ஈப்போவிலிருக்கும் வெள்ளையனை உடனே வரவழையும்; உங்கள் தம்பி முத்தையா உடனே ஈப்போ செல்லும்படி சிவநேசத்திற்கு எழுதும். வெள்ளையனுக்கு அழகம்மையிடம் பாசமுண்டு, அதற்கெல்லாம் நான் இருக்கிறேன். இளங்காளை, நமது சொக்குமாதிரி ஆள், குணம் நிறம், நடை எல்லாம். சொக்குக்கு வெள்ளையனிடம் அசாத்தியப் பிரியம். பஞ்சாங்கையரும் ராசிப்பொருத்தம் சரியாயிருக்கிறது, வெள்ளையனுக்குச் சுக்கிரதசை அடிக்கிறது என்ருர். உடனே கலியாணத்தை முடித்து விடுவோம், வெட்டிருவானை இந்த பக்கமே வராமல் பர்மாவுக்கு அனுப்பிவிடலாம். அங்கே வியாச்சியம் பலமாயிருக்கிறது. சிவநேசர் இன்னும் ஐந்து வருஷம் இந்தப் பக்கமே வரமுடியாது. அப்பனும் மகனும் இரங்கோனில் எப்படியாவது போகட்டும். வெள்ளையன் நமது பிள்ளையானல் மலேயா மூன்று லட்சம், இராமனுதபுரம் இரண்டு லட்சம் ஆக ஐந்து லட்சம் நமக்குத்தான். மெல்ல மெல்லஇராமனுதபுரம் கடையை ஒடுக்கிப் பணத்தை ஈப்போவுக்கே நகர்த்திவிடச் சொல்லலாம். அங்கே நமது சொக்குவையும் வெள்ளையனுடன் அனுப்பிவிடலாம்; அல்லது மலேயாப்பணத்தை இங்கே கொண்டுவந்து தொழில் நடத்தலாம். இந்தப் புத்தகப்பூச்சி ஒருநாள் ஆண்டி பரதேசிகளுடன் ஓடிப்போவான்; பிறகு பர்மாப் பணத்தையும் பற்றிக் கொள்ளலாம்; சிவநேசம் அதிகநாள் இருக்கமாட்டான். அவளைக் கொண்டு போன நெஞ்சடைப்பு அவனுக்கும் உண்டு. கோடங்கிக்காரரும் அப்படியே சொன்னர்.

அண்ணு: அடிபாவி. உனக்குப் பணம் வேண்டுமானல் தமிழ் மணியை ஏன் அப்படிச் சொல்கிருய்?

காளி: தமிழ்மணியாம் .... என் சொக்குமுன்னே ஒரு குன்றுமணி பெறுவானு இவன்?

அண்ணு: சொக்கு ஆள் கனந்தான், மூளைதான் களிமண்.

காளி: ஹா, என் பிள்ளையை அப்படிச் சொல்லப் போச்சா? உம்மைப் போலப் பத்துப் பேருக்கு அவன் பதில் சொல்லுவான்.

அண்ணு: சரி உன் பிள்ளையை நீயே மெச்சிக்கொள். வெள்ளையன் நடத்தை எனக்குப் பிடிக்கவில்லை; மூன்ருண்டில் அவன் எப்படியெல்லாம் கெட்டுப் போனனே? சுத்த சல்லிப்பயல் முரடன், முன்கோபி, வரத்தடியன்; காமுகன், ஊதாரி. சிவநேசத்திற்கே அவனைப் பிடிக்காது; என் மகனைத்தவிர வேறு யாருக்கும் அவனைப் பிடிக்காது.

காளி: ஹூம், என் மவனைச் சொன்னல் தெரியுமா சேதி! வெள்ளையன் நல்லபிள்ளை; எனக்கு இதமான பிள்ளை; ஆசாபாசமுள்ளவன்; திடமானவன். அவனுக்கும் நம்ம அழகுக் கிளிக்குந்தான் ஜோடி.

அண்ணு: உனக்குப் பிடித்தால் நடத்து; என்னைக் கேட்காதே;

காளி: இந்த மருக்கொள்ளித்தனந்தானே வேண்டாமென்கிறேன். நான் வேறு நீங்கள் வேருக்கும். அழகம்மை உங்களுக்குப் பாத்தியமில்லையாக்கும்.

(தொடரும்)

"ராக்கு, நீ அந்த மாதிரி செஞ்சு எங்களை அவமானப் படுத்தி விட்டாயே!" என்றான் சித்தையன். ராக்காயி தேம்பித் தேம்பி அழுதாள்.

பஞ்சாயத்து

ரா. வெங்கடாசலம்.

முதல் நாள் ஆடு மாடுகள் உள்ளே புகுந்து பாத்திகளை மிதித்து நாசம் செய்திராவிட்டால் சித்தையன் அன்று தோட்டத்தின் அருகில் கூட வந்திருக்கவே மாட்டான். வாழைக் கன்றுகளை நட்டு விட்டு சுற்றிலும் வேலி அடைக்க வேண்டுமே என்பது அந்த தோட்டக்கார மகனுக்கு தெரியாதா? மூலையில் கொண்டுவந்து குவித்த வேலாமுள் சுமை அப்படியே இருக்கத்தான் இருக்கிறது. ஆனால் வேலி போட வேண்டுமென்ற நினைப்புக்கூட இல்லாமலல்லவா இருக்கிறான்!

அதற்குள் ராக்காயி செய்த சங்கடம் அவனை எதுதான் செய்ய தூண்டியது? வேலி போடுவது மட்டுமா நின்று போயிருந்தது? வண்டிச் சக்கரம் 'கிரீச் கிரீச்' சென உரசுவதற்கு மையும் போடாமல்கூட இருந்து விட்டானே!

ஆடுமாடுகள் புகுந்து நாசம் செய்துவிட்டதை அறிந்து சித்தையனுடைய அப்பன் கொஞ்சம் 'சுள்ளாப்பாய்' பேசவும்தான் பையனுக்குச் "சுறுக்குத்தட்டி" தோட்டக் கரையில் இப்போது அவன் ஊசலாடுகிறான். இல்லாவிட்டால் அதுகூட எங்கே? தலையை வெளியே காட்டக்கூட வெட்கப் பட்டுக் கொண்டு வீட்டுக்குள்ளேயே அடங்கிக் கிடந்தானே! காரணம் ராக்காயிதான். முந்தியநாள் நடந்த சம்பவங்கள் அடுக்கடுக்காய் அவன் மனத் திரையில் விரிந்தெழுந்தன.

(2)

ராக்காயினுடைய அழகைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டிய தில்லை. ஆனால் அவள் நடையையும் குணத்தையும் பற்றி சொல்லித் தீரவேண்டும். மற்றவர்களின் ஓட்டம்தான் அவளுடைய சாதாரண நடை, குணம் முன்கோபம். நுனி மூக்கில்தான் அவளுக்குக் கோபம் இருக்கும்.

ஒரு நாள் காலை. நன்றாக சிங்காரித்து நாட்டியத்திற்கு தயாராக நிற்கும் நடனப் பெண்களைப்போல் வாழைமரங்கள் பசுமையாக அகண்ட இலைகளைப் பரப்பி நின்று கொண்டிருந்தன. சில இடங்களில் பூந்தோட்டங்கள், சிலவற்றில் கீரைப்பாத்தி. அவைகளைச் சுற்றி குறுக்கும் நெடுக்குமாக கன்னங் கறேலென ஓடும் வாய்க்கால். இதே காட்சிதான் எந்தப் பக்கம் பார்த்தாலும் கண்ணுக்கு எட்டிய தூரம்வரை. ராக்காயி கன்றுக் குட்டியை வாய்க்கால் ஓரமுள்ள புல் வரப்புகளில் மேய விட்டுவிட்டு அடுத்தாற்போல் வெற்றிலைக் கொடிக்கால் ஓரம் முளைத்திருந்த பல கீரைகளைக் கொய்து மடியில் நிறைத்துக் கொண்டிருந்தாள்.

சூரியனது பொன்னிறக் கதிர்கள் பயிர் பச்சைகளுக்கு முலாம் பூசிக் கொண்டிருந்தது. காற்று சுற்றிலுமுள்ள தென்னந் தோப்புக் கூட்டங்களின் ஊடே புகுந்து பலவித இசைகளை எழுப்பிச் சென்றது. ராக்காயி மேலாடையை அடிக்கடி சரிசெய்து கொண்டே என்னவோ யோசித்துக் கொண்டிருந்தாள்.

ராக்காயியோடு வேறு ஒருவரும் துணையாக இல்லை. பேசுவதற்கு மட்டும் ஆளிருந்து விட்டால் பொழுது போவதே தெரியாமல் வேலை செய்து கொண்டிருப்பாள். பேச்சு என்றால் அவளுக்கு உயிர். அந்த வரப்பு வழியாக போகிறவர் வருகிறவர் ஒருவரையும் தப்ப விடமாட்டாள். "சித்தப்பா பெரியப்பா, அம்மான், அத்தை, அக்கா, பாட்டி" இப்படியாக பலவித முறை சொல்லி வலிய அழைத்து கொஞ்ச நேரமாவது நிறுத்தி வைத்து பேசிவிட்டுத்தான் அனுப்புவாள்!

அவள் குலுங்கிக் குனிந்து அவளுடைய பஞ்சு விரல்களால் கீரையைக் கொய்து கொய்து மார்பின் முன் தொங்கும் முந்தானியில் போட்டுக் கொண்டே இடை இடையே காற்றில் நழுவும் சேலையை ஒழுங்குபடுத்துவதையும் ஆட்டுக்குட்டி வேறு யாருடைய தோட்டத்திலும் புகுந்துவிடாமல் இருக்க அடிக்கடி 'பாபா' எனக் கூப்பிட்டுக் கொள்வதையும் பார்க்க வெகு ரசமாயிருக்கும். "சேற்றில் பிறந்த தாமரை, கானகத்தில் பூத்த கற்பகம்" என்ற வர்ணனைகளுக் கெல்லாம் அவள் அந்தச் சமயத்தில் பொருத்தமாயிருந்தாள்.

ராக்காயிக் குட்டிக்குத்தான் பேச்சு கிடைத்தால் போதுமே; அவளே வழியில் போகிறவர்களை இழுத்து வைத்துப் பேசுவாளே! இந்த சித்தையன் ஏன் அவ்வளவு வேகமாய் ஓடிவரவேண்டும்? தோளில் கிடக்கும் மண் வெட்டியைக்கூட அவன் மண் வெட்டி என நினைக்கவில்லை போலிருக்கிறது. ஓடி வருகிற வேகத்தில் கொஞ்சம் 'எசகு பிசகாய்' பட்டு விட்டால். இந்தக்கோலத்தில் அவளைப் பார்ப்பவர்கள் கூட என்னமோ ஏதோ என்றுதான் நினைத்துக் கொள்வார்கள்!

ராக்காயிடமா இப்படி இளைக்க இளைக்க வரவேண்டும். வரப்புத் தாண்டி வாய்க்கால் தாண்டி குத்தின் முட்களைச் சரியாகக் கூட பிடுங்கி எறியாமல் ஓடியா வரவேண்டும். சித்தையன் மண்வெட்டியை ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க வந்து உட்கார்ந்து விட்டான். அவன் வந்த மாதிரியைப் பார்த்து ராக்காயிக்கும் ஒன்றும் விளங்கவில்லை. அப்படியே திகைத்து நின்றாள்.

சித்தையன் மூச்சு வாங்குவது இன்னும் தணியவில்லை. ராக்காயிடம் பேசவேண்டுமென துடிதுடிப்பு இருக்கும்போது மூச்சு வாங்கல் என்ன பிரமாதம். நன்கு நிமிர்ந்து உட்கார்ந்தான். காற்றில் அசையும் ஆடையுடன் நிற்கும் ராக்காயின் முகத்தை உற்றுப் பார்த்து முதலில் ஒரு கனைப்பு கனைத்துக் கொண்டு "ஏ பிள்ளே, கொஞ்சம் தண்ணி கொண்டுவா" என்றான். அவனுடைய குரலிலே அதிகாரம் தொனித்தது.

ராக்காயி 'சளசளத்த' பேச்சுக்காரியாயிருந்தாலும் அப்போது அவனுடைய பேச்சு அவளுக்கு என்னமோ மாதிரி பட்டது. ஒரு சின்னஞ் சிறு அல்ப சம்பவத்தால் இமாலயத் தவறு நேர்ந்து விடுகிறதல்லவா? ரொம்ப சாமான்ய சம்பவம் பெரிய பிரளயத்துக்குக் கூட காரணமாக இருந்து விடுகிறது.

மனித குணம் இருக்கிறதே, அது எப்போதும் ஒரே நிலையில் இருப்ப தில்லை. என்ன விபரீதம் நடக்கிற தென்பதைப் பாருங்கள். ராக்கா யிக்கு அவன் சொந்த தாய்மாமன் மகன்தான், இருவரும் எத்த னையோ தடவைகளில், ஏன் தினம் தினம்தான், ஏறிக்கரையி லும், கிணற்று மேட்டிலும், வீட் டுத் திண்ணையிலுமாக இருந்து சந் தோஷமாக எவ்வளவோ கதை கள் பேசி சிரித்திருக்கிருர்கள். இன்பக் கோட்டைகள் கட்டி யிருக்கிருர்கள். உல்லாசக்கனவு களுக்கு அளவே இல்லை. ஆனல் இப்போது அவன் கேட்ட அந்த மாதிரியால் அவளுக்கு என் னமோ வெறுப்புத்தட்டிவிட்டது. அவனையே திரும்பி உற்று நோக்கி முறைத்து நின்ருள்.

"என்ன பிள்ளே நிக்கிறே? தண்ணி கொண்டானு சொல்றது கேக்கலே!" என மீண்டும் சொல்லிக் கொண்டே கொஞ்சம் ஆயாசம் தீர ஒருகாலை ஒருக் களித்து உட்கார்ந்தான்.

"என்ன? நீ வச்ச வேலைக்கா ரியோ, உம்! அதெல்லாம் வேறே ஆளைப் பாத்துக்கோ!" என்று அவள் படபடவென பேசிவிட் டாள்.

"அடி! உம் என்ன! வேலைக்கா ரியா!!" என அசட்டுச் சிரிப்பு டன் முகத்தைக் கடுகடுவென வைத்துக்கொண்டு அவன் எழுந்து நின்ருன்.

"ஆமாங்கறே, இந்த ராக்காயி கிட்டே அதெல்லாம் வச்சுக் கிடாதே! என்ன, கட்டின பெண் டாட்டியாட்டம் அதிகாரம் பண் ணிக்கிறே; உம்" என்று கோப மாகப் பேசிவிட்டு அவள் அப்பால் நடந்தாள்.

"என்ன சொன்னே, பெண் டாட்டியா? இன்னிக்கி இல் லாட்டி நாளைக்கி ஆகிற கழுதே! அதான் பேசி முடிச்சாச்சே, இன் னென்ன? உனக்குத்தெரியாதாக் கும், அதைத்தானே சொல்ல வந் தேன் பைத்தியக்காரி. உம், போறி யாபோ?" எனச் சொல்லிக் கொண்டே எட்டி அவளுடைய மேலாடையைப் பிடித்தான்.

ராக்காயி இருக்காளே பெரிய வம்புக்காரி. அதுதான் சாக்கு என குய்யோ முறையோ வென கத்த ஆரம்பித்து விட்டாள். பிடுங்கி வைத்திருந்த கீரையை அந்த இடத்திலேயே உதறிவிட்டு அழுது கொண்டு வேகமாகப் புறப்பட்டாள். அவளை அறியா மல் ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. வெள்ளம் போல கண் ணீர் பெருகிக் கொண்டே வர, "எங்கப்பன் கிட்டே சொல்லி உன்னை—" என தேம்பித் தேம் பிச் சொல்லிக் கொண்டே நடந் தாள்.

சித்தையனும் ஆண்பிள்ளை இல் லையா? 'வரட்டுமே உன் படை பஞ் சாரமெல்லாம்" என்று அலட்சி யமாய் சொல்லிக் கொண்டு மண் வெட்டியை தோளில் போட்டுக் கொண்டு தன் வாழைத் தோட் டத்தில் வேலி முள் எடுக்க திரும் பினன்.

(3)

அதற்கப்புறம் வீட்டில் நடந்த விஷயங்களை அதிகம் கூறவேண் டியதில்லை. அவளுடைய தகப்பன் கருப்பணஞ் சேர்வைக்கு சொல்ல முடியாத கோபம் வந்து விட்டது.

"அவனு! பயமகனுக்கு அவ்வ ளவு தெம்பா! பார் இப்ப அவனை, அவன் காலை கையை ஒடிச்சு—!" என மீசையை முறுக்கிக்கொண்டு வாசப்படியை விட்டு இறங்கினர்.

"ஐயோ, இதுக்குத்தானு? வேண்டாங்க, வேறுயாரும் இல்லை

எங்க அண்ணன் மகன் தானே. அதுக்குத்தானு!" என்று மனைவி சேர்வைக்காரருடைய கையைப் பிடித்து இழுத்தாள்.

ராக்காயி அவளுடைய அப்பனிடம் சொல்லி ஏதேனும் தொந்தரவு உண்டாக்கி விடுவாளோவென சித்தையன் கொஞ்சமும் பயப்படவில்லை. ஆனல் அவள் இவ்விதம் நடந்து கொள்வாள் என்று அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. தங்களுடைய கலியாண விஷயத்தை எவ்வளவு ஆவலுடன் தெரிவிக்க விரும்பினன். எத்தனை ஆசையுடன் ஓடி வந்தான்! அவளோ அப்படி கோபத்துடன் தேம்பி அழுதுகொண்டு போனது அவனுடைய கனவைச் சிதறடித்து விட்டது. மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டே வாழைத் தோட்டம் போய்ச் சேர்ந்தான்.

மூலையில் கருவேல முள் குவியல் நிறைந்திருந்ததைப் பிரித்து வேலி அடைப்பதற்காக கட்டவிழ்த்தான். ராக்காயி செய்த ஏமாற்றத்தை அவன் மறந்தால் தானே அவனுக்கு வேலை செய்ய முடியும்? அந்த நினைப்பு மனதிலிருந்து அறுக்கும் போது வேலை எங்கே ஓடும்? பாதி அவிழ்த்த முள்க்கட்டைத் திரும்பவும் கட்டி விட்டு அப்பால் நடந்து போய் ஒரு ஒற்றைப் பனைமரத்தின் கீழ் சர்வே கல்மேல் உட்கார்ந்து நடந்து போன சம்பவத்தை நினைத்துப் பார்த்தான்.

அவள் இவ்விதம் நடந்து கொண்டதிலிருந்து தன்னைக் கலியாணம் செய்து கொள்ள இஷ்டமில்லையோ என்று நினைப்பான். ஆம், அப்படித்தான் இருக்கும். ஆனல், ராக்காயி இல்லாமல் தான் காலந்தள்ள வேண்டுமா? ஐயோ, இந்த ஜன்ம மெடுத்ததே அவளுக்காக அல்லவா......

இதற்கு மேல் அந்தப் பாமர உள்ளத்தில் படைப்பின் ரகசியம் புலப்பட மறுத்து விட்டது!

இப்போது இரு குடும்பங்களுக்கும் உள்ள உறவே ரத்தாகி விட்டதெனலாம். ஏதாவது ஒரு வழியில் கூட தொடர்பே இல்லாது போய் விட்டது. இல்லாவிட்டால் அவர்களுடைய சாதி வழக்கப்படி ராக்காயிக் குட்டியை நியாயமாக அவளுடைய தாய் மாமன் மகன் சித்தையனுக்கு இல்லாமல் வேறு ஒருவனுக்குக் கொடுக்க அப்பன் இசைவானு? அதுவும் தாய் மாமன் சம்மதம் இல்லாமல்!

அன்று பெண் கேட்க வந்திருக்கிருர்களென்று கருப்பணஞ் சேர்வைக்காரர் வீட்டில் ஏக அமர்க்களம் தான். சேர்வைக்காரர் புதுச் சம்பந்தியோடு தெருவில் வரும்போது ஒவ்வொருவருக்கும் அறிமுகப் படுத்தி வைத்தார். யாராவது சித்தையனைப் பற்றிக் கேட்டு விட்டாலோ சேர்வைக்காரர் அலட்சியமாய் பதில் சொல்லி விடுவார். "அது எங்கே? அவுகளே தலை முழுகியாச்சே! இனி எங்கே!" என்று தலையை அசைத்து விட்டுப் போய்விடுவார்.

ஆனல் தாய் மாமன் சொக்கலிங்கஞ் சேர்வைக்காரர் அன்று இரவு முழுதும் தூங்கவே இல்லை. உரலும் உலக்கையும் எடுத்துக் கொண்டு வெற்றிலையை இடித்து மென்ற மணியமாகவே இருந்தார். அவருடைய மனைவி அவரைப் படுத்துத் தூங்கும்படி எவ்வளவு வேண்டியும் அவர் மறுத்து விட்டார். சித்தையனுக்கும் தூக்கம் வரவில்லை. அவசரப் பட்டு இந்த மாதிரி அனர்த்தத்தில் கொண்டு வந்து விட்டோமே என நொந்து கொண்டு மௌனமாக இருந்தான்.

"நான் என்ன சேர்வைக் காரனில்லை. சாதிமானடி. இந்த உயிர்

எதற்கு இருக்கிறது? பார்த்து விடுகிறேன். உம், மேல வீட்டு சேர்வைக்காரர் வருவதாக சொன்னரே, ஏன் வரவில்லே. ஓ அந்தா வருகிருரே, யாரது சுப்பையா சேர்வைதானே வாங்க — இப்படி பாயிலே உக்காருங்க — நியாயம் கேட்டிங்களா? விசயமெல்லாம் தெரிந்து கொண்டிங்களா? உங்களுக்கு சம்மதமுன சரி!'' என்று சொக்கலிங்கம் சேர்வைக்காரர் சத்தமிட்டுப் பேசினர்.

“என்ன செய்வதுங்க, எல்லாம் விசாரிப்பம்'' என சுப்பையா சேர்வை முறைப்படி பதில் சொன்னர். “ஆமா, எம் மகனுக்கு நீ பொண்ணு கொடுக்காட்டி போ அவன் ஆணுனு பிறக்கையிலே பொண்ணுனு பிறக்காமலா போயிரும். அதுக்காக இல்லே. என்ன இருந்தாலும், தாய் மாமன் என்கிற மரியாதை இருக்குதே, அது நம்மசாதி வழக்கமல்லவா! ஒரு ‘முறை கிறை' இல்லே; ஒரு கேள்வி கேட்டுட்டு நல்லா செஞ்சுக்க, மகராசனுய். நான் தடுக்கவில்லே,'' என்ருர். “சரிங்க, அதுதான் நாளைக் காலையில் சாதிக் கூட்டம் போட்டிருக்கிறீங்கள். அதில் வைத்துப் பேசிக் கொள்ளலாம்'' என்று முடிவு கட்டி விட்டார்.

என்ன இருந்தாலும் சித்தையனுக்கு ராக்காயிக் குட்டியை மறக்க முடியவில்லேயே! அவளை மறந்தாலும் அவளுடைய ‘கள்ள'ச் சிரிப்பை மறக்க முடியவில்லேயே. அவளுடைய பேச்சும் விழியும் தானே இப்போது அவனை வதைத்துக் கொண்டிருந்தது. ஐயோ......பழிகாரி இப்படிப் பண்ணி விட்டாளே! இவைகளை எல்லாம் நினேக்க நினேக்க அவன் மனம் மிகவும் வேதனேப் பட்டது. அவள் செய்த குறும்பை நினேக்கும் போது சகிக்க முடியவில்லே. அவமானப் படுத்திவிட்டாளே என்பது ஒரு பக்கம் ஆத்திரத்தை மூட்டி விட்டது. அந்த மாதிரி அவமானப் படுத்துவாள் எனத் தெரிந்திருந்தால் தானும் கண்டிப்பாய் அன்றே அவமானப் படுத்தியே தீர்த்திருப்பேன் என ஆத்திரப் பட்டான்.

பைத்தியம் பிடித்தவன் போல் பலவாறு சிந்தித்துக் கொண்டு வேலிக்கு முள்ளிட்டுக் கொண்டிருந்தான். கவனமின்றி வேலே செய்த அவனுடைய கரங்கள் அப்படியே முட்களை பிடித்த படியே அசையாமல் நின்று விட்டன!

ராக்காயியை அவமானப் படுத்த வேண்டுமெனக் கொஞ்ச நேரத்திற்கு முன்தான் அவன் நினேத்தான். நினேத்த நினேப்பில் அவளும் அந்த வழியில் தலேமேல் கஞ்சிக் கலயத்துடன் சென்று கொண்டிருந்தாள். அவள் போகும் வழியில் சற்று தூரத்திற்கப்பால்தான் மனிதர் நடமாட்டம் இருந்தது. சித்தையன் மனதில் ஒரு எண்ணம் எழுந்தது. அவளுக்கு கெடுதி ஒன்றும் செய்யாவிட்டாலும் மிரட்ட வேண்டும் என்று கூட நினேக்கவில்லே. பளிச்சென்று இரண்டே இரண்டு கேள்வி கேட்பது.

கருக்கரிவாளே இடையில் சொருகிக் கொண்டு சித்தையன் வேலியை அப்படியே போட்டு விட்டு குறுக்குப் பாதையைத் தொடர்ந்தான்.

ராக்காயி திரும்பியும் பாராமல் நேரே வேகமாக நடந்து சென்ருள். சித்தையன் பாதையும் குறுக்குப் பாதை. நடையும் ரொம்பத் துரிதம்.

வழியில் ஆவரஞ் செடிகள் நிறைந்திருந்தன, பூக்கள் மஞ்சளாக பூரிப்புடன் மலர்ந்து

காற்றில் அசைந்தசைந்து ஆடிக் கொண்டிருந்தன. சித்தையன் அவைகளைப் பார்க்கவும் ஏதோ யோசனை தோன்றியது. இரண்டு பூங்கொத்துகளை போகிற போக்கிலேயே பறித்துக் கொண்டு நடந்தான்.

வழியில் ஒருசிறு குளமிருந்தது. சுற்றிலும் உயர்ந்த கரை. புளிய மரங்களும் வேப்ப மரங்களும் கரையில் நின்றன. ராக்காயி குளத்து மேட்டில் ஏறி சுற்றிப் பார்த்தாள். பசுமையான பயிர்கள் நிறைந்த தோட்டங்களுக்கு கிணறுகளிலிருந்து ஏற்றம் இறைத்து நீர்பாய்ச்சிக் கொண்டிருந்தனர். தென்னந் தோப்புகள் ஒரு பக்கம் வரிசையாகவும் கூட்டமாகவுமிருக்கின்றன. அதை அடுத்து பெரிய ரஸ்தாவும் செல்கிறது. மந்தை மாடுகளை பையன்கள் தெம்மாங்கு—தில்லானு பாட்டு பாடிக் கொண்டே ஓட்டிக் கொண்டு வருவதும் போவதுமாக இருந்தனர்.

ராக்காயி கொஞ்சம் அந்தக் கரையிலேயே கலயத்தை இறக்கி வைத்து விட்டு உட்கார்ந்தாள். சித்தையன் பின் தொடர்ந்ததை அவள் கவனிக்கவில்லை.

சித்தையன் மறு பக்கம் குளத்தின் மடை வாய்க்கால் வழியாக குனிந்து மறைந்து வந்து மேட்டின் மேல் ஏறினன்.

"யாரு ராக்காயிக் குட்டியா, அடே! எது தன்னந் தனியா இப்படி?" என்று சித்தையன் கிண்டலாகப் பேசி வம்புக்கு இழுத்தான்.

ராக்காயி திடீரென திரும்பிப் பார்த்தாள். ஆனல் ஒன்றும் பேசவில்லை. எழுந்து மௌனமாக நின்ருள்.

"உம், இப்ப உனக்கு உங்கப்பன் காவலுக்கு யாரையும் அனுப்பலியோ? சாதிக் கூட்டம் இப்ப நடக்குமே, அதில் 'உம்'முனு முகத்தை வைத்துக் கொண்டு நிக்கிருரா இல்லையா?" என இன்னும் வம்புக்கு இழுத்தான்.

என்னமாவது அவள் பேச வேண்டும். அவனுக்கு கோபத்தை மூட்டக் கூடியதாக இருக்க வேண்டும். அதைக் கொண்டு அவளை அவமானப் படுத்தி அவளுடைய தகப்பனுக்கு புத்தி கற்பிக்க வேண்டுமென அவன் எதிர்பார்த்திருந்தான். ஆனல் முன் கோபக் காரியாகிய ராக்காயியுடைய முகம் அவனுடைய ஏளனமான அந்த வார்த்தைகளால் யாதொரு விதமான ஆத்திர உணர்ச்சியும் காட்டிக் கொள்ளாமல் சாந்தமாக இருந்தது.

"உம், உனக்கும் பேசத் தெரியாதோ! பேசாமடந்தை மாதிரி நிக்கிறயே!" என மீண்டும் அதட்டிக் கேட்டான்.

ராக்காயின் கண்களிலிருந்து நீர்த்துளிகள் சிதறின. சித்தையனுடைய மனதையும் அவளுடைய நிலை, கலக்கி விட்டதெனலாம். அவனுடைய தீர்மானத்திலும் தளர்ச்சி ஏற்பட்டிராவிட்டால் அவனுடைய பேச்சு இன்னும் கடுமையாகவே இருந்திருக்கும். வர வர வேகம் குறைந்து மென்மையாகி விட்டது. பெயர் சொல்லியும் கூப்பிட்டு விட்டான்.

"ராக்கு, நீ அந்த மாதிரி செஞ்சு எங்களை அவமானப் படுத்தி விட்டாயே!" என்ருன்.

ராக்காயி தேம்பித் தேம்பி அழுதாள்.

"அழாதே ராக்கு, இனி என்ன? உன் சிறு புள்ளை புத்தி எப்படியும் நீ நல்லாயிருந்தால் போதும்."

"நானா......" என்று மட்டும் தான் சொன்னாள். அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை.

"அண்ணைக்கு உங்கிட்டே நம்ம கலியாணத்தைப் பத்திச் சொல்லி சந்தோசப்பட வந்தேன். ஆனால் விதி விட்டதா? அண்ணைக்கு தோட்டத்துக்கு வேலி அடைக்கலாம்னு சீக்கிரமா எந்திரிச்சு வெளியே போயிட்டு வந்தேன். அப்ப உங்க ஆத்தாளும் எங்க ஆத்தாளும் நம்ம ரெண்டு பேருக்கும் வருகிற ஆவணியிலே கலியாணத்தை முடிச்சுப் புடறதுண்ணு பேசிக் கிட்டாங்க. இதை கேக்கவும் ஊத்தின கூழை குடிச்சும் குடியாமையுமா ஓடியாந்தேன். ஆனா......... விதி யாரைவிட்டது" என சித்தையன் சொன்னபோது அவன் கண்களில் கண்ணீர் கலங்கி விட்டது

"அத்தான் தெரியாமல் சின்னப் புத்தியாய் செஞ்சிட்டேன். இப்ப என்னா — அய்யனாருசாமி ஆணை நம்ம ரெண்டு பேருமே கலியாணம் செஞ்சிக்குவோம். எங்காத்தாளிடம் சொல்றேன்—" என்றாள்.

"பஞ்சாயத்து வரை போயிட்டுதே! இனி எங்கே" என சித்தையன் சஞ்சலத்துடன் சொன்னான்.

"நம்மை மீறியா அத்தான் பஞ்சாயத்து!" என்று ராக்காயி உறுதியுடன் சொன்னாள்.

கிராம்யக் காட்சி:

மனோதர்மம்

"ரதி"

மத்தியான நேரங்களில் அந்த பெரிய ஆல மர நிழலில் ஆடு மாடுகளை இளைப்பாற விட்டு, கருப்பன் தானும் மேல்த் துண்டை வேரோரம் விரித்துப் படுத்துக் கொண்டு இளைப்பாறுவான். இத்தனை நாளாக மாமூலாக வந்த இந்த வழக்கத்துக்கு மாருக இன்றைக்கு மட்டும் கருப்பன் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருக்கிருன். அதோடு ஆலங் கொழுந்துகளையும் பறித்து மென்று கொண்டே தனக்குத் தானே சிரித்துக் கொள்கிருன்.

வாஸ்தவத்தில் இயற்கையும் அன்று ஒரு 'தினுசா'கத்தான் இருந்தது. மேகப் படலங்கள் வானில் யாத்திரையைத் தொடங்கியிருந்தன. ஆகாயத்தில் நிமிஷத்திற்கு நிமிஷம் பல விசித்திர வடிவங்கள் எழுந்தெழுந்து அழிந்து கொண்டிருந்தன.

கருப்பன் குளிர் நிழலில் உட்கார்ந்து மேலே அண்ணாந்து பார்த்தான். அப்படியே வான முகட்டையும் பார்த்தான். மின்னல்க் கொடிபோல் எங்கே பார்த்தாலும் அவள் உருவமே அவனுக்குக் காட்சி அளித்துக் கொண்டிருந்தது. என்ன என்ன? கருப்பன் உள்ளத்திலுமா அந்தப்'பித்து'? சே, சே. தங்கமானவனுச்சே! ஆனல் இன்றைக் கென்னவோ அத்தை மகள் முத்தாயாளுடைய வடிவம் அவன் அகக் கண்ணில் தோன்றித்தோன்றி என்ன வெல்லாமோ அவனைச் செய்து விட்டது! மெதுவாகப் பாடவும் ஆரம்பித்து விட்டான்.

அத்தை புள்ளெ
முத்தாளைக் கட்டவேணும்
அதுக் கேத்த
சிறு தாலி பண்ண வேணும்
குங்குமப் பாய் விரிச்சுக்
குந்த வேணும்
கூசாமல்க் கை நீட்டிப்
பேச வேணும்

ஆகா! இவ்வளவு நாளாக அவன் எப்படித்தான் தன் ஆசையை வெளியிடாமல் இருந்தானே? "குங்குமப் பாய்" என்று வாய் நிறையச் சொல்கிருனே? கை நீட்டி அப்படித் தாராளமாகப் பேச வேணும் என்பதிலேயே, இந்த பாமர உள்ளத்தைக் கவிஞர் நன்ருக நமக்குக் காட்டி விடுகிருர். கிராமப் புறங்களிலே மலர்ந்த இளம் உள்ளங்களின் கனவை எளிமையாக இந்தக் கிராம்யக் கவிகள் நமக்குச் சித்திரித்துக் காட்டுகின்றன. கலா விற்பன்னர் உள்ளத்தில் மட்டுமல்ல, நம்ம ஊர் கருப்பன் நாச்சான் — இவர்களுடைய உள்ளத்திலும் இப்படிப்பட்ட உணர்ச்சிகள் பொங்கும், அவர்களுக்கும் மனோதர்மம் உண்டு என்பதைக் கேட்க ஆச்சரியமாகத் தானே இருக்கிறது.

மனுவின் ராணி

கன்னட ஆசிரியை:
குமாரி பி. டி. ஜி. கிருஷ்ணு]

மொழிபெயர்ப்பு:
[ஜெயலட்சுமி ஆர். ஸ்ரீனிவாசன்

அந்த ஊருக்கு நான் மாற்றலாகி போய் இரண்டே இரண்டு மாதங்கள்தான் ஆகி இருந்தது; அவ்வளவுதான். அன்றைக்கு எனக்கு ரொம்பவும் வேலையிருந்தது. விடியற்காலை ஆறு மணிக்கே சென்றவன் அப்போதுதான் வீட்டிற்கு வந்தேன். நான் வீட்டு வாசற்படியை மிதிக்கும்போது ஆஸ்பத்திரிக் கடியாரம் பதினொன்று அடித்தது. குழந்தைகளும், வேலையாட்களும் படுத்துத் தூங்கி விட்டார்கள். பார்வதி மட்டும் என்னை எதிர்பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள். உள்ளே சென்று உடையை மாற்றிக் கொண்டு கை கால் சுத்தம் செய்ததும் சாப்பிட உட்கார வேண்டும்; அதற்குள்ளாக வாசற் கதவை தட்டும் சப்தம் கேட்டது. பார்வதிக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. “தூ, இதென்ன இது, காலம் கார்த்தாலே போனவர் இப்பொத்தான் வந்திருக்கிறார். ஒரு வாய் சாப்பிடுவதற்கும் நேரமில்லையே. அதற்குள் வந்து விட்டார் இன்னொருத்தர். சரி, கதவைத் தன் பாட்டிற்கு தட்டிக்கொண்டிருக்கட்டும், நான் என்னமோ கதவை திறக்கப் போகிறதில்லை” என்றாள். ஆமாம், நான் காலைபிலிருந்து பசியாகவே இருந்தேன். ஆனால்...ஆனால் என் மனம் கேட்கவில்லை. “கிடக்கிறது விடு பார்வதி, கதவை திறந்து யார் என்று விசாரி” என்றேன்.

அவளுக்கு இன்னும் கோபம் வந்தது. “உங்களுக்கு கோடி நமஸ்காரம், காலையிலிருந்து வயிற்றுக்கொன்றும் இல்லை. முதலில் சாப்பிடுங்கள்; அப்புறம் பார்க்கலாம்” என்றாள். இதன் மத்தியில் கதவைத் தட்டுவது பலப்பட்டது. மனிதனின் உயிர் ஒன்று பிழைப்பு இறப்பின் நடுவில் ஊசலாடிக் கொண்டிருக்கும்போது நான் சாப்பிட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கட்டுமா? எழுந்திருந்து நானாகவே கதவைத் திறக்கப் போனேன். பார்வதியின் கண்களில் கண்ணீர் தளும்பிற்று. “நம்ம ஊரே தேவலை--இந்த பாழும் ஊருக்கு வந்ததில் சாப்பிடக்கூட நேரமில்லை” என்று முணுமுணுத்தாள்.

கதவைத் தட்டினவன் ஒரு சிறுவன்—சுப்பு. அந்த ஊர் தண்டச் சோத்து தடிராமன்தான். அவனை “என்னடா” என்று கேட்டேன். “மீனலோசனிங்க ஆட்டிலே ரொம்ப காயலாவாங்க. இப்பவே கூட்டிகிட்டு வரச்சொன்னாங்க” என்றான்.

மீனலோசனி! அவள் பெயரைக் கேட்டதுமே கதவைத் திறக்கும் பொழுதிருந்த பரிவும் துடிப்பும் எங்கேயோ மாயமாய் மறைந்து விட்டது. “காலம்பரம் வருகிறேன், நட” என்றேன். அவன் புறப்பட்டுச் சென்றான். கதவை தாழிட்டுக் கொண்டு நானும் உள்ளே போனேன்.

பார்வதி ஊகித்த மாதிரி நான் புறப்பட்டுச் செல்லாமல் திரும்பி வந்ததினால் அவளுக்கும் சமாதான

கண்ணால்கூட பார்த்திருக்கா விட்டாலும் அவள் விஷயமாக மற்றவர்கள் பேசிக்கொண்டிருந்ததை யெல்லாம் கேட்டிருக்கிறேன். அதனலேயே "அவள் உண்மையாகவும் ராட்சசி" என்று தோன்றி விட்டது எனக்கு. அப்பேர்ப்பட்டவளின் வீட்டிற்கு இப்போது யார் போவார்கள்? இன்னும் சாப்பிடக்கூடவில்லை—நாளைக்குப் போனல் போகிறது என்று சமாதானம் செய்து கொண்டு படுக்கையில் படுத்தேன். அதற்குள்ளாக மறுபடியும் கதவைத் தடதடவென்று இடிக்கும் சப்தம் கேட்டது. போய்க் கதவைத் திறந்தேன். சுப்புதான்! "இப்பவே வரவேணுமாங்க, டாக்டரே, ரொம்ப சாஸ்தியாக இருக்குதாம். காலில் உளுந்து கூட்டியா என்ருங்க" என்ருன்.

"யாருக்கடா காயலா?" என்று

மேற்பட்டது. சாப்பிட பரிமாறிக்கொண்டே "யார் வந்தது?" என்று கேட்டாள். "சுப்பு மீனம்மாளின், வீட்டுக்கு உடனே வரவேண்டுமென்று அழைப்பதற்கு வந்தான்" என்றேன். மீனம்பாள் பெயரைக் கேட்டதுமே பார்வதி, "அவளுக்கென்ன கேடு இப்போது! விடியாலே போனல் போதாதாக்கும்? செத்தால்தான் என்ன, பூமிக்கு பாரம் குறைந்தது!" என்ருள்.

மீனலோசனி பெயரைக்கேட்ட மாத்திரத்தில் வெறுப்புக்குள்ளாகி வந்தது. அப்படி அருவருப்புக் குள்ளான மீனலோசனி—ஒரு தேவதாசி. நான் அவளைக்

கேட்டேன். அவனுக்கு அது தெரிந்திருக்கவில்லை. எப்படியும் காயலா மீனலோசனிக்கு அல்ல என்று தெரியவந்தது. பின்னே யாருக்கு? யாருக்கானாலும்கூட—மீனுவிற்கே ஆனாலும், போய்ப் பார்க்க வேண்டியது என் கடமை. நானே டாக்டர். அவள் தேவடியாள் ஆனமாத்திரத்தில் அவ்வளவு அலட்சியம் செய்வதற்கு எனக்கென்ன அதிகாரம் இருக்கிறது? கொஞ்ச நேரத்துக்கு முன்னால் என்னமோ என் கடமையை அவள் தேவடியாள் என்ற சாக்கைக் கொண்டு மூலையில் ஒதுக்கிவிட்டு சமாதானம் செய்து கொண்டேன். அதை நினைத்ததும் எனக்கே வெட்கமுண்டாயிற்று. "சரி, வருகிறேன், சற்று பொறு" என்று சொல்லி, உள்ளே சென்று சீக்கிரம் உடையை மாற்றிக் கொண்டேன். பார்வதி தூங்கிப் போயிருந்தாள். மருந்துப் பெட்டியை எடுத்துக் கொண்டு அப்படியே கதவை இழுத்துச் சாத்திவிட்டு புறப்பட்டேன். வீட்டிலிருந்து சுமார் முக்கால் மைல் தூரத்தில் ஒரு தோட்டத்திற்குள் தனியாக இருக்கிறது வீடு. அதனருகில் பத்துப் பன்னிரண்டுமார் தூரத்தில் இரண்டொரு ஏழை கூலியாட்களின் குடிசைகளைத் தவிர்த்து வேறு வீடுகள் கிடையாது.

நாங்கள் சென்ற பொழுது மீனுவின் வீட்டு வாயில்புற கதவு திறந்தே கிடந்தது. சுப்பு "அம்மணி" என்று அழைத்தான். லோசனி வெளியே வந்தாள். அப்பொழுதுதான் முதன் முதலில் நான் அவளைப் பார்த்தேன். அவளைப்பற்றி ஜனங்கள் பேசிக் கொண்டிருந்த வார்த்தைகளைக் கேட்டு அவள் ஒரு ராட்சசி என்ற எண்ணம் ஏற்பட்டிருந்தது எனக்கு. ஆனால் அதென்னமோ துயரத்தால் சோர்ந்து போயிருந்த அவளுடைய முகமும் அழுது அழுது சிவந்துபோய் வீங்கிக் கிடந்த அவளது கண்களையும் கண்டு எனக்கு அங்கலாய்ப்பு ஏற்பட்டது, "யாருக்கம்மா காயலா?" என்று கேட்டேன். அவள் பதில் அளிக்காமல் என்னை உள்ளே அழைத்துச் சென்றாள். அங்கொரு அறையில் கட்டிலின்மீது ஒருவன் படுத்திருந்தான். அவன் புறம் சுட்டிக் காட்டினாள். அருகில் சென்று பார்த்தேன். சவக்களை வீசிற்று அவன் முகத்திலே. கண்கள் திறந்தபடியே இருந்தாலும்கூட அந்தக் கண்களில் வாழ்வின் ஒளி இருந்ததாகத்தோன்றவில்லை. குனிந்து அவன் கையைப் பிடித்துப் பார்த்தேன். நெருப்பைப் போல் கொதித்தது கை. சுர வேகத்தால் அவனுக்கு நினைவு இருக்கவில்லை. பார்த்தவுடனே அவன் பிழைக்க மாட்டான் என்று தோன்றிவிட்டது. அவள் அவன் கால்மாட்டில் தலையை வைத்து என்னவோ யோசித்தபடி என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாள். எத்தனையோ பேர் செத்துப்போனதை நான் பார்த்திருக்கிறேன். பலமான ஒப்பாரிகளையும் கேட்டிருக்கிறேன். ஆனால் இவளுடைய மௌன வேதனைக் கிணையாக வேறொன்றையும் சொல்ல முடியாது. என் இதயமும் சோகத்தால் சோர்ந்தது.

கொஞ்ச நேரத்துக்கு முன்பு நான் அவளைப் பார்த்துக்கூட இருக்கவில்லை. அவள் விஷயத்திலும் ரொம்ப அசட்டை ஏற்பட்டிருந்தது. "செத்தாலும் சாகட்டும்' என்ற முடிவுக்குக்கூட வந்திருந்தேன். ஒரே ஒரு தடவை அவளுடைய தேம்பும் வதனத்தைப் பார்த்த மாத்திரத்தில் எனக்கு அவள் மேலிருந்த வெறுப்பெல்லாம் மாயமாய் மறைந்து கருணைப் பிரவாகம் பெருக்கெடுத்தது. என் இந்த மாறுதலோ?

அவளுடைய வயதென்னமோ அதிகம் இருக்கும் என்று தோன்ற வில்லை. என் பெண் சாந்தாவை விட இரண்டொரு வயசு பெரிய வளாயிருக்கலாம். இவ்வளவு சின்னஞ்சிறு வயதிலேயே இப்படித் தாங்கல்! பெரிய கைகாரி என்ற பட்டமும்கூட!

படுத்திருந்தவன் புரண்டு படுத்தான். என் மருந்தால் அவன் பிழைக்க முடியாமற் போனலும் கொஞ்சம் நினைவு நிச்சயம் வரும். கால் மாட்டில் உட்கார்ந்திருந்த மீனலோசனி எழுந்திருந்து வியர்த்த அவன் முகத்தைத் துடைக்க வாரம்பித்தாள். அவனுடைய உதடு அசைந்தது. கொஞ்சம் தண்ணீர் கொடுக்கச் சொன்னேன். கொஞ்சம் தண்ணீர் உள்ளே போனதும், அவன் மிகவும் மெல்லிய குரலில், "ராணி" என்ருன். அவள் என்புறம் நன்றியுடன் பார்த்து, "என்ன மனு?" என்ருள். பாவம், அவளுக்குத் தெரியாது—அணைவதற்கு முந்தி விளக்கு பெரிதாக எரியுமென்று!

"ராணீ, ராணீ, ராணீ" என்று சொல்லியபடி அவன் அவளுடைய கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். "இங்கேயே இருக்கிறேன், என்ன மனு?" என்று அவள் கேட்டாள். மறுபடியும் இன்னெரு தடவை 'ராணி' என்று பலமாக அலறினன். பிறகு பேச்சில்லை. நாடகம் முடிந்தது.

காலை பத்து மணி இருக்கும் நான் வீட்டிற்கு செல்லும்போது. குழந்தைகளிருவரும் பள்ளிக் கூடம் போய்விட்டார்கள். பார்வதி, "எங்கே போயிருந்தீர்கள்? போகும் போதே விடிந்து விட்டதா? யாருக்கு என்னவாம்?" என்று சரமாரியாகக் கேட்டாள். ஆனல் அப்பொழுது அவளுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்லும் நிலைமையில் இல்லை நான். கடந்த இரவுச் சம்பவங்கள், அலங்கோலமாய்க் கிடந்த நோயாளி, கல்லாய்ச் சமைந்திருந்த அழகியின் சோக வடிவு, எல்லையற்ற துயரம்—எல்லாம் என் சிந்தையில் உருக் கொண்டது. என் முன் பார்வதியே நின்றிருந்தாலும்கூட என் கண்களுக்கு மீனலோசனியின் வாடி வதங்கிய அந்த முகம்தான் தென்பட்டது.

நான் ஊமைபோல், நிற்பதைக் கண்டு பார்வதிக்கு ஆச்சரியமுண்டாகி இருக்கலாம். என் ஓய்வு ஒழிச்சலில்லாத அசாத்திய வேலையினல்தான் நான் அப்படியிருக்கிறேனென்று அவள் ரொம்பவும் வருந்தினள். "நேற்று பூராவும் தூக்கமில்லையா? வேலைக்கு சரியாக சாப்பாடுமில்லை. இப்பொவாவது பலகாரம் சாப்பிட்டு விட்டு ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்." என்று காப்பி பலகாரத்தை கொண்டு வந்து வைத்துக் கொண்டு வற்புறுத்த ஆரம்பித்தாள். "இப்போது ஒண்ணும் வேண்டாம் பார்வதி. கொஞ்சம் படுத்து தூங்கினல் எல்லாம் சரியாகிவிடும்" என்று சொல்லிவிட்டு, உடையைகூட மாற்ருமல் அப்படியே படுத்துக் கொண்டேன். நான் தூங்கப் போகிறேன் என்று நினைத்து பார்வதி வெளியே புறப்பட்டாள். "இங்கே வந்து உட்கார் பார்வதி" என்றேன். பார்வதி என் அருகில் வந்து அமர்ந்தாள். "இன்றைக்கு உங்களுக்கென்ன உடம்பு?" என்று கேட்பது போலிருந்தது பார்வதியின் கேள்விக்குறியடங்கிய பார்வை.

நான் அவளிடம் முந்திய இரவு நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் சொன்னேன். அதைக் கேட்டு பார்வதி, "செத்துப்போனவன் யார்? அவளுக்கு என்ன ஆக

வேண்டும்?" என்று கேட்டாள். அதுவரைக்கும் எனக்கு அந்த ஆலோசனையே உதிக்கவில்லை. செத்துப் போனவன் யார்? லோசனி அப்படிக் கலங்கும்படி அவனுக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம் என்று எனக்கும் இப்பொழுதுதான் தோன்றியது. பார்வதிக்கு மீனுவின் மீது ரொம்ப சந்தேகம். "ஒரு வேளை அவனை விஷம் கொடுத்து அவள் கொன்றிருப்பாளோ" என்று கூட யோசித்தாள். ஒரே ஒரு நாளிற்கு முன்பு பார்வதியைப் போலவே எனக்கும் சந்தேகம் உண்டாகி இருந்தது. ஆனால் அவளை ஒரு முறை பார்த்த பிறகு அந்த எண்ணமெல்லாம் பறந்து விட்டது. ஆதலால் பார்வதிக்குண்டான சந்தேகத்தைக் கேட்டு எனக்குக் கோபம் வந்தது. 'சும்மா இரு பார்வதி" என்று சொல்லி விட்டேன். என் குரல் கடுமையாக விருந்திருக்க வேண்டும். பார்வதியின் கண்களில் நீர் தளும்பிற்று. அவள் முகத்தைப் பார்த்ததும் ஒரு மாதிரி ஆகிவிட்டது. அவளை சமாதானம் செய்தபடி, "மீனலோசனியைப் பார்த்தால் விஷம் கொடுத்துக் கொல்லும்படியான ராட்சசியைப் போல் தோன்றவில்லை பார்வதி. நம்ம சாந்தாவை விட இரண்டொரு வயது பெரியவளாக இருக்கலாம். பாவம், அவளை பார்க்கும்போது ரொம்ப வருத்தமுண்டாகிறது. ஜனங்களுக்கென்ன, கண்டபடி ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பார்கள்." என்று சொன்னேன்.

ஆனால் பார்வதிக்கு மீனுவிடம் சந்தேகம் பூர்ணமாக மறைந்து விட்டதாகத் தோன்றவில்லை. இறந்து போனவன் பணக்காரனாக இருக்கலாம், பணத்திற்காக அவனை கொன்றிருக்கலாம், இப்போது துக்கிப்பதுபோல் நடித்து தப்பித்துக் கொள்வதற்கு முயற்சிக்கலாம் அல்லவா என்பது பார்வதியின் ஊகம்.

அன்றைக்கு நான் ஆஸ்பத்திரிக்குப் போகவில்லை. ஓய்வு எடுத்துக் கொள்ளும் சாக்கில் படுக்கையிலே படுத்து புரண்டு கொண்டிருந்தேன். தூக்கம் மட்டிலும் எவ்வளவு முயற்சித்தாலும் வரவில்லை. போனால் போகிறது. அப்படியே வெளியிலாவது போகலாமென்று புறப்பட்டேன். எப்படியோ மீனலோசனியின் வீட்டிற்கே போய்விட்டேன். கதவு திறந்துகிடந்தது. உள்ளே சென்றேன். முந்திய நாள் நோயாளி படுத்திருந்த கட்டிலின் அருகில் நிலத்தின் மீது சாய்ந்தபடி உட்கார்ந்து கதவுப்புறம் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். அதே கதவின் வழியாக நான் உள்ளே சென்றும்கூட என்னையவள் பார்த்ததாகத் தோன்றவில்லை. எனக்கு அவளது நிலைமையைக் கண்டு மிகவும் கலவரமேற்பட்டது. காரியமெல்லாம் முடிந்துபோய் விட்டது. இப்போது அவள் ஒருத்திதான் அந்தத்தனி வீட்டில். தாசி வீட்டுக்கு யார் போவார்கள்? பார்வதியையாவது துணைக்கு அழைத்து வந்திருக்க வேண்டும் என்று தோன்றிற்று. முதல் நாள் எவராவது என்னிடம் மீனலோசனியின் வீட்டிற்கு என் மனைவியை அழைத்துக்கொண்டு போ என்று சொல்லி இருந்தால் நான் அவர்களுடன் கட்டாயம் சண்டை போட்டிருப்பேன். ஆனால் லோசனியைப் பார்த்த பிறகு அவ்வித சிந்தனைகள் மறைந்து விட்டது. முன்பு அவளைப்பற்றி எண்ணிக் கொண்டிருந்ததையெல்லாம் நினைக்கையில் என்மீது எனக்கே வெறுப்பு ஏற்பட்டது.

நான் வந்ததை அவள் பார்க்க

வில்லை. "லோசனி" என்று அழைத்தேன். வேறு எதையோ பார்த்துக் கொண்டிருந்தவள் சட்டென்று என் வார்த்தையைக் கேட்டதும் திரும்பினுள். முதன் முதலில் நான் யாரென்பதை அவள் அடையாளம் கண்டு கொண்டதாகத் தோன்றவில்லை. அவளை நான் சமாதானம் செய்ய எவ்வளவோ முயன்றேன். அவள் அழுதுகொண்டிருக்க வில்லையானுலும்கூட என் வார்த்தைகளால் அவளுக்கு சமாதானம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இருள் கவிழ்ந்து வந்தது. அவள் ஒருத்திதான் அந்த வீட்டில். என்னுல் ஒன்றும் அவளுக்காக செய்யக் கூடவில்லை. யாரையாவது துணைக்கு அனுப்புவதாகச்சொல்லி விட்டு புறப்பட்டேன். ஆனுல் அவள் வீட்டுக்கு ஆள் அனுப்புவது சுலபமான காரியமல்ல. எங்கள் வீட்டு வேலைக்காரியை சிரமப்பட்டு அன்றிரவிற்கு மட்டிலும் அங்கே செல்வதற்கு இணங்க வைத்தேன். சாந்தா தானும் அவளுடன்கூட செல்கிறேன் என்றுள். நான் ஆட்சேபிக்கா விட்டாலும் பார்வதி அவளை அனுப்புவதற்கு இணங்கவில்லை.

இரண்டு நாட்களாக தூக்கம் சரியாக இல்லாமல் போனதால் அன்றைக்கு தூக்கம் எனக்கு நன்ருக வந்து விட்டது. பார்வதியும் தூக்கத்தைக் கலைக்கவில்லை. அன்று நான் எழுந்திருந்தபோது எட்டு மணி அடித்து விட்டது. ஆஸ்பத்திரிக்கு செல்வதற்கு நாழிகை ஆகிவிடுமென்று அவசரமாகப் புறப்பட்டு விட்டேன். வாயிலைத் தாண்டும்போது இரவு லோசனியின் வீட்டிற்குச் சென்றிருந்த எங்கள் வேலைக்காரி எதிரில் வந்தாள். அவசரத்தில் லோசனியைப் பற்றிய விஷயமே மறந்து போய் விட்டிருந்தது. அவளைப் பார்த்ததும் மீனு எப்படி இருக்கிருள் என்று விசாரித்தேன். தான் வரும்போது இன்னும் எழுந்திருக்கவில்லை என்றும் தூங்கிக் கொண்டிருந்தாள் என்று மாத்திரம் சொல்லிவிட்டு தன் அலுவலை கவனிப்பதற்கு அவள் போய் விட்டாள்.

அன்றைக்கு எனக்கும் கொஞ்சம் வேலை அதிகம். வீட்டிற்கு சாப்பிட வரும்போது மூன்று மணி. சாப்பாடு முடிந்த பிறகு நானும் பார்வதியும் சும்மா பேசிக் கொண்டு உட்கார்ந்திருந்தோம். மத்தியானம் வந்த கடிதமொன்றை பார்வதி கொடுத்தாள். கடிதத்தைப் பிரித்தேன். எழுத்து எனக்கு அறிமுகமானதல்ல. யார் கடிதமாயிருக்கலாம் என்று ஆவலுடன்பார்த்தேன். மீனலோசனி! எனக்கு ஆச்சரியமுண்டாயிற்று. அவள் எனக்கு எழுதக் கூடிய விஷயமென்ன! ஆர்வத்துடன் படிக்க ஆரம்பித்தேன்.

டாக்டர் அவர்களே,

"என்னைப் போன்றவர்களின் மீது மனிதர்களுக்கு கருணை இருப்பது அபூர்வம். என்னைப் போன்றவர்களுக்கு கஷ்டம் வந்த பொழுது உதவுவதுகூட மனித தர்மத்திற்கு முற்றும் விரோதமென்று எண்ணுவதே பொது வழக்கம். இந்த நான்கு வருடமாக நான் யாரிடமிருந்தும் கருணையைக் கோரியவள் அல்ல. முந்தா நாள் என் மனுவிற்கு ஒரேயடியாக காய்ச்சல் அதிகமாய் விட்டது.

சுப்புவைத் தவிர என்வீட்டின் பக்கம் வேறு யாரும் கால் வைப்பதில்லை. அவனையே அனுப்பினேன், டாக்டரை அழைத்து வருவதற்கு. தாங்கள் வீட்டில் இல்லை ....வீட்டிற்கு அனுப்பினேன். அவர் நிர்தாட்சண்யமாக

வரமுடியாது என்று சொல்லி அனுப்பி விட்டார். மறுபடியும் உங்களுக்கே சொல்லி அனுப்பினேன். நீங்கள் காலையில் வருகிறேன் என்று சொன்னீர்கள். இதன் நடுவில் மனுவிற்கு ஒவ்வொரு நிமிஷமும் அதிகமாகிக் கொண்டிருந்தது. "காலில் விழுந்தாவது அழைத்துக்கொண்டு வா" என்று மறுபடியும் சுப்புவை அனுப்பினேன். உங்களுக்கென்னவோ தயவு பிறந்தது. நீங்கள் வந்தீர்கள். ஆனால் மனுவை வைத்துக் கொள்ளும் புண்ணியம் எனக்கிருக்கவில்லை. ஆவி பிரிந்து விட்டது. சரி; போகிறது.

நான் யார்—மனு யார்? எங்களுக்குள் உறவு என்ன? என்பது போன்ற யோசனைகளை நீங்கள் செய்யலாம், என்னைப்பற்றி ஜனங்கள் பேசிக் கொள்வதையும் நீங்கள் கேட்டிருக்கலாம். ஆமாம், என் தாயார் தேவடியாளாக இருந்தாள், நானும் அந்தத் தொழிலிற்காகவே பழக்கப் பட்டேன். என் தாயார் என்னைக் கொண்டு மிகுந்த பணத்தைச் சம்பாதிக்க எண்ணினாள். அவளுடைய ஆசையும் நிராசை ஆகவில்லை. ஏனென்றால் பல கனவான்கள் என்னைக் கண்டு மெச்சி மயங்கிப் போனார்கள். ஆனால் மனுவின் மூலமாக என் தாயாரின் ஆசை நிராசையாக வேண்டி வந்தது. மனு—மோகன் என்று அவன் பெயர். பணக்காரர் ஒருவருடைய ஏக புத்திரன். சின்ன வயதிலேயே பெற்றோர்களை இழந்தவன். ஆகையால் அவனை கேட்பவர்கள் யாரும் இல்லை. ஒரு நாள் என் தாயாரின் பழைய நண்பன் ஒருவன் அவனை எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தான். அன்றையிலிருந்து எப்பொழுதும் மனு எங்கள் வீட்டிற்கு வரத் தொடங்கினான் எனக்காக. எங்களுக்கெல்லாம் 'உள்ளம் இருக்கப்படாது' என்று என் தாயார் அடிக்கடி சொல்லிக் கொடுத்திருந்தும்கூட மனுவினிடத்தில் நான் அன்பு காட்டத் தொடங்கினேன். அவனும் என்னிடத்தில் பிரியமாக விருந்தான். எங்கள் போக்கைக் கண்டு என் தாயாருக்குப் பிடிக்கவில்லை. இதற்குள்ளாகவே மனுவின் பணம் முழுதும் எங்கள் பெட்டிக்குள் வந்து சேர்ந்து விட்டது! ஆதலால் இனி அவனால் என் தாயாருக்குப் பிரயோசனமொன்றும் இல்லை!

சொல்லாமல் கொள்ளாமல் மனு எங்கள் வீட்டிற்கு வருவது நின்றுபோய் விட்டது. என் தாயாரிடம் விசாரித்ததில் அவன் விவாகம் செய்து கொண்டு விட்டான் என்று சொன்னாள். மனுவின் விவாக வரலாறைக் கேட்டு எனக்கு மிகுந்த வருத்தமுண்டாயிற்று. இரண்டொரு மாதங்கள் படுத்த படுக்கையாக நோயில் விழுந்து விட்டேன். அப்போதே நான் ஏன் சாகவில்லையோ! பிறகு எனக்கு ஜுரம் இறங்கினதும் எங்கள் வேலைக்காரியின் மூலமாக மனு விவாகம் செய்து கொள்ளவில்லையென்றும், நான் செத்துப் போய்விட்டேன் என்று தாயார் அனுப்பிய செய்தியை நம்பி அவன் அரைப் பைத்தியமாய் விட்டானென்றும் தெரிய வந்தது. அன்றைக்கு இரவே நான் வீட்டை விட்டுக் கிளம்பி விட்டேன். மனுவின் வீட்டிற்கே சென்றேன். அவனுக்கு பைத்தியம் பிடித்து விட்டிருந்தது. கண்ணில் புத்தி மயக்கில் எதையோ விட்டுக் கொண்டதால் இரண்டு கண்களும் குருடாய்ப் போயிருந்தது. எங்களுக்கு கொடுத்தது போக மிஞ்சியிருந்த பணமும் செலவாகி விட்டிருந்தது. ஆனால் என்னிடத்தில் மனு நல்ல

நிலைமையிலிருந்த பொழுது கொடுத்திருந்த சில நகை நட்டுகள் இருந்தன. அவைகளனைத்தையும் விற்று மனுவிற்கு சிகிச்சை செய்வித்தேன். சிகிச்சையினால் அவனுடைய பைத்தியம் பூரணமாக குணமாகா விட்டாலும் சில சமயம் அவன் நினைவுடன் சரியாக இருப்பான். ஆனால் அப்போதும் காய்ச்சல் வந்து கொண்டிருந்தது. எப்படியும், பழைய மனுவை என் தாய் கொன்று விட்டாள். மனுவினுடைய அந்த நிலையில் நான் அவனுடன் அதிக நாள் இருக்க மாட்டேனென்று என் தாயார் எண்ணி இருந்தாள். ஆனால் அவள் கூப்பிட்ட பொழுது நான் அவளுடன் செல்லவில்லை யாகையால் அவளுக்கு மிகுந்த கோபமுண்டாயிற்று. அதற்கு பிறகு நான் அவ்விடத்திலிருப்பதே சிரமமாகப் போய்விட்டது. கடைசிக்கு நானும் மனுவும் ஊரை விட்டே புறப்பட்டு இவ்விடத்திற்கு வந்து விட்டோம். நாளாக ஆக மனுவின் புத்தி பூர்ணமாய் மந்தமடைந்தது. என்ன செய்தும் அவனுக்கு குணமாகவில்லை. கேவலம் "ராணி" என்று என்னை அழைப்பதைத்தவிர்த்து அதிகமாக பேச முடிய வில்லை. ஆனால் அவனுக்கு நான் அருகில் இருப்பது தெரியும். நான் எங்கேயாவது காரியமாகச் சென்றாலும்கூட "ராணி" என்று கூப்பிடுவான். மூன்று வருடங்களாக நாங்கள் இருவரும் இந்த வீட்டில் இருந்தோம். இப்பொழுது அவன் இல்லை. பிறகு எனக்கு இங்கென்ன வேலை?

டாக்டரே, நான் உங்களுக்கு இதையெல்லாம் ஏன் எழுதுகிறேன் என்றால் இவ்வளவு வருடங்களாக எங்களிருவரின் சார்பாக மனிதத் தன்மையான கருணையைக் காட்டியவர்கள் நீங்களும் மற்றும் சுப்புவும்தான். ஆதலால் உங்களிடம் விடை பெற்றுக் கொண்டு போவதற்காக இதை எழுத வேண்டியதாயிற்று. நீங்கள் மனுவின் கடைசிக் காலத்தில் செய்த உதவியை என்றைக்கும் மறக்க முடியாது. என்னைப் போன்ற நாதியற்ற ஒருத்தி உங்களுக்கு எத்தகைய பிரதிப் பலனை அளிக்கக் கூடும்? கடவுள்தான் உங்களுக்கு நன்மை செய்ய வேண்டும்."

இப்படிக்கு

மீனலோசனி

படித்துவிட்டு பார்வதியிடம் கொடுத்தேன். அவளும் படித்தாள். கண்களிரண்டிலும் நீர் தளும்பிற்று. "நான் எத்தகைய பாவி!" என்று முணுமுணுத்தாள். என் மனது என்னவோ ஒரு மாதிரியாக விருந்தது. அதுவும் கூடப் பார்வதியின் பேச்சையே ஆமோதிப்பது போல், "நான் எத்தகைய பாவி!" என்றது.

அன்று மாலை காற்று வாங்குவதற்கு சென்ற பொழுது, பார்வதி தானும் வருவதாகச் சொன்னாள். இருவரும் லோசனியின் வீட்டிற்கே சென்றோம். ஆனால் நாங்கள் செல்வதற்கு முன்பே அவள் போய்விட்டாள். அது எங்கேயோ; யாருக்குத் தெரியும்!

எண்ணக்கடல்:

இன்பக் காட்சிகள்

[கே. வி.]

அருவி பொங்கிப் பொங்கி வழிந்தோடிக் கொண்டிருந்தது. பாறைகளின் மடியில் தவழ்ந்து செல்லும் நீரிலே பன்னிற மலர்கள் அலங்காரமாக மிதந்து போய்க்கொண்டிருப்பதும், நிழலும் ஒளியும் கலந்து செய்யும் வர்ணஜாலங்களும், எங்கே பார்த்தாலும் கண்ணுக்கெட்டிய வரை குன்றும் அதைச் சுற்றிக்குவிந்த செடி கொடிகளின் பசுந் தோற்றமும், இடை விடாது ஒலிக்கும் இன்ப நாதமும் சேர்ந்து, என்னை இந்த உலகத்திலிருந்து எங்கோ கொண்டு போய் விட்டது. மலையில் இருக்கிறோம் என்ற எண்ணமே எனக்கு இல்லை. அது தான் பொதிகைக்கு இயற்கையில் அமைந்த தனிச் சிறப்பா? இருக்கலாம். ஆனால் என் உள்ளத்தில் பல விசித்திரக் கேள்விகள் கிளம்பின.

'பொதிகை சான்றோர் வசிக்கும் இடம்' என்று சொல்லுகிறார்கள். கரடு முரடான மனத்தையும் திருப்பிச் சாந்தப்படுத்துகிற சக்தி அந்த மலைக் காற்றுக்கே உண்டு என்று சொல்லத் தோன்றுகிறது. எப்போது ஆரம்பித்து எதில் போய் முடிவடைவது என்பதைப் பற்றிய அக்கரையே இல்லாமல் குன்றையும், குழியையும் வளப்படுத்திக் கொண்டே செல்லும் அருவியின் மந்திர சக்தியை என்ன வென்று சொல்வது? அது மட்டும் இல்லை. அந்த அழகிய பிரதேசத்தில் அடி எடுத்து வைத்தாலே மனம் விசித்திரக்கனவுகளில் மூழ்கி விடுகிறது. நான் கண்ணைக்கூட மூடவில்லை. ஆனால் நான் கனவு கண்டேன் அது பகற்கனவு அல்ல. இருந்த போதிலும் நான் கண்டது கனவே தான்! என்னுடன் இருந்த நண்பர் கலைப்பித்தர். ஆழ்ந்த யோசனையில் இருந்தார். என்ன யோசனையோ? ஆனால் என்மனசு, சென்ற காலத்தையும் வருங்காலத்தையும் நோக்கிப் பறந்து கொண்டிருந்தது.

இப்போது மனிதனுடைய சௌகரியத்திற் கென்று கணக்கற்ற சாதனங்கள் ஏற்பட்டிருக்கிறது. மோட்டார் ஆகாய விமானம் போன்ற துரிதப்பிரயாண சாதனங்கள். உல்லாசமாகப் பொழுது போக்க சினிமா முதலிய காட்சிகள், மின்சார விளக்குகள். இன்னும் எத்தனையோ வகைகள். இத்தனை இருந்தும் எனக்கென்னவோ இவற்றைக் கண்டாலே பிடிக்க மாட்டேனென்கிறது. இவற்றால் மனதிலே நிம்மதியும் உற்சாகமும் ஏற்படுவதில்லை, நானும் இந்த வசதிகளை என்னளவில் அனுபவிக்காமலில்லை. சில வகைகளில் சௌகரியம் இருப்பதாக உணர்ந்தாலும் இவற்றால் நிரந்தரமான சுகம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆகையால் தான் என் மனம் அடிக்கடி சென்று போன இன்பகரமான அந்தக் காலத்தை நோக்கியே செல்கிறது.

ஏதோ கொஞ்ச தூரம் ரயில் பிரயாணம் செய்தால் மனதுக்கு

உல்லாசமாகத்தான் இருக்கிறது. நீண்ட பயணம் என்று வந்தால் எனக்குச் சொல்ல முடியாத வேதனை ஏற்பட்டு விடுகிறது. இந்தத் தொல்லையில் ஏண்டா வந்து மாட்டிக் கொண்டோம் என்று கோபம் வருகிறது. இந்த உலகத்தி லேயே மோட்டாரைப் போல் நான் வெறுக்கும் சாதனம் வேறெதுவும் கிடையாது. அடடா! அதனுடைய அலறல், கிளப்புகிற புழுதி, வெளிப்படுகிற எண்ணெய் நாற்றம் நினைத்தாலே உடல் சிலிர்க்கிறது. அந்த எண்ணெய் நாற்றத்தை இப்போது நினைத்தாலும் அருவருப்பு உணர்ச்சி ஏற்படுகிறது. இந்தச் சனியனைக் கண்டு பிடித்தவனைப் பார்த்து குரல்வளையைத் திருகலாம் என்ற ஆத்திரத்தைக் கிளப்புகிறது! சொந்தமாக மோட்டார் இல்லாத வயிற்றெரிச்சல் அல்ல இது. மனப்பூர்வமாகச் சொல்லும் வார்த்தை தான். ஆகாய விமானத்தில் நான் பறந்தது இல்லை. அதைப்பற்றி அதிகம் சொல்ல வேண்டியதும் இல்லை அதன் அற்புத ஜாலங்களைப் பற்றி பத்திரிகைகளில் பத்தி பத்தியாகப் படிக்கிறோம் அல்லவா! இதையெல்லாம் நினைக்கும் போது அந்தக்காலத்திலே முப்பது வருஷங்களுக்கு முன்பு கட்டை வண்டியிலே செய்த பிரயாணத்தைப் பற்றிய ஞாபகம் வருகிறது.

கட்டை வண்டிப் பிரயாணத்திலே தனியின்பம். மனமொத்த நண்பர்களோடு உல்லாசமாகப் பேசிக் கொண்டு கட்டை வண்டியில் செய்த பிரயாணங்களைப் போன்ற இனிய அனுபவங்கள் இனி இந்த ஜன்மத்தில் மறுபடியும் சாத்தியமா என்று மனம் தவிக்கிறது. அந்தக் காலத்திலே எங்கள் ஊரிலிருந்து பழனிக்கு யாத்திரை செய்வோம். முப்பது மைல்தூரம். வெண்ணிலா இரவிலே எங்கள் பிரயாணம் கட்டை வண்டிகளில் ஆரம்பமாகும். ஜல் ஜல் என்ற சதங்கையின் நாதத்தோடு இரண்டு மூன்று வண்டிகள் சாலையிலே போய்க் கொண்டிருக்கும். எங்களுடைய பேச்சின் ஒலி அந்த நாதத்தையும் மீறிக்கொண்டு நாலா பக்கத்திலும் கேட்கும். மறு நாள் காலை ஒன்பது மணிக்கு மடத்துக் குளம் என்ற கிராமத்தில் தங்கல். ஆற்றங்கரையின் குளிர்ந்த தென்னந் தோப்புகளுக்கு மத்தியில் சமைத்துச் சாப்பிட்ட பின் இளைப்பாறுவோம். மாலை நான்கு மணிக்கு புறப்பட்டு இரவு ஒன்பது மணிக்கு பழனியை அடைவோம். இந்தப் பிரயாணத்தில் ஏற்பட்ட 'குஷி' இன்று ரயிலிலோ, மோட்டாரிலோ செல்வதால் ஏற்படுமா?

இப்போது பெரிய ஊர்களிலெல்லாம் சினிமாக் கொட்டகைகள் இருக்கின்றன. அரண்மனை போன்ற கட்டிடங்கள், மின்சார விளக்குகள், விசிறிகள் உட்கார சோபா, நாற்காலி, விசிப் பலகைகள். இன்னும் எத்தனையோ சௌகரியங்கள். இவ்வளவு வசதிகளோடு சினிமாப் பார்த்தாலும் மனதிலே உற்சாகம் ஏற்படுவதில்லை. ஒரு காலத்திலே எங்கள் கிராமத்தில் தெற்கத்தியார்கள் வந்து தெருக்கூத்து நடத்தினர்கள். கொட்டகையில்லை, மின்சார விளக்குகளில்லை, உட்கார ஆசனங்கள் இல்லை. ஊர் மத்தியிலே ஒரு மைதானம். நடிகர்கள் தங்க ஒரு சிறு மறைப்பு. வெளிச்சத்திற்கு வண்ணான் பந்தங்கள், திறந்த வெளியிலே உட்கார்ந்து கொண்டு பல மணி நேரங்கள் சேர்ந்தாற்போல் ஜனங்கள் அந்தக் காட்சிகளைப்பார்த்து அனுபவித்து ஆனந்தப் பட்டார்கள். இன்பத்தையும் உற்சாகத்தையும் ஒருங்கே அளித்த அந்தக் காலத்தை இன்னும் மறக்க முடியவில்லை.

இன்று இந்த மின்சார விளக்குகள் ஒரே பேய் வெளிச்சமாய் பார்க்கவும் கண்களைக் கூசும்

படி செய்கிறது. கண்களின் சுய ஒளியைக் கெடுக்கும் இச்சாதனங்களின் பேரில் ஒரே வெறுப்புத்தான் ஏற்படுகிறது. இதனால் இளம் வயதிலே கண்களின் இயற்கைச் சக்தியை இழந்த பலர் கண்ணுக்கு கண்ணாடியை மாட்டிக் கொண்டு திரிகிறார்கள். மண்ணெண்ணெய் விளக்கோ ஒரே புகை மயம். சிறிது ஏமாந்தால் ஆபத்து, அந்த எண்ணெய்க்கும் இப்போது அடிதடி. பழைய எண்ணெய் விளக்குகளின் அருமையை இப்போது உணர்கிறார்கள்: வீட்டுக்கும் அலங்காரம். இந்தக் கார்த்திகை மாதத்திலே தீபாலங்காரம் செய்கிறார்களே அதுவே ஒப்பற்ற காட்சி. தேவர்களுக்கும் கிட்டாத விந்தை.

மோகனமான நிலா இரவுகளிலே ஆண்கள், பெண்கள் அத்தனை பேரும் கும்மி கோலாட்டங்களில் ஈடுபட்டிருப்பார்கள். எங்கள் ஊர் ஜமீன் கிராமம். செம்பவண்ணான் கும்மி வாத்தியார். இந்த ஆட்டங்களில் கலந்துகொள்வதில் அந்தஸ்து என்ற பேச்சே கிடையாது. எல்லோரும் கலந்து கொள்வார்கள். ஜமீன்தார் தம்பிமார்கள் நாலைந்து பேர் கும்மியடிப்பதில் முதன்மை வகிப்பார்கள். ஜமீன்தாரும் ஊர்ப் பெரியவர்களும் உட்கார்ந்து ஆட்டத்தைப் பார்த்து அனுபவித்து மகிழ்வார்கள். திருவிழாக் காலங்களில் இன்னும் விசேஷமான ஆட்ட பாட்டங்கள் நடக்கும். சில இரவுகளில் எங்கள் வீட்டின் முன்புறமுள்ள மைதானத்தில் செல்லப்ப கவுண்டன் உடுக்கையடித்து அண்ணன்மார் பாட்டு பாடுவான். ஆண் பெண் குழந்தை குட்டி அடங்கலும் வாய்திறந்து கேட்கும். இவ்வகையான இன்பப் பொழுதுபோக்கெல்லாம் அந்தக்காலத்திலே. இன்றைய உலகத்திலே மக்களின் உள்ளத்தில் சாந்தியில்லை வெறும் இயந்திரங்களைப்போலவே இயங்குகின்றனர். ஒற்றுமை இல்லை. முகத்திலே தெளிவு இல்லை. யார் முகத்தைப் பார்த்தாலும் சவக்களை தட்டுகிறது, ஓயாத உழைப்பு. ஒரே ஆரவாரம். பலன் ஏமாற்றமே.

ஆனால் அந்தக் காலத்திலே இன்றைக்குப் போல ஜனங்களுக்கு இவ்வளவு தேவைகள் வேண்டியிருக்கவில்லை. உள்ளதோடு திருப்தி. எல்லோரும் மனநிறைவுடன் வாழ்ந்தார்கள். குடும்பங்களெல்லாம் கடன் இல்லாமல் க்ஷேமமாக இருந்தன. ஏழை பணக்காரன் மாச்சரியம் கிடையாது. ஊர் முழுதும் ஒரே குடும்பம். பெரிய தனக்காரர் ஒருவர் இருப்பார். அவர் இட்டது சட்டம். அவரும் வழி தவறிப் போகமாட்டார். பொதுவேலைகள் என்றால் எல்லோருக்கும் அக்கரை. எந்தப் பொருளுக்காகவும் வெளியாரை எதிர்பார்க்க வேண்டியதில்லை. பணப்புழக்கம் அதிகம் கிடையாது. எல்லாம் பண்ட மாற்றலிலே நடந்து வந்தது. ஊர் நிலபுலங்களில் விளையும் தானியங்கள் தான் உணவு. கம்பு, சோளம், கேழ்வரகு, துவரை எள்ளு, கொள்ளு முதலிய தானியங்கள். உப்பிலியன் உப்புக் காய்ச்சுவான். தானியம் பெற்றுக் கொண்டு உப்புக் கொடுப்பான். புளி, மிளகாய் முதலிய மசாலைச் சாமான்கள் காய் கறிகள், வெல்லம் சகலமும் ஊரிலேயே கிடைக்கும். உழவுத் தொழிலுக்கு வேண்டிய கருவிகளைச் செய்ய தச்சன் கருமான் ஆகியவர்கள் இருந்தார்கள். பருத்தி விளையும். பஞ்சு அரைத்துக் கொட்டி பட்டை போட்டு நூற்பது ஒவ்வொரு வீட்டிலும் தினசரி நடக்கும் வேலை. சாலியன் துணி நெய்து கொடுத்து தானியம் பெற்றுப் போவான். ஆமணக்கு எண்ணெய் விளக்கு எரிக்க இருந்தது. வாழ்க்கைக்கு

வேறு என்ன வேண்டும்? காப்பிக் குடி இல்லை, சோப்பு இல்லை, போலீஸ் வழக்குகளில்லை. கோர்ட் சிலவுகளும் கிடையாது. எதுவும் வேண்டாம். எல்லாம் ஊரோடிருந்தது. தேவை குறைவதால் செலவில்லை. கடன் இல்லை.

ஊரில் ஒருவருக்கொருவர் அன்யோன்யம். 'பகைமை' கிடையாது. உபாத்தியாயர் கணக்குப் பிள்ளை போன்ற தனிக்குடும்பங்களுக்கு கிராமத்தார் போட்டி போட்டுக்கொண்டு உதவி செய்வார்கள். அபிமானமாக நடத்துவார்கள். சந்தோஷமான ஒற்றைக் குடும்பம் போல கிராமம் இருந்து வந்தது. இன்றைய நிலை என்ன? பட்டினி, கடன், கட்சிகள், போலி நாகரிகம், இதுதான் இன்றைய காட்சிகள். இந்த நரக வாழ்க்கையிலிருந்து மீள வழியில்லையா என்று மனம் ஏங்குகிறது. அந்தக் காலம் இனிப்பார்க்கக் கிடைக்குமா என்று ஏங்கிச் சிறிது நேரமாவது பழைய இன்ப நினைவுகளுக்கு மனசு தாவி ஓடுகிறது. புண்பட்ட மனதுக்கு அதுதான் சற்று ஆறுதலளித்து வருகிறது.

மீண்டும் அருவியின் கீதமும் நண்பரின் பேச்சும் என்னை இந்த உலகுக்குக் கொண்டு வந்தன.

அன்றைக்குப் பௌர்ணமி என்பதை அப்போது தான் நினைவுக்குக் கொண்டு வருகிறவன் போல் சந்திரனும் கீழ் வானில் தன் மாயா ஜாலத்தைப் புரியத் தொடங்கினன். பொதிகையிடம் உள்ள காதலோ என்னவோ, கொடிகளுக்கிடையேயும் அமுத வெள்ளத்தைப் பொழிய ஆரம்பித்தான்.

அருவியின் ஒலி அந்த அமைதியில் சற்றுப் பலமாகவே கேட்க ஆரம்பித்தது. திரும்பிப் பார்த்தேன். அடடா! அது அருவிதானா? அல்லது சந்திரனுடைய அமுத வெள்ளமே அப்படிப் பாய்ந்தோடுகிறதா? மறுபடியும் மனம் கனவில்தான் மூழ்க ஆரம்பிக்கிறது!



தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
199787

வாழ்க்கைச் சித்திரம்:

தர்மசங்கடம்

பி. கோதண்டராமன் எம். ஏ; பி, எல்

"என்னப்பா, பசுபதி ஒருமாதிரியாக இருக்கிருயே, என்ன சேதி? காதல் என்னும் கடலில் மூழ்கித் தத்தளிக்கிருயா என்ன!"

"நான் தத்தளிப்பது என்னவோ உண்மைதான். ஆனல், அது என் உள்ளத்தெழுந்த காதலினல் மட்டும் அல்ல. என்னே ஒருத்தி நேசிக்கிருள். ஆனல் நானே? இப்போது ஒரு தரும சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன். அதிலிருந்து வெளியேறுவது எப்படி என்பதுதான் யோசனையாயிருக்கிறது"

"பசுபதி, நீ காதலிக்கவில்லையென்றும், வேருெருத்தியே உன்னைக் காதலிக்கிருளென்றும் சொல்கிருய். பண்டைத் தமிழ்ப் புலவர் இதைத்தான் கைக்கிளை அல்லது ஒருதலைக்காமம் என்பார்கள். இவ்வளவு தூரம் விளங்குகிறது. ஆனல், நீ ஏதோ தரும சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டிருப்பதாகக் கூறுகிருயே, அதுதான் எனக்குப் புரியவில்லை."

"முரளி, சொல்லுகிறேன் கேள். நான் பிரபல வக்கீலான மாதவய்யரின் ஜூனியராக இருப்பது உனக்குத் தெரியுமோ இல்லையோ. நாள் தோறும் விடியுமுன் எழுந்து முகச்சவரம் செய்து, மேஜோடு, பூட்சு, பைஜாமா, நிஜார், பனியன், குடுத்தா, கையில்லாத கோட்டு, கழுத்துப்பட்டை, கழுத்துச் சுருக்கு கோட்டு தலைப்பாகை இவ்வளவையும் அணிந்து, வழக்கு தஸ்தாவேஜுகள் அடங்கிய கைப் பெட்டியுடன் வீட்டை விட்டுக் கிளம்பும் போது மணி ஆறு டாண் என்றடிக்கும்.

பிரபல சேதுராமய்யர் காப்பி கிளப்பில், சாம்பாருடன் இரண்டு இட்டிலியையும் ஒரு கோப்பைக் காப்பியையும் வயிற்றிலே நிரப்பி விட்டுப் புரசை வாக்கம் முனையில் பஸ்ஸில் ஏறி, மௌண்டு ரோட்டில் இறங்கி வேறு பஸ்ஸில் ஏறி, மயிலாப்பூரை அடைய சுமார் ஏழு ஆகும். ஏழேகாலுக்கெல்லாம் கமல விலாசில் என் சீனியரின் ஆபீஸ் அறையில் அமர்ந்து, அங்குள்ள அலமாரியிலிருந்து புத்தகம் புத்தகமாக எடுத்து பெரிய மேஜையின் மீது பரப்பி 'அத்தாரடி வேட்டை' செய்ய, அதாவது குறித்த விஷயத்திற்குச் சட்ட ஆதாரந்தேட ஆரம்பித்து விடுவேன். சுமார் எட்டு மணிக்கு என் சீனியர் வந்து, "நான் நேற்று சொன்ன விஷயத்திற்கு அத்தாரிடி" அகப்பட்டதா என்று கேட்பார். "ஆகா" என்று தலையசைத்துப் பல உயர்தரக் கோர்ட்டுகள், பிரிவி கௌன்சில் தீர்ப்புகளை எடுத்துக் காட்டுவேன். அவற்றையெல்லாம் பார்த்து விட்டு, "ஊ ஊம், நம்முடைய கேஸுக்கு இவை அவ்வளவு பொருத்தமாயில்லையே" என்று சொல்லி, இந்த நிலைக்குச் சரியான ஆதாரம் வேண்டுமென வற்புறுத்திவிட்டு மேலே போய் வீணை மீட்ட ஆரம்பித்துவிடுவார். (அவர் நல்ல சங்கீத ரசிகர்) நான் மீண்டும் பத்தகங்களை யெல்லாம் புரட்டிப் பார்த்து என் மண்

டையை உடைத்துக் கொள்வேன். சரியான குறிப்புகள் அகப்பட்டால் அவற்றை என் "அத்தாரிடி" நோட்டுப் புத்தகத்தில் குறித்துக் கொள்வேன். இதற்குள் பத்து அடித்துவிடும், சீனியர் வீட்டிலேயே சாப்பிட்டு விட்டு அவருடன் மோட்டாரில் கோர்ட்டுக்குச் செல்வேன். அன்று கோர்ட்டில் வேலையில்லாவிட்டால் அவர் 'பார் அசோசியேஷ'னில் யாருடனாவது அரட்டையடிப்பார்; இல்லையேல் சாய்வு நாற்காலியில் காலை நீட்டிக்கொண்டு குறட்டை விடுவார். நான் ஐகோர்ட்டு கட்டிடம் முழுமையும் ஒரு சுற்று சுற்றி வருவேன். இடையிடையே ஒரிஜினல் சயிட் கோர்ட்டிலும், தலைமை நீதிபதி கோர்ட்டிலும் சிறிது நேரம் உட்கார்ந்து வழக்குகளின் போக்கைப் பார்ப்பேன். மாலை ஆறு மணிக்குச் சீனியரிடம் விடைபெற்றுக் கொள்வேன். அப்போது இன்னும் புதிய 'பாயின்டு'களுக்கு ஆதாரந்தேடி வைக்கும்படி சொல்வார். அதைக் குறித்துக் கொண்டு வீடு செல்வேன். உடைகள் ஒவ்வொன்றையும் அகற்றி விட்டு, தோத்தி தரித்து, ஓட்டலுக்குப் பிரயாணமாவேன். மீண்டும் பிறகு மணி பத்தரை வரையில் புத்தகாலயத்தில் புத்தகங்களைப் புரட்டும் வேலை நடைபெறும். பத்தரைக்குக் கடைசி பஸ்ஸில் ஏறிக் கொண்டு புரசைக்குத் திருப்பிச் செல்வேன். சில சமயம் என் சீனியர் வழக்குக் கட்டுகளைக் கொடுத்துப் படித்து வரும்படி சொல்வார்.

அவற்றையும் எடுத்துச் சென்று படுக்கையில் படுத்துக் கொண்டே கட்டு பூராவையும் படித்துக் குறிப்பெடுத்துவிட்டு பனிரண்டு மணிக்குக் கண்ணயர்வேன். அடுத்த நாள் வழக்குச் சம்பந்தமான வாதப் பிரதிவாதங்கள், தஸ்தாவேஜுகள், சான்றுகள், இவற்றின் சாரத்தை சீனியருக்கு எடுத்துக் கூறுவேன். பின்னர் எங்கள் கட்சிக்கு வேண்டிய சட்ட ஆதாரங்களைத் தேடும் வேலை ஆரம்பமாகும். இரவும் பகலும் என் வேலை இந்த மாதிரியாகத்தான் இருக்கும். அடே அப்பா, ஜூனியர் வக்கீலின் வாழ்வு இப்பொழுதாவது தெரிகிறதா? அது போகட்டும், ஞாயிற்றுக் கிழமையாவது ஓய்வு உண்டென்று எண்ணுகிறாயா? ஞாயிறு காலை முதல் மாலை வரையில் சீனியர் பங்களாவிலேயே முகாம் போடவேண்டும். வழக்கின் தஸ்தாவேஜுகளைப் பரிசீலனை செய்து கட்சிக்காரர்களுடன் பேசித்தெளிதல் ஆகிய வேலைகள் மும்முரமாக நடக்கும். சீனியரின் வீட்டிலேயே அன்று காப்பி, சாப்பாடு டிப்பன் யாவும் நடக்கும். என் சீனியருக்கு நானொருவனே ஜுனியர். என்னுடன் போட்டி யிடுபவர் எவருமில்லாததால் என் பாடு கொண்டாட்டம், கட்சிக்காரர்கள் அவ்வப்போது சீனியருக்குப் பீஸ் கொடுக்கும் போது என் கையிலும் ரகசியமாக ஐம்பது அல்லது அறுபது விழும். என் சீனியர் ஆபீசிலில்லாத நேரம், நானே தர்பார் நடத்துவேன். காலை சுமார் எட்டரை மணிக்கு உடம்பில் சுறுசுறுப்பேற்ற சமையற்காரனைக் கூப்பிட்டு ஒரு கோப்பை காப்பி சூடாகக் கொண்டுவரச் சொல்வேன். அது வந்ததும் சாப்பிட்டுவிட்டு பத்தரை வரை வேலையை ஊக்கமாகப் பார்ப்பேன்.

இந்த மாதிரிதான் என் தினசரி வாழ்க்கை நடந்து வருகின்றது. ஆனால், திடுமென்று எனக்குச் சனி பிடிக்க வாரம்பித்தது. ஒரு நாள் எட்டரை மணிக்கு 'சங்கரா' என்று கூப்பிட்டேன். சமையற்காரன் சங்கரன் அப்போது வீட்டிலில்லை. என் குரலைக் கேட்டு சீனியரின் மகள் கனகவல்லி ஆபீசின் கதவண்டை வந்து நின்று சுற்று முற்றும் பார்த்துவிட்டு,

நான் தனியாகவே இருப்பதைக் கண்டு, "சங்கரன் மார்க்கெட்டுக்குப் போயிருக்கிருன். காப்பி தானே வேண்டும்? நான் இதோ கொண்டு வருகிறேன்" என்று உள்ளே சென்று இரண்டு நிமிஷத்திற்குள் காப்பி கொண்டுவந்து என் மேசைமீது வைத்து விட்டு மின்போல மறைந்து விட்டாள். அடுத்த நாள் நான் இதே காரணத்திற்காகச் சங்கரனைக் கூப்பிட சங்கரன் வந்து 'இதோ கொண்டு வருகிறேன்' என்று சொல்லி உள்ளே சென்ருன். அதற்குள் கனகவல்லி காப்பியும் கையுமாக என் முன் காட்சியளித்தாள். காப்பியை அவளிடமிருந்து வாங்கிக் கொண்டு 'ரொம்ப வந்தனம்' என்றேன். அது முதற்கொண்டு கனகவல்லி நான் சங்கரனைக் கூப்பிடுவதற்காகக் காத்திராமல் சரியாக எட்டரை மணிக்குத்தானே காப்பி கொண்டு வருவாள். அப்போது ஆபீசில் எவரும் இல்லையானல் என் நாற்காலிக்குப் பின்புறமாக நின்று நான் 'அத்தாரிடி' தேடும் வேலையைச் சிறிது நேரம் பார்த்து விட்டுச் செல்வாள். ஆபீசில் வேறு யாராவது காணப்பட்டால், கதவிடுக்கில் நின்று கொண்டு, 'இதோ காப்பி' என்பாள். நான் போய் அவளிடமிருந்து காப்பியை வாங்கி வருவேன். இவ்விதமாக தினந்தோறும் எனக்கு அவளே காப்பி கொண்டுவந்து கொடுக்கும் வழக்கம் ஏற்பட்டு விட்டது.

நாள் செல்லச் செல்ல, கனகவல்லி எனக்குக் காப்பி கொடுத்து விட்டுக் கொஞ்ச நேரம் ஆபீசு அறையில் நின்று என்னை ஏதாவதொரு பேச்சுக் கிழுப்பாள். 'உங்கள் வீடு தூரமோ?' ஓட்டலிலா சாப்பிடுகிறீர்கள்? 'ஓட்டல் சாப்பாடு உடம்புக்கு ஒத்துக் காதே' என்றெல்லாம் கேட்பாள். நானும் தக்கபடி விடையளிப்பேன். ஒருநாள் கையில் ஷேக்ஸ்பியர் எழுதிய 'ஹாம் லெட்டு' நாடகத்தை எடுத்துக்கொண்டு அவள் இப்போது ஜூனியர் பி. ஏ படித்துக் கொண்டிருக்கிருள். ஒரு பக்கத்தில் சில வரிகளைக் காட்டி, "இதற்கு அர்த்தம் புரியவில்லை. கொஞ்சம் சொல்லுங்கள்" என்பாள். நானும் அவளிடமிருந்து புத்தகத்தை வாங்கிப் படித்து விட்டு, விளக்கஞ் செய்வேன். ஒரு சமயம், "இன்று பத்திரிகை பார்த்தீர்களோ?" என்பாள். ராஜீயத்திலும் பேச்சு போகும். நாங்கள் இவ்வித மிருக்கையில், என் சீனியர் ஒருநாள் திடீரென்று அறையில் நுழைந்தார். நாங்கள் இருவரும் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு குறு நகையுடன் அப்படியே திரும்பிப் போய்விட்டார். இந்த நிலையில் அத்தாரிடி வேட்டையின் அழகை என்ன வென்று சொல்வது? கோர்ட்டிலிருக்கையில் வக்கீல் அசோசியேஷன் புத்தகாலயத்தில் உட்கார்ந்து கொண்டு அத்தாரிடி வேட்டையிலிறங்க நேரிடும்.

காலை நேரத்தில் இவ்விதமாக என் பொழுதைப் போக்கி வந்த கனகவல்லி இரவிலாவது என்னைச் சும்மா விட்டாளா? அதுதான் இல்லை. அந்த மகராசி ஒருநாள் இரவு கையில் ஒரு கோப்பை பாலுடன் ஆபீசு அறைக்கு வந்தாள். பின்னர் அது தினந்தோறும் நடைபெறும் சம்பவமாய்விட்டது. ஒரு நாளிரவு பால் கொண்டுவந்து மேசைமீது வைத்துவிட்டு என் நாற்காலியைப் பிடித்துக் கொண்டே, "நான் உங்களை ஒன்று கேட்க வேண்டும்" என்ருள்.

"என்ன கேட்க வேண்டும்?"

"கேட்கவேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறது. கேட்கலாமா?"

"அதற்கென்ன? தாராளமாய்க் கேளேன். ஏன் இவ்வளவு பீடிகை?"

அவள் கொஞ்சம் தயங்கினாள். பின்னர், "நீங்கள் என்னைக்கலியாணஞ் செய்து கொள்ளுகிறீர்களா?" என்றாள்.

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. நான் இம்மாதிரி விஷயங்களில் கொஞ்சம் கர்நாடகம். இக்காலத்துப் பெண்கள் துணிச்சல் எனக்குக் கிடையாது. அவளை உற்றுப் பார்த்தேன். பின்னர் தலை கவிழ்ந்தேன். கனகவல்லி கறுப்பு நிறம். முன் பற்கள் கொஞ்சம் நீண்டிருக்கும். மூக்குக் கண்ணாடி வேறு. அவள் குரூபியென்று சொல்லுவதற்கில்லை. முகத்தில் களை உண்டு. கனகவல்லி ஒருநாள் தலை கோதிக்கொண்டு ஆபீசு அறையில் நுழைந்தபோது, கறுத்து, அடர்ந்து, சிற்றலைகள் போலச் சுருள் சுருளாய் இருந்த அவள் கூந்தல் முழங்கால் வரையில் தொங்கிய அழகை நான் பார்த்திருக்கிறேன். அவள் பேச்சின் சாமர்த்தியத்தையும் ஆழ்ந்த அறிவையும் நான் உணர்ந்திருக்கிறேன். ஆனால், அவள் என்னவோ எனக்குப் பிடிக்கவில்லை. அவளிடம் எனக்கு எந்தவித உணர்ச்சியு மேற்படவில்லை. நான் பதிலொன்றும் சொல்லாமல் அப்படியே இருந்தேன்.

"என், பதில் சொல்ல சங்கோசமாயிருக்கிறதா?"

"இல்லை, நான் இப்போது கலியாணஞ் செய்து கொள்வதாயில்லை."

"என்னைப் பண்ணிக்கொள்ள இஷ்டமில்லையா?"

நான் மௌனஞ் சாதித்தேன்.

"அவகாசமாகச் சிந்தித்துப் பாருங்கள்" என்று சொல்லி அவள் உள்ளே போய்விட்டாள்.

அடுத்த நாள் வந்து அதே கேள்வியைப் போட்டு விடுவாளோ என்று எனக்குப் பயமாயிருந்தது. அவள் வராதிருப்பாளா? வந்தாள். வந்தவுடனேயே அவளைப் பார்த்து "அப்பா, ஒரு 'லா பாயிண்டு' பார்க்கச் சொல்லியிருக்கிறார். இன்னும் மூன்று நாட்களுள் கேஸ் ஜஸ்டிஸ் சந்திரசேகர அய்யர் முன் வரும். நான் கவனமாகப் புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். மன்னிக்கவேண்டும்" என்றேன்.

"ஆகா, நன்றாகப் பாருங்கள். நான் போய்வருகிறேன்." என்று சொல்லிப் போய்விட்டாள்.

அடுத்த நாள் வந்தாள்.

"லா பாயிண்டு பார்த்திருப்பீர்கள். இன்று அதிக வேலையிருக்காது என்று எண்ணுகிறேன்" என்றாள்.

"இல்லை கொஞ்சம் இருக்கிறது" என்றேன்.

"பரவாயில்லை நாளைக்கு ஞாயிற்றுக் கிழமைதானே. அப்பாவும் காலையில் 'ரெட் இல்ஸுக்கு' உல்லாசமாகக் காரில் போய் வரப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்" என்றாள்.

நான் சும்மா இருந்தேன்.

"இதோ பாருங்கள்! நான் எங்கப்பாவுக்கு ஒரே பெண். என்னைக் கலியாணம் செய்து கொள்ளுங்கள். நீங்கள் வீட்டோடு இருக்கலாம். அப்பா இன்னும் கொஞ்சகாலத்தில் ஓய்வு எடுத்துக் கொள்ளப் போகிறார். அதற்குள் எனக்குக் கலியாணஞ் செய்து விட விரும்புகிறார். என்னை மணந்தால், அப்பாவின் கேஸ்கள், கட்சிக்காரர்கள், இந்தப் புத்தகங்கள் எல்லாம் உங்களுக்கே வரும். அப்புறம் இந்த வீட்டுக்கு நீங்களே எசமான். என்ன சொல்கிறீர்கள்?"

எனக்கு ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. "கனகவல்லி, அப்பா

வந்தாலும் வந்துவிடுவார்'' என்று கதவின் பக்கமாகப் பார்த்தேன்.

"அப்பா இப்போது வரமாட்டார். வந்தாலும் பாதகமில்லை. நாமிருவரும் பேசுவதைப் பார்த்து அப்படியே போய்விடுவார். நான் கேட்டதற்குப் பதில் சொல்லுங்கள். உங்களுக்கு இஷ்டமில்லையா?''

"கனகம், இதெல்லாம் பெரியவர்கள் யோசித்து முடிவு செய்ய வேண்டிய விஷயமாயிற்றே.''

"உங்கள் வாழ்க்கையைப் பற்றி பெரியோர்களா யோசித்து முடிவு செய்ய வேண்டும்? அதில் உங்களுக்குச் சிரத்தை கிடையாதா?''

"அப்படியல்ல, உன் தகப்பனார் தானே இவ்விஷயத்தில் ஈடுபட வேண்டும்.''

"என் விஷயத்தில் என்னிஷ்டப்படி தான் எல்லாம் நடக்கும். என் தாயார் குறுக்கிடமாட்டாள். அப்பாவும் என் இஷ்டப்படியே தான் நடப்பார்.''

"உன் பெற்றோர்கள் அப்படி இருக்கலாம். ஆனல், நான் பெற்றோர்களைக் கலக்காமல் இதை முடிவு செய்யலாமா?''

"பெற்றோர்களைப் பின்பு கலந்து யோசிக்கலாம். உங்கள் இஷ்டத்தை முதலில் சொல்லுங்கள்.''

"கனகம், நாளைக்கு பதில் சொல்லுகிறேன்.''

"சரி'' என்று அவள் போய்விட்டாள்.

இவ்வாறு நடந்ததின் பின் ஒரு வாரமாக நான் என் சீனியரின் பங்களாவுக்குப் போகவில்லை. இன்று காலை, ஒரு ஆள் என் சீனியரிடமிருந்து ஒரு கடிதம் கொண்டு வந்து கொடுத்தான். அதில் அவர் நான் ஆபீசுக்கு ஏன் வரவில்லையென்று கவலையுடன் கேட்டிருந்தார். அந்த ஆள், "மறந்து விட்டனுங்க, இதைச் சின்னம்மா உங்களிடம் கொடுக்கச் சொன்னுங்க'' என்று மற்ருெரு கடிதத்தையும் தந்தான். அதில் பின் வருமாறு கண்டிருந்தது.

"என் பிரிய நண்பரே! எனக்கு உங்களை ரொம்பவும் பிடித்திருக்கிறது. நான் உங்களை மணக்க விரும்புகிறேன். நான் கறுப்பு என்று யோசிக்காதீர்கள். என் உள்ளம் கறுப்பல்ல. நான் உங்களைத் தூய அன்புடன் நேசிக்கிறேன். நாம் இருவரும் மணந்து கொண்டால் இன்பமாக வாழலாம் என்று நம்புகிறேன். நான் உமது தருமபத்தினியாக இருந்து உம்முடைய வேலை யாவற்றிலும் சரிசமானமாகப் பங்கெடுத்துக்கொள்வேன். கலியாணத்திற்குப் பின்னும் தொடர்ந்து படித்து, பி. ஏ. வைப் பூர்த்தி செய்து, பி. எல். லுக்கும் படித்துத் தேறி உங்களுடன் கூட்டு வழக்கறிஞராக "பிராக்டிஸ்'' செய்ய விரும்புகிறேன். பொதுநல வாழ்விலும் அதேபோல ஒன்ருக ஈடுபடுவோம். நான் நவீன பெண்ணயிருந்தாலும், நம்முடைய பழைய சமூக முறையில் உள்ள நல்ல விஷயங்களைக் கைவிடாமல் அவற்றின் படியே நடப்பேன். படித்த பெண் என்ற கர்வமின்றி உமக்கு அடங்கியிருப்பேன். என்னைப் புறக்கணிக்க வேண்டாம். வலிய வருகிற சீதேவியை உதைத்துத் தள்ளாதீர். உங்களை ஒரு வாரமாகப் பார்க்காதது எனக்கு என்னவோ மாதிரியாக இருக்கிறது. உடனே வாருங்கள்''

என் சீனியருக்கு மட்டும் நான் உடல் நலமில்லாதிருந்ததால் வர முடியவில்லையென்றும், நாளைய தினம் வருவதாயும் பதிலெழுதி அனுப்பியிருக்கிறேன். நாளைய தினம் கமல விலாசுக்குப் போக வேண்டும். கனகவல்லிக்கு நான்

என்ன பதில் சொல்வது? அவளுடைய நடவடிக்கையை யெல்லாம் அவளுடைய தகப்பனர் அறிந்திருப்பதுடன், அவற்றைப் பூரணமாக ஆதரிக்கிருர் என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. அவரே ஒரு கால் கனகவல்லி விஷயமாக என்னை நேரில் கேட்கக் கூடும். நானே ஜூனியர். போட்டியும் பொருமையுமுள்ள இந்த வக்கீல் தொழிலில் அவரது ஆதரவிலேதான் நான் தலையெடுக்க முடியும் அவருடைய மனங் கோணுமல் நடந்து கொள்வது முக்கியம். இந்த நிலைமை தருமசங்கடமாயிருக்கிறது. என்ன செய்வதெனத் தெரியவில்லை''

கொஞ்ச நேரம் யோசனையில் ஆழ்ந்த பின் நண்பன் பின் வருமாறு சொன்னன்.

"அடே பசுபதி, பேசாமல் கனகவல்லியை மணக்க ஒப்புக்கொள் உண்மையில் அவள் வலிய வருகிற ஸ்ரீதேவியே. அவளை உதாசீனஞ் செய்யாதே, இதுவே என் புத்திமதி''

"அப்பனே அது முடியாத காரியம்.''

"என்? அவள் உனக்குக் கொஞ்சங்கூடவா பிடிக்கவில்லை? அவள் அட்டக் கறுப்பா?''

"அவள் கறுப்பென்று நான் சொல்லவில்லை. சிவப்பாயில்லை என்றுதான் சொல்லலாம். மற்ற லட்சணங்கள் அவளிடம் இருக்கின்றன. ஆயினும், என்னவோ அவள் எனக்குப் பிடிக்கவில்லை. அவள் என்னிடம் தனியாக நெருங்கிப் பேசியிருந்தும் அவளிடம் எனக்குக் கொஞ்சங்கூட காதலுணர்ச்சி எழவில்லை. படிப்பும் செல்வமும் இருந்தால் போதுமா? என் மனதிற்குப் பிடிக்காத பெண்ணை மணந்து என் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்ளவா சொல்லுகிருய்?''

"அவளை மணம் செய்து கொண்டபின் அவளுடன் பழகப் பழகப் பாசமும் உண்மையான ஆழ்ந்த காதலும் ஏற்படக் கூடும். நம்முடைய பெற்றேர்கள் இவ்விதமாகத்தான் வாழ்ந்தார்கள். கனகவல்லி நிறத்தில் சிறிது கறுப்பாயிருந்தாலும் உன்னேடு அடக்கமாயிருப்பாள். இக்காலத்துப் பெண்களைப் போலத் திரியாமல் உனக்கு உண்மையாக இருப்பாள் உன் வாழ்க்கையில் நிம்மதி ஏற்படும். இது ஒரு பெரிய சம்பத்தல்லவா?''

"காதலில்லா வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? எனக்கு வேண்டாமப்பா. வேறு ஏதாகிலும் சொல்லு.''

"பசுபதி, இக்காதல் வெறியால் பலபேர்களின் வாழ்க்கை குட்டிச் சுவராய்ப் போயிருக்கிறது. காதல் என்னும் பெயரால் காமமே எங்கும் காண்கிருேம். இக்காலப்பெண்களில் பாதிப்பேர், சுதந்திரம் என்னும் பெயரால் பெரிய ராங்கிகளாகவும், ஒழுக்கம் கெட்டவர்களாகவும் ஆகிவிடுகின்றனர். சிறிது படித்து விட்டால் தலை கிறுகிறுத்து விடுகின்றது. என்ன பகட்டு! கணவனுடைய நண்பர்களுடன் தனித்து உறவாட உரிமை ஏற்படுத்திக் கொள்வார்கள். அந்தக் கதை எதற்கு? அழகிகளைத் தேடித் திரியாதே. இந்த நவீனப் பெண்களின் காதலை நம்பாதே. குடும்ப வாழ்க்கைக்குரிய பெண்ணே உனக்கு அமைதி தருவாள். கனகவல்லியே உனக்கு ஏற்றவள்''

"வேண்டாமப்பா. வீண் பிரசங்கம். இந்த விஷயத்தில் உன்பேச்சை நான் கேட்கப் போவதில்லை. கனக

வல்லியை நான் மணக்கப் போவ தில்லை.''

“அப்புறம்?''

“அதுதான் என் பிரச்னை, நாளைக் குக் கனகவல்லிக்கும் என் சீனிய ருக்கும் என்ன பதில் சொல்வ தென்றுதான் யோசித்த வண்ண மாயிருக்கிறேன். அவளை மணக்க மறுத்தால், என் எதிர்கால உத்தி யோக வாழ்க்கை பாழ். இணங் கினல் என் அக வாழ்வு பாழ். என் உத்தியோக நலத்திற்காக என் அக வாழ்வைப் பறிகொடுக்க வேண்டி யதுதானு? சரி, என்னைச் சற்று தனித்து விடு. இன்றிரவு ஒரு முடிவுக்கு வருகிறேன்.''

புதுக்கதை:

கயிறறுந்த காற்றாடி

[வெ. ராம ராவ்]

திருச்சி

அன்புள்ள அக்கா, 15-3-41.

"சீக்கிரம் கலியாணம் செய்து கொள்; கலியாணம் செய்து கொள்" என்று அடிக்கடி வற்புறுத்தி எழுதி, நீ என்னைத் தொந்தரவு செய்து வருகிறாய். நீ எழுதும் ஒவ்வொரு விஷயமும் என் மனதுக்கு பிடித்துத்தான் இருக்கிறது; ஆனாலும் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் எனக்குக் கொஞ்சம் கூட நீ சொல்வது பிடிக்கவில்லை.

நாற்பது கடந்தவன் நான்; மூன்று குழந்தைகளுக்குத் தகப்பன்! வாழ்க்கையின் விளையாட்டில் சரியானநடு ஆட்டத்திலேஎன்னைத் தனியே தவிக்க விட்டு மறைந்து விட்டாள்என்வாழ்க்கைத்துணைவி. அந்த வெற்றிடத்தை இன்னொரு புதுத் துணைவியைக் கொண்டு மேலும் வாழ்வைத் தொடங்கச் சொல்லுகிறாய் நீ. எனக்கும் சம்மதமே. ஆனால் இந்த நிலையில் இன்றைக்கெல்லாம் ரொம்ப அதிகமாக இருந்தால் இருபது அல்லது இருபத்திரண்டு வயதுள்ள, வசந்தத்தில் மலர்ந்து பொலியும், அனுபவமற்ற இள நங்கை ஒருத்தியை என்னைப்போன்றவன் மணப்பதில் என்ன பயன்? ஒரு விதமான அச்சமும் அடக்கமும் கலந்த மனப்பான்மையுடன் மயங்கித் தயங்கி அவள் என் வீட்டில் நுழைவாள். "வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்தது" என்று சொல்லுவார்களே, அந்த நிலையில் இருக்கும் என் குடும்பத்தில் அவளுடைய வாழ்வு எப்படி இருக்கும்? அன்புள்ள தாயை இழந்து பரிதவிக்கும் என் குழந்தைகள் மூன்றையும் எந்த மாதிரி நோக்குடன் அவள் பார்ப்பாள்?

பத்மாவுக்கு இப்பொழுது வயது பதினொன்றாகிறது; அம்மாவையே உரித்து வைத்தாற்போல் அழகாக இருக்கிறாள். நான் இப்பொழுது மறுபடியும் கலியாணம் செய்து கொண்டால் அக்கா, நீயே சற்று நிதானமாக யோசித்துப்பார்; அவளுக்கு உலக விவகாரங்கள் காய் மறைவு, இலை மறைவாகத்தெரியும் வயது. மற்றவர்களைவிட மாற்றாந் தாயின் கொடுமை அவளைத்தான் வெகு கடூரமாகப் பாதிக்கும். அவளோ எனக்கு மிக அருமையானவள். நீ சொல்லுகிறபடியே ஒரு ஏழ்மையான குடும்பத்திலிருந்து தங்கமான பெண்ணாகப் பார்த்து கலியாணம் செய்து கொள்வதாகவே வைத்துக்கொள்வோம். அப்பொழுது மட்டும் என்ன? மாற்றாந் தாய் என்னும் பட்டம் கிடைத்ததும் அந்தப் பெண்ணின் தங்கமான குணம், இரும்பாக மாறிவிட்டால்? எதற்காக அக்கா அந்த விஷப் பரீட்சை!

எட்டு வயது ராமுக்கும் நான்கு வயது முத்துவுக்கும் தங்கள் தாயை இழந்த துக்கம் மறந்தா போகும்? என் பூரண அன்பால் அவர்களை என்றும் வாடாமல்லிகைகளாக வைத்திருக்க பாடு பட்டு வருகிறேன். தகப்பனின் அன்பு என்பது

நல்ல கடுங் கோடையில், புதிதாக முளை விட்டுள்ள செடிகளுக்கு தோட்டக்காரன் தன்கையால் அள்ளி தண்ணீர் தெளிப்பது போன்றது; ஆகாயத்திலிருந்து மழை பொழிவது போல் பாய்ந்து வரும் அமிருத தாரை தரும் வளத்தையும், செழிப்பையும் கேவலம் இந்தத் தோட்டக்காரனின் தூவல் தரமுடியுமா? தாயின் வாஞ்சைக்கு இணையாக மழை ஒன்றைத் தான் சொல்லலாம். வேறு ஒன்றும் அதற்கு இணையாகாது.

ஒரு, நாள் கிழமை என்று வந்தாளுல், அன்று எங்கள் வீட்டின் நிலைமையைப்பற்றி என்னவென்று சொல்லட்டும்? குழந்தைகளின் தத்தளிப்பைக்கண்டு என் கடின சித்தமும் சற்று கலங்கத்தான் செய்கிறது. சமையல்காரன் செய்யும் பலவகைப் பலகாரதினுசுகள் பார்வைக்கு வெகு பகட்டாகத்தான் இருக்கின்றன, ருசியும் பரவாயில்லை. இருந்தாலும் தாயின் புன் முறுவலோடு அவற்றை உண்டு வந்திருந்த குழந்தைகளுக்கு இது சரியாக இறங்குவதே இல்லை. இதை அனேக முறை என் கண்ணுல் கண்டிருக்கிறேன். துக்கம் தாங்காமல் தனிமையில் கண்ணீரும் வடித்திருக்கிறேன்.

இதையெல்லாம் பார்க்கும் பொழுது எனக்கு ஒன்று தோன்றுகிறது. பெண்மையின் இனிமை மிக்க குழைந்த குரலில், தென்றலில் அசைந்து கொடுக்கும் புடவையின் சுளிப்பில், குலுங்கும் வளைகளின் பின்னணி கீதத்தில், மெட்டியின் தாளவரிசையில், களுக்கென்று சிரிக்கும் மோகன மயக்கில், இவைகளிலெல்லாம் உள்ள ஒரு வகையான இனிய இன்ப உணர்ச்சி அற்ற இந்த வீட்டிலே, சே, சே. வீடா இது? வறண்ட பாலை வனத்திலுள்ள பாழ்பட்ட ஒரு பழைய சத்திரத்தில், அல்ல— சுடுகாட்டில், ஆம், அப்படிச் சொல்வதுதான் பொருந்தும். இங்கே அந்த இன்பம் எங்கே?

நான் இருதலைக்கொள்ளி எறும்பின் நிலையில் இருக்கிறேன்; விவாகம் செய்து கொள்ளவேண்டும் என்றுவிருப்பம்தான். ஆனுல்குழந்தைகளுக்கு துன்பம் ஏற்படாத வகையில் அமையவேண்டும் அந்த விவாகம். அது தான் நடைமுறையில் எப்படி சாத்தியம் என்று விளங்கவில்லை. யோசனை செய்து செய்து தலை சுழல்கிறது தான் மிச்சம். ஒருபத்துப் பதினைந்து நாள் இங்கு வந்து தங்கிவிட்டுப்போ. அதிகமாக நான் எழுதுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? ஒரு பத்து நாளைய இருக்கைக்காக நீ அவ்வளவு தூரத்திலிருந்து உன்னுடைய சௌகரியங்களை விட்டு விட்டு வர முடியுமா? அப்படித் தான் வந்தாய் என்ருலும் நீ ஒரு பதினைந்து நாள் தங்கி விட்டுத் திரும்பிப் போனதும் என் நிலைமையில் ஏதாவது மாறுதல் ஏற்படப் போகிறதா? ஏதோ பைத்தியம் பிடித்தவன் போல் தோன்றியதை எழுதி இருக்கிறேன்.

இப்படிக்கு,

அன்புள்ள

பாலு

(2)

திருச்சி

27-3-41.

அன்புள்ள அக்கா,

உன்கடிதம் கிடைத்தது. நீ தூண்டுகிற யோசனை சிந்திக்கத்தக்கதாக இருக்கிறது. குழந்தையில்லாத மத்திய வயதுடைய கொஞ்சம் படித்த, கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்த ஒரு விதவையைப் பார்த்து மணப்பது நல்லது என்று நீ சொல்லுகிருய். இது நடக்கக் கூடியதா? சரி, அப்படியே

வைத்துக் கொள்வோம். ஏதாவது "விதவா விவாக சங்கத்தில்" நான் என் பெயரை இன்னும் பதிவு செய்து கொள்ள வில்லை; ஆனால் இந்த விஷயத்தைப்பற்றி சிந்தனை மட்டும் வெகு தீவிரமாகச் செய்து வருகிறேன்.

"குழந்தையில்லா விதவையாக" என்று உன் கடிதத்தில் நீ சொல்லியிருக்கிறாய். என்னுடைய கவனம் முழுவதும் இப்பொழுது "குழந்தையில்லா" என்ற அந்த வார்த்தையின் மீதே லயித்திருக்கிறது. நாங்கள் சந்ததி யற்ற விதவைகளைத் தேடுவது போலவே, அவர்களும் சந்ததி அற்ற கணவர்களைத் தேடுவதாக இருந்தால்? அக்கா, இது ஆண் பெண் இருபாலாரும் சம உரிமைக்காக தீவிரமாகப் போராடும் நவயுகம் என்பதை மறந்து விடாதே!

யோசனை செய்து பார். சந்ததி அற்ற விதவையை மணப்பதற்கும் வெகு நாள் கலியாணமாகாத கன்னிப் பெண் ஒருத்தியை மணப்பதற்கும் உள்ள வித்தியாசம் தான் என்ன என்கிறாய்? கன்னிப் பெண்ணுக்கு அனுபவம் இன்மையாலும் ஏற்கெனவே வாழ்க்கையில் துயரடையாது இருந்ததனாலும், என் குழந்தைகள் வீட்டில் இருப்பதே சற்றுக்கூட பிடிக்காமல் இருக்கக்கூடும். அதை அவள் வெளிப்படையாகவே காட்டியும் விடுவாள். சந்ததி அற்ற விதவைக்கு, ஒரு முறை வாழ்க்கையில் அனுபவம் ஏற்கனவே உண்டு.

ஆனால் அவளுக்கு சந்ததி இல்லாத காரணத்தினால் தாயுள்ளம் என்பது இன்னது என்று தெரியாது; தாயை இழந்த குழந்தைகளின் உள்ளத்தில் எழுந்து அலையும் உணர்ச்சிகள் இன்னதென்பதை அவள் அறிந்து அதற்குத் தக்கபடி நடந்து கொள்ளவும் முடியாது. ஆனாலும் சாம்பல் பூத்த நெருப்பைப் போல, தன் எரிச்சலை வெளிக்குக் காட்டாமல், பார்ப்பவர்களுக்கு சந்தேகத்தை உண்டாக்காமல் உள்ளுக்குள்ளேயே குழந்தைகளை வெறுத்து, மறை முகமாக இன்னல்களை இழைத்து வரக்கூடும். இது தான் அந்த இரண்டுக்கும் வித்தியாசம்.

தாய்மை நிலைமையை அடைந்த பெண்ணுக்குத்தான் தாயின் உள்ளம் இருக்கும். அவளால் தான் தாயை இழந்த குழந்தைகளிடத்தில் பரிவு கொண்டு அவர்களுடைய மனம் கோணாமல் நடக்க முடியும்.

என்னைப்போலவே அவளுக்கும் ஓரிரண்டு குழந்தைகள் இருக்குமானால் எங்கள் இருவரிடையிலும் ஒரு வித வலுவான பிணைப்பும் அன்பிணைப்பும் இருந்து வரும்.

எதற்கும் எல்லாவற்றையும் பற்றி தீர ஆலோசித்து உன் அபிப்பிராயத்தை எனக்கு விவரமாக எழுது. அக்கா, இன்னொரு விஷயத்தை எழுத மறந்துவிட்டேனே. போன கடிதத்தில் 'ராஜேஸ்வரி' என்று கவரில் எழுதுவதற்குப் பதில் 'ராஜம்' என்றே வீட்டில் கூப்பிடுவது போல் எழுதி விட்டேன். எப்படியும் கடிதம் கிடைத்து விட்டது, சந்தோஷம்.

உன் அன்புள்ள,

பானு.

(3)

மதுரை
4-4-41.

அன்புள்ள ராஜம்,

நீ எழுதிய நீண்ட கடிதத்திற்கு உடனேயே பதில் எழுதாமல் அதிக தாமதம் செய்து விட்டேன்; இதற்காக வருந்தாதே. தாமதத்திற்கு என்னை மன்னிக்கவேணும்.

உன் கடிதத்தை படித்து முடிந்ததும் என் மனதிலே ஒரு பெரிய சூருவளி எழுந்து கலக்கி விட்டது. அது இன்னமும் ஓய்ந்த பாடில்லே. இந்த ஊரில் உள்ள ஆடவர்களின் விளையாட்டுச் சங்கத்தில் சேர்ந்து நான் டென்னிஸ் ஆடுகிறேன் என்றும், அவர்களுடன் இந்த ஊரில் உள்ள ஏரியில் நீந்துகிறேன் என்றும், சிங்காரத்தோப்புகளில் 'பிக்னிக்' பார்ட்டிகளுக்குச் செல்லுகிறேன் என்றும், பல ஆடவர்களுக்கிடையில் தன்னந்தனியே வேறு பெண்கள் யாரும் கூட இல்லாத போது மாலே நேரங்களில் வெகு துணிச்சலுடன் உலாவப் போகிறேன் என்றும், குழந்தை முருகனே உதவாக்கரை போர்டிங் பள்ளிக்கூடம் ஒன்றில் சேர்த்து விட்டு அவனுடைய கவலேயே இல்லாமல் இருப்பதாகவும் சுருக்கமாகச் சொல்லப் போனல் ஒழுக்கங் கெட்ட, பொறுப்பற்ற வாழ்க்கையில் தீவிரமாக நான் ஈடுபட்டிருப்பதாகவும், மற்றும் இம்மாதிரியெல்லாம் காமாட்சி உனக்கு எழுதி இருக்கிருள் அல்லவா? எனக்குத் தோன்றிக்கொண்டிருந்தது இந்த மாதிரி எல்லாம் அவள் ஒன்றுக்குப் பத்தாக எழுதுவாள் என்று.

காமாட்சி எழுதியதில் தப்பில்லே. குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறேன். இதைப்பற்றிய காரண காரியங்களே நேர்மையான மனதுடன் சிந்தித்து, தன் அபிப்ராயத்தை காமாட்சி உனக்கு எழுதியிருக்கிருளா? ஒருக்காலும் அவள் அப்படியெல்லாம் நிதானமாகக் காரியங்களேச் செய்திருக்க மாட்டாள் என்று நான் திண்ணமாக நம்புகிறேன். பாவம், அவளுக்கு அது எப்படித் தெரியப் போகிறது?

என் கணவர் இறந்த பிறகு முதல் இரண்டு மூன்று வருஷங்கள் நான் அழுதழுது காலந்தள்ளினேன். சதா அவருடைய ஞாபகம் தான். ஆனல் எவ்வளவு காலம் தான் அந்த மாதிரி சோகக்கடலில் ஆழ்ந்திருப்பது? நான் என்னுடைய விவாகத்தின் முன்னமேயே நர்ஸ் வேலேயில் பயின்று தேறி இருந்தது உனக்கு நினேவுக்கு வரலாம். பொழுது போவதற்காகவும், சுயமாக சம்பாதிக்கும் எண்ணத்துடனும், நர்ஸாக வேலே செய்ய ஆரம்பித்தேன். கூடிய சீக்கிரத்தில் வேலேயில் நல்ல பெயரும் சம்பாத்யமும் கிட்டிற்று. பணசம்பந்தமாக நான் யாருடைய தயவையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லே. சுயேச்சையுடன் இருந்து வந்தேன். அப்படிப்பட்ட நிலேயில் சகஜமாக, என்னுடைய பழைய பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் போது எனக்கிருந்த விளேயாட்டுப் புத்தியும், உற்சாக உல்லாச வாழ்க்கையில் ஆர்வமும் தனக்குத்தானே என்னே அறியாமலேயே விழித்தெழுந்தன. போதிய வசதியும், சௌகரியங்களும், மனேதைரியமும் இருக்குமானல் யாருக்குத் தான் வாழ்க்கையில் உள்ள பல விதமான இன்பங்களே அனுபவிக்கும் ஆசை இல்லாமல் போகும்?

பையன் பிரதாபனுக்கு ஐந்தாம் ஆண்டு ஆரம்பமானதும் இங்குள்ள போர்டிங் பாடசாலே ஒன்றில் அவனேச் சேர்த்து விட்டேன். அப்படி செய்வதைத் தவிர நான் வேறு என்ன செய்வது? நாள் தோறும் எட்டு மணிநேரம் மூச்சுவிட நேரமின்றி உழைத்து விட்டு வீடு திரும்பும் நான் பிரதாபனுடைய விஷயத்தில் எப்படி போதிய கவனத்தைச் செலுத்த முடியும்? சில நாட்களில் நோயாளிகளுடைய அருகாமையில் இரவு நேரங்களில் கூட நான் இருக்கும்படி நேரிடும். அந்த மாதிரி சமயங்களில் வேலேயாட்களிடம் அவனே ஒப்புவித்துவிட்டுப் போக வேண்டி இருக்கும். அப்படிச் செய்வது

உசிதமா அல்லது, மற்ற சிறுவர்களுடன் ஒரு கட்டுத்திட்டங்களுக்கு உட்பட்ட ஒழுங்கான பள்ளி வாழ்க்கையில் அவன் வளர்ந்து முன்னேறட்டும் என்று மேற்படி போர்டிங்கு பள்ளியில் சேர்த்து விட்டது உசிதமா? நீயே யோசித்துச் சொல்லம்மா.

ஒவ்வொரு ஞாயிறன்றும் குழந்தை வீட்டுக்கு வந்து போகிறான். நாங்கள் இருவரும் ஞாயிற்றுக்கிழமைகளில் வெகு சந்தோஷமாகக் காலத்தைப் போக்குகிறோம். "நர்ஸ்" வேலை என்றால் வெறும் உல்லாச விளையாட்டல்ல, நாற்காலியில் வீற்றிருந்தபடி அ, ஆ, இ, ஈ சொல்லித்தரும் உபாத்தியாயினி வேலை அல்ல அது. கசப்பு மருந்துகளை நோயாளிகளுக்கு இனிக்கும்படி பேசி அவர்களைக் குடிக்கச் செய்வதற்குள் போதும், போதும் என்றாகிவிடுகிறது. பல பல தினுசான மனோபாவத்துடன் கூடிய வெகு விசித்திரமான ஜனங்களோடெல்லாம் எங்களுக்குப் பழக சந்தர்ப்பம் வாய்க்கிறது. அவர்களுடன் எல்லாம் மாரடித்து வீடு திரும்புவதற்குள் சலித்துப் போய்விடுகிறேன்.

எங்கேயாவது கண்காணாத தீவுக்கு ஓடிவிடலாமா என்று கூட தோன்றுகிறது ஒவ்வொரு சமயம். இந்தமாதிரியான அலுப்பைப் போக்கி விட்டு, புது உற்சாகத்தையும், நம்பிக்கையையும் அடையும் பொருட்டு, டென்னிஸ் ஆட்டத்தையும், வெளியே உலாவுதலையும் நான் கைக்கொண்டேன். இதில் தப்பென்ன இருக்கிறது?

ஆண்களோடு நெருங்கிப் பழகுகிறேன் என்பதற்காக அல்லவா நீ பயப்படுகிறாய்? ஒரு குழந்தையைத் தவிர்த்து வேறு திக்கற்ற யௌவன விதவை நான்! ஆகவே வஞ்சகம் நிறைந்த இந்த வையகத்தே நெறிதப்பிச் சென்று ஏமாற்றம் அடைவேன் அல்லது காமம் என்னும் காற்றாற்று வெள்ளத்தில் என் பிரக்ஞையற்று இழுத்துச்செல்லப்பட்டு எங்கேயாவது ஓர் மடுவில் தள்ளப்படுவேன் என்று நீ பயப்படுகிறாய்? சேச்சே, அடி பைத்தியமே!

கயிறறுந்த காற்றாடி, பாய்மரம் அற்ற படகு, கணவனை இழந்த காரிகை, இந்த மூன்றும் ஒரே நிலையில் இருப்பவை. ராஜம், உலகத்தின் எளனத்திற்கும் உதாசீனத்துக்கும் இலக்கானவர்கள் அவர்கள். கயிறறுந்த காற்றாடி காற்றில் பலவித இன்னல்களுக்கிடையில் தவித்து பல முறைகள் தலைகீழாகச் சுற்றி, மரங்களின் இடையிலோ, தந்திக் கம்பம் அல்லது விளக்குத் தூண் இவற்றின் உச்சியிலோ அறைபட்டு கிழிந்த நிலையில் கீழிறங்குவதையும், சீறி ஆர்ப்பரித்துக் கொந்தளிக்கும் கடலின் இடையில் அப்படியும் இப்படியுமாக நிலை தடுமாறி தத்தளித்து நிற்கும் பாய்மரம் அற்ற படகின் ஆட்டத்தையும் உலகத்தினர் வெகு சுவாரஸ்யத்துடன் கண்டு களிப்பதை நீ பார்த்ததில்லையா? அப்படி இருக்க என்னுடைய நிலைமை என்னாகும் என்பதைப் பற்றி உன்னைப் போன்ற ஒரு பெண் சிந்தித்து, கவலைப் படுவதனால் என்ன பயன்?

முருகன் சௌக்யமாக இருக்கிறான். படிப்பில் வெகு கெட்டிக்காரன். அவனுக்கு உன்னைவிட, உன்னுடைய பெண் சாந்தாவின் நினைவுதான் அதிகமாக இருக்கிறது. இப்பொழுதே எச்சரித்து விடுகிறேன். ஜாக்கிரதையாக இரு; இல்லாவிட்டால் மாப்பிள்ளை என்ற ஹோதாவில் உன்னைப் படாதபாடு படுத்திவிடுவான்!

உன் அன்புள்ள

சரளா.

(4)

மதுரை
25-4-41.

அன்புள்ள ராஜம்,

எவ்வளவு அபரிமிதமான அன்படி உனக்கு என்னிடத்தில்! என் விஷயத்தில் உனக்கு ஏன் இவ்வளவு அக்கரை? என் வாழ்க்கையின் மறுமலர்ச்சியில் உனக்கு என்ன அவ்வளவு சிரத்தை? கூடப் பிறந்த பிறப்புக்கு மேலாக இருக்கிருயே!

நான் மறுமணம் செய்து கொண்டு மறுபடியும் வாழ்க்கைப் பிரயாணத்தைத்தொடர்ந்து நடத்த வேண்டும் என்று நீ ஆசைப்படுகிருய் அடிபைத்தியமே! இம்மாதிரி எண்ணம் என் மனதில் எழவில்லை என்ரு எண்ணுகிருய்? ஆனல் இது நடைமுறையில் சாத்தியமானதா என்பதைப் பற்றியும் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? முதன் முதலாக, எடுத்த எடுப்பில் பார்க்கும்போது நான் ஒரு அழகி என்று சொல்ல முடியாது; முப்பது வயது கடந்தவள்; நர்ஸாக வேலைசெய்து வருகிறேன். இவை அனைத்திற்கும் அத்தாட்சியாக, முதல் கலியாணத்தின் சின்னமாக ஐந்து வயது பையன் வேறு; இவ்வளவும் சேர்த்து யோசித்துப்பார். எந்த கண்ணியமான மனிதன் மணக்க முன் வருவார்? அப்படியே ஒருவர் முன் வந்து என்னை மணந்தாலும் என் அருமை முருகனிடத்தில் அவர் எப்படி நடந்து கொள்ளுவாரோ என்பதைப்பற்றி நினைக்கையிலேயே எனக்கு ஒன்றுமே வேண்டாம் என்று தோன்றுகிறது. சாதாரணமாக மாற்ருந்தாயின் கொடுமை என்று சொல்லுகிருர்களே அதைவிட மாற்ருந்தந்தையின் — அப்படி ஒரு பதவி நடைமுறையில் சாத்யமாகுமானல் கொடுமையே அதிகமாக இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். மறு விவாகம் செய்து கொள்ள எண்ணும் ஆண்களுக்கு ஒரு அழகிய விதவையை மணப்பதில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை; ஆனல் அவள் குழந்தை குட்டி இல்லாதவளாக இருக்கவேண்டும்.

அவர்களுக்கு முதல் தாரத்தின் மூலமோ, இரண்டாம் தாரத்தின் மூலமோ ஐந்தாறு குழந்தைகள் இருந்தாலும் கூட பரவாயில்லை! இது என்ன நியாயமோ? குருட்டு நியாயம்! நாம் என்ன செய்யக் கிடக்கிறது? சமூகக்கட்டுப்பாடுகளையும் விதிகளையும் ஆண்கள் தங்களுடைய சுய நலன்களுக்கேற்றபடி அமைத்துக் கொண்டார்கள். பிறகு கேட்பானேன்! அவர்கள் இட்டது தான் சட்டம் என்று நாகரிகம் முதிர்ந்து விட்டதாகச் சொல்லும் இந்த நாட்களிலும் அமுலில் இருந்து வருகிறது. பெண் உரிமை, ஆண் பெண் சமத்துவம் என்ற இவை எல்லாம் வெறும் ஏட்டுச்சுரைக்காய்க் கொள்கை தான். நம்இனத்தாரைப் பசப்பி இன்னும் அதிகமாக நம் மீது தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தும் நோக்கம் தான் அந்தரங்கத்தில். இப்படிப்பட்ட நிலைமையில் நான் மறுமணம் செய்து கொள்வது குழந்தையின் சுகத்தை அடியோடு போக்குவதாகும்.

பையனுக்கு கோடை விடுமுறை ஒன்றரை மாதம் விட்டிருக்கிருர்கள். நானும் ஒரு மாதகாலம் ஓய்வு எடுத்துக்கொள்ளப் போகிறேன். இன்னும் இரண்டொரு நாட்களில் நாங்கள் திருச்சியில் உள்ள என் அத்தை வீட்டிற்குப் போகிருேம். என் அத்தையின் கணவர் அங்கு பிரபலமான ஒரு வக்கீல். ஆகவே இனிமேல் எனக்கு எழுதும் கடிதங்களை, "கே. சந்திரன், வக்கீல் திருச்சி" என்ற விலாசத்துக்கே நீ எழுதிக் கொண்டிரு.

உன்னுடைய அண்ணாவையும் அந்த ஊருக்கு சமீபத்தில் மாற்றியிருக்கிறார்கள் என்று சில தினங்களுக்கு முன் நீ எழுதி இருந்தாயே! அப்படியானால் நீயும் திருச்சிக்கு வந்து சில நாள் தங்கி இருக்கப்படாதா? சுகமாக கொஞ்ச நாட்களாவது பழைய பள்ளிக்கூட நாட்களில் இருந்தபடி ஆனந்தம் அடைவோம்.

உன் அன்புள்ள,

சரளா.

(5)

திருச்சி
4-5-41.

அன்புள்ள அக்கா,

எங்கள் விளையாட்டுச் சங்கத்தில் இம்மாத ஆரம்பத்திலிருந்து ஒரு புதுப் பெண் சேர்ந்திருக்கிறாள். இந்த ஊரிலுள்ள பிரபல வக்கீல் சந்திரன் அவர்களுக்கு நெருங்கிய சொந்தக்காரி. எல்லாரிடத்திலும் இனிமையாகவும், சரளமாகவும் தூய உள்ளத்துடனும் பேசி வருகிறாள். ஒரு நடு வயது, நம் நாட்டு, பெண்ணிடம் அதுவும் விதவைப் பெண்ணிடம் இவ்வளவு கலகலப்பும் குதூகலமும், விளையாட்டில் ஆர்வத்தையும் இப்பொழுது தான் நான் முதன் முதலாகக் காண்கிறேன்.

நான் மாத்திரம் பேச்சில் வல்லவளாக இருந்தால்? எனக்கு மட்டற்ற ஆவல் இருக்கிறது, அவளுடன் மணிக்கணக்கில் தனிமையில் பேச வேண்டும் என்று. அவளுடைய சகவாசமும் எனக்கு ரொம்பவும் வேண்டும் போலத் தோன்றுகிறது. ஆனால் என் சங்கதிதான் உனக்குத் தெரியுமே. அக்கா, நீ மாத்திரம் இப்பொழுது இங்கே இருந்தாயானால்? அதை என்னவென்று சொல்லட்டும் போ! ரொம்ப அற்புதமாயிருக்கும்.

பாலு.

(6)

திருச்சி
15-5-41.

அன்புள்ள அக்கா,

சரளா உன்னுடைய பிராண சிநேகிதை என்பதை இன்றுதான் அவள் சொல்லி தெரிந்து கொண்டேன். ரொம்பசந்தோஷம். ராஜத்தின் சகோதரரா நீங்கள்? அடடா! உங்களை முதன் முதலாகப் பார்த்ததில் இருந்தே எனக்கு அப்படித்தான் தோன்றிக்கொண்டிருந்தது என்று சொன்னாள் சரளா.

டென்னிஸ் ஆடி முடிந்ததும் அவள் என்னுடன் வீட்டிற்கு வந்தாள். வீடு முழுவதும் சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். உன்னுடைய போட்டோவைப்பார்த்து, ஓஹோ நம்முடைய ராஜம் அக்காவா என்று சிறு குழந்தையைப் போல ஆனந்தம் மிகுந்து குதிக்க ஆரம்பித்து விட்டாள். குழந்தைகள் இங்கு வீட்டுக்கு திரும்பி வந்ததும் அவர்களை வாரி அணைத்துக் கொண்டாள். பத்மாவைப் பாடச்சொல்லிக் கேட்டாள். இரண்டொரு நவீன மெட்டுகளில் இரண்டு பாட்டுகளும் கற்றுக் கொடுத்தாள். ஒவ்வொரு செய்கையிலும் அன்பு கனிந்தது. இன்று காலை அவளுடைய பையன் முருகனை, நம் முத்துவோடு விளையாடுவதற்காக அனுப்பி வைத்தாள். பையனும் நல்ல துடி. இவர்கள் ரொம்ப சிநேகிதர்கள் ஆகிவிட்டார்கள். மற்றவை அடுத்த கடிதத்தில்.

அன்புள்ள.

பாலு.

(7)

அன்புள்ள ராஜம்,

திருச்சிக்கு வந்ததிலிருந்து என் நாட்கள் இனிது கழிகின்றன.

உன் தம்பி பாலுவோடு அறிமுகம் ஆயிற்று. ஆனல் அந்த அறிமுகம் நட்பில் முற்றி, நட்பு இப்போது...

அவர் தன்னுடைய நிலைமையை எனக்கு விவரமாக விளக்கிச் சொன்னர். நீ அவருக்கு எழுதியிருந்த கடிதங்களையும் எனக்குக் காட்டி, முடிவில் தம் எண்ணத்தையும் சொன்னர்.

அதிகமாக வளர்த்தினல் நீ சிரிப்பாய். கலியாணத்திற்கு நீ வருகிருய் அல்லவா?

சுகத்தை மீண்டும் பெருவதற்காக பெரிதும் முயற்சித்து வருகிறேன். கயிறறுந்த காற்ருடி மறுபடியும் பழையபடி காற்றில் பறக்கப் பார்க்கிறது. பாலுவும் உன்னைப் போலவே அன்பும், ஆதரவும் அபரிமிதமாக உள்ள ஒரு அரிய மனிதர். என்னுடைய வாழ்க்கை என்னும் கயிறறுந்த காற்ருடியை, அவருடைய அன்பென்னும் கயிற்றில் முடித்து மறுபடியும் பறக்க விடப் பார்க்கிறேன். கட்டாயம் அந்த கயிற்றின் மூலம் என் வாழ்க்கைக் காற்ருடி வெகு ஒய்யாரத்துடனும், கம்பீரத்துடனும், தன் முன் தோன்றும் எல்லா இன்னல்களையும் வென்று தலை தூக்கி அசைந்தாடும் என்று நம்புகிறேன்.

சீக்கிரத்தில் உன் மன்னியாகப் போதும்,

சரளா.

(8)

திருச்சி
15-6-41.

அன்புள்ள அக்கா,

இவ்வளவு தூரம் எல்லாவற்றிலும் முதலிலிருந்து இறுதிவரையில் பங்கெடுத்துக் கொண்டிருந்த நீ கடைசியில் இப்படி எங்கள் கலியாண தினத்தன்று வராமல் நின்று விடுவாய் என்று நாங்கள் சொப்பனத்திலும் எதிர்பார்க்கவில்லை. எங்கள் இருவருக்கும் மிகமிக வருத்தமாக இருக்கிறது. மாமியும், மாமாவும் அனுமதி உனக்கு மறுத்து விட்டால் என்ன? நீ எதற்காக அவர்களுடைய அனுமதியைக் கேட்டாய்? அவரைக் கேட்டிருந்தாயானல் அவர் தாராளமாக அனுப்பி இருப்பாரே.

உன் மன்னி மகா கிண்டல் காரியம்மா. அவள் அடிக்கடி என்னை கேலிசெய்கிருள். நான்கு குழந்தைகளும் என்னுடைய குழந்தைகள் தான்! வேண்டுமானல் அவர்களையே கேட்டுப் பாருங்களேன் என்கிருள். குழந்தைகள் நான்கும் ஒரு வயிற்றுக் குழந்தைகள் போலவே பேதம் இன்றி சந்தோஷமாகவும் அன்னியோன்னிய பாவத்துடனும் இருக்கிருர்கள். வீட்டில் வேலைக்காரர்கள் வேலைக்காரிகளிடம் கூட அவள் அன்புடன் பழகுகிருள். எஜமானி அம்மாளிடம் அவர்களுக்கு வெகு பிரியம்.

நர்ஸ் வேலையை இப்பொழுது விட்டு விட்டாள். அனேக காரணங்களை முன்னிட்டு அது இப்பொழுது அவசியம் இல்லை.

நான் இந்த கடிதத்தை எழுதிக் கொண்டிருக்கும் போது, அதோ, சமையல் அறையின் வெளித்தாழ்வாரத்திலிருந்து கலகலப்பு மிகுந்த பேச்சும், சிரிப்பும் என் கவனத்தை இழுக்கின்றன. குழந்தைகள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிருர்கள். சரளா இடையிடேயே அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கிருள். என் மேஜையின் மீது அவள் கூந்தலில் இருந்து நழுவிப்போன மல்லிகை மாலை ஒன்று இருக்கிறது. அதனுடைய இனிய மணத்தை அனுபவித்தபடியே இந்தக் கடிதத்தை எழுதிக் கொண்டிருக்கிறேன். அவசியம் நேரில் ஒரு நடை போய் அக்காவை அழைத்து வாருங்கள் என்று என் உயிரை

வாங்குகிருள் சரளா. அடுத்த வாரத்தில் புறப்பட்டு வரலாம் என்று இருக்கிறேன். கணவரிடம் முன்னதாகவே லீவுக்கு மனுப் போட்டு விடு!

இன்னும் கொஞ்சநேரத்தில் அவள் வருவாள். எனக்குத்தெரியாமல் என் நாற்காலியின் பின்னல் வந்து நின்று கொண்டு "எத்தனை நேரம் விழுந்து விழுந்து அக்காவுக்குக் கடிதம் எழுதுவீர்களாக்கும். என்னதான் அப்படி இருக்கிறதாம் எழுத! அவர் வேறே வந்துவிட்டால். என்னத்துக்கு வரவேணும், சிவ பூஜையில் கரடி புகுந்த மாதிரி என்றெல்லாம் பேசி என்னைக் கிண்டல் செய்வாள். அவள் அப்படியெல்லாம் கேலி செய்வதற்குள்ளாகவே இந்தக் கடிதத்தை முடித்து விடுகிறேன். மற்றவை நேரில்.

அன்புள்ள,

பாலு.

எங்கோ ஒரு அற்புத உலகுக்கு அனுப்ப வேண்டிய அந்த அழகியை இந்தச் சின்னஞ்சிறு கிராமத்தில் வந்து பிறக்கும்படி செய்தான் பிரம்மா. அது மாத்திரமா? பிரம்மா அவள் விஷயத்தில் இழைத்த தவறுதல்களுக்குத் தண்டனை விதிக்கப் போனால்..........

மன மயக்கம்

ஆர். ஷண்முகசுந்தரம்

சில சமயம் வாழ்வின் பயங்கர உண்மைகளைக் கேள்விப் படுகிறோம். "இப்படியும் நடக்குமா?" என்ற அதிசயம் நம்மையறியாமல் நமக்குள் தோன்றுகிறது. "ஏன் நடக்காது?" என்று சமாதானம் செய்து கொண்டால்கூட மனது கேட்கமாட்டேன் என்கிறது.

அன்றொரு நாள் உல்லாசப் பிரயாணம் போய்க் கொண்டிருக்கையில் என் நண்பன் ஒரு சோகச் சம்பவத்தைச் சொன்னான். அந்த சோக நாடகம் நடந்த இடத்துக்கு அருகாமையில் எங்கள் வண்டி போய் நின்றதால் அது ஞாபகத்துக்கு வந்தது. இன்று நெடு நாளைக்குப் பிறகு அதை நினைத்தாலும், மெல்லிய பனி போன்ற துயர அலை உள்ளத்தில் மோதுகிறது. பார்க்கப் போனால் எனக்கும் அந்த சம்பவத்திற்கும் என்ன சம்பந்த மிருக்கிறது? காதால் கேட்டது ஒன்றேதான். என் நண்பன் நல்ல ரசிகன். அவன் சுவாரஸ்யமாகச் சொல்லியதனால் தான் இத் தாங்கல் ஏற்படுகிறதோ என்னவோ என்று பலதரம் நான் யோசித்ததுண்டு.

"அந்தப் பேரழகியைப் படைக்கையிலேயே பிரம்மாகுற்றத்தைச் செய்து விட்டான். ஞாபகப் பிசகாக கந்தர்வ உலகுக்கோ, வேறு எங்கோ அற்புத உலகுக்கு அனுப்ப வேண்டிய அந்த அழகியை இந்தச் சின்னஞ்சிறு கிராமத்தில் வந்து பிறக்கும்படி செய்தான். அது மாத்திரமா? பிரம்மா அவள் விஷயத்தில் இழைத்த தவறுதல்களுக்குத் தண்டனை விதிக்கப் போனால்....." என்று சொல்லி என் நண்பன் பார்த்த பார்வையின் வேகத்தை என்னால் தாங்கவே முடியவில்லை. மேலே, நண்பன் சொன்ன வரலாற்றை அப்படியே தருகிறேன் :

"அவள் சொன்னாள். என்ன சொன்னாள்? எப்போது சொன்னாள்? ஏன் சொன்னாள்?...அவள் சொன்னாள். என்னிடம்தான் சொன்னாள். இப்போதுதான் சொன்னாள்........."

பேசிக்கொண்டே போனான் அவன். 'பைத்தியம்' என்று தெருவிலே நடந்து போகிறவர்கள் பேசிக்கொண்டார்கள். குழந்தைகள் அவன்மேல் மண்ணை வாரி இறைத்தன. சிறுமிகள் வீட்டு முற்றத்திலே நின்று கொண்டு தண்ணீரை அள்ளி வீசினர்.

அவன் அதையெல்லாம் லட்சியம் செய்ததாகத் தோன்றவில்லை. நடந்து கொண்டே யிருந்தான். பேசிக்கொண்டே போனான். முனகிக்கொண்டே நடந்தான். அந்தச் சாலையில், இருபுறமும் இருளில் ஆடி அசைந்து கொண்டிருந்த மர வரிசைகளுக்கிடையே, அந்த

இருள் மண்டிக்கிடந்த வழியிலே மரங்களின் நிழல்களைத் தாண்டித் தாண்டிப் போனான்.

ஒவ்வொரு சருகின் அசைப்புக்கும், பட்சியின் சிறகடிப்புக்கும் திடுக்கிட்டுத் துள்ளிக் குதித்தான். ஒதுங்கி, ஒதுங்கி, மருண்டு நடந்து கொண்டேயிருந்தான். அவன் வாய் மட்டும் முணுமுணுத்துக் கொண்டேயிருந்தது.

"நான் போறேன். போகிறேன். சதா போய்க்கொண்டே இருக்கப் போகிறேன். எங்கு போகிறேன்? அது எனக்கே தெரியாது. ஆனால், நான் போய்த்தான் ஆகவேண்டும். சாந்தி. சாந்தியா? இனி எனக்கு எங்கே கிடைக்கப் போகிறது. சுடுகாட்டிலா? சை! எங்கும் இல்லை......

"அவள் சொன்னாள். நேற்றுத்தான் என்னிடம்......"

அவன் போய்க் கொண்டேயிருந்தான்.

* * *

பத்து வருஷங்களுக்கு முன் அவனை அந்தப் பிராந்தியத்தில் எல்லோருக்கும் தெரியும். அவன் அங்கேயே பிறந்தவன், வளர்ந்தவன். இந்த உலகிலே, இப்போதும் அப்போதும் அவனுக்கு உறவினர்கள் யாருமில்லை. தாயார் இருந்தாள். ஆனால், ஒரே நாளில், ஒருவரும் காணமுடியாத இடத்திற்குப் போய்விட்டாள்! அவனும் போய்விட்டான் அதற்கு முன்பே பொருள்தேட.

ஆனால், அவளுக்காக இப்போது வந்தான் அங்கே. அப்பேரது அவளுக்கு அவன் மேலானவனாகத்தோன்றினான். உயர்ந்தவனாக உலகிலுள்ள எல்லோருக்குமே உயர்ந்தவனாகத் தோன்றினான். ஆனால், இப்போது? சை! இந்த ஜனங்கள் இருக்கிறார்களே, நன்றி கெட்டவர்கள். எல்லோருமே. உலகப் பாதையில் உருண்டோடும் மனித ஜாதி முழுவதுமே சீக்கிரத்தில் மறந்து விடுகிறார்கள்.

எல்லோரையும் போலவா அவளும்? ஆமாம். அவள் என்ன எச்சா? ஆனால், அவள் மறந்தாளா? மருண்டாளா? ஓடி ஒளிந்தாளா? இல்லை. அவனைக் கண்டாள். அவனிடம் பேசினாள்.

ஆனால்......ஆனால், அவன் என் அப்படி, ஒரேயடியில் உலக மகா ஜனங்களின் துக்கம் முழுதும் தன்மேல் திணிக்கப் பட்டவன் போல் கலங்கிப் போனான்? அவளிடம் பேசும்போது உணர்ச்சி இழந்த வார்த்தைகளாக அவன் வாயிலிருந்து புறப்பட்டதே, அது என்? அவன் மனதின் அடியிலே அமிழ்ந்திருந்த எண்ணக் குவியல்கள், வார்த்தைகள் என் அப்படி பிறக்கும் இடத்திலேயே ஒடுங்குகின்றன? அவன் பயந்தானா? இல்லை. பயப்படவில்லை. நேராக நிமிர்ந்து அவளிடம், சோகம் தொனிக்க சொன்னான்: "என்னை நீ மறந்து விட்டாயா"

* * *

அவள் முதலில் அவனிடம் ஒன்றும் பேசவில்லை. பேசாமல் சிலையைப்போல் அசைவற்று அவன் முன் நின்று கொண்டிருந்தாள். அந்த நிசப்தமான நதிக் கரையிலே அவர்கள் இருவரையும் தவிர வேறு யாருமே இல்லை. அவளிடம் பேசுவதற்காக காத்திருந்து, தண்ணீர் கொண்டுவர ஆற்றங்கரைக்கு அவள் வருவதைப் பார்த்து, நிழல்போல தொடர்ந்து வந்திருக்கிறானல்லவா? என் அப்படி தனியாக அவளைச் சந்திக்க விரும்பினான்? நேராக அவள் வீட்டிற்கே போனால் என்ன? ஓகோ, அங்கே 'அவன்' இருக்கிறானென்றா? கோபித்துக் கொள்வானோ?

"ஐயோ! இவ்வளவு நாட்களுக்குப் பிறகு வந்திருக்கிருயே. என் இளமையை வாரியிறைத்து விட்டேன்! ஒரு அன்னியன் காலடியில் கிடக்கும்போது வந்து சேர்ந்தாயே......"

அவள் இன்னும் என்னவெல்லாமோ எண்ணினள். அப்படி யோசித்துக் கொண்டே எதிர்க் கரையைப் பார்த்தாள். அப்படியே உசர ஆகாயத்தைப் பார்த்தாள். எதிர்க்கரையில் காற்றின் அசைப்பில் உரைந்த நாணல்களின் 'சிர் சிர்' சப்தம் அவள் மனதிலிருந்த கலக்கத்தை அதிகப்படுத்தியது.

* * *

"இப்போது நீ என் இங்கு வந்தாய்?" நடுங்குங் குரலிற் சொன்னள் அவள்.

"உனக்காக, உன்னைத்தேடி எங்கிருந்தாலும் வராமலா இருப்பேன்? உனக்கு ஏராளமான பொருள் தேடிக்கொண்டு வந்திருக்கிறேன். இனி நாமிருவரும் ஆனந்தமாக வாழலாமல்லவா?"

அவன் உள்ளத்திலுள்ள ஆசைகளை அப்படியே சிந்தி விட வேண்டுமென்று விரும்பினன்.

"என்னை நீ பார்க்காதே. திரும்பிக்கூடப் பார்க்காதே. பாவி. நான் மகா பாவி. உனக்கு துரோகம் செய்துவிட்டேன். நான் கலியாணம் செய்து கொண்டு விட்டேன்."

இருண்டு கிடக்கும் பெரிய வனந்தரத்தின் இருளைப் பிளந்து கொண்டு புறப்படும் ஒளியின் கதிரைப் போல மெதுவாக அவள் வார்த்தைகள் தைத்தன அவன் நெஞ்சில். அவசரமாகப் பேசினன்: "அதனல் என்ன? நீ வந்துவிடு என்னேடு, உன்னை எப்படி வைத்திருக்கிறேன் பார். உனக்காக......"

அவள் தடுத்துப் பேசினள்: "அது முடியாது. நான் உன்னேடு வர முடியுமா? ஜனங்கள் என்ன சொல்லுவார்கள்?"

* * *

"இந்த ஜனங்களின் பேச்சுக்குப் பயந்தா உன் வாழ்க்கையை நாசம் செய்து கொள்ளுகிருய்? அனியாயமாக உன் சௌந்தர்யத்தை வீணுக்குகிருயே......?"

"எதற்காக இந்த மாதிரி பேச்செல்லாம் பேசுகிருய்? என்னை நோக வைக்காதே. நான் எப்படிப்பட்ட துக்கத்தை அநுபவிக்கிறேனென்று உனக்குத் தெரியுமா? ......நீ போய்விடு. இந்த இடத்தை விட்டு இப்போதே போய்விடு. நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நேரமாகிறது போ."

"இருட்டி விட்டால் என்ன? என்னை எங்கே போகச் சொல்லுகிருய் உன்னைவிட்டு. வெறும் சூன்யத்தை நோக்கி என்னை என் போகச் சொல்லுகிருய்?"

அவள் அசைவற்று அவன் முன் நின்ருள். அவள் நெஞ்சின் ஆழத்திலே கிளம்பிய சோகத்தின் 'ஏக்க மூச்சு' முகத்திலே படர்ந்து தெரிந்தது. அவள் இருதயம் சொல்ல முடியாத வகையில் அடித்துக்கொண்டது. கண்களிலிருந்து கண்ணீர் அருவிபோல வழிந்தோடிற்று. அவள் அழுதுகொண்டே அவனிடம், "போய் விடு" என்று சொன்ஞள். அதோடு மறுபடியும் சொன்னள்: "நீ போவது மட்டுமல்ல. இதோடு என்னை மறந்துவிடு. என்னை அடக்கம் செய்து விட்டார்களென்றே நினைத்துக் கொள்."

* * *

"அது முடியாது. என்னல் உன்னை மறக்கவே முடியாது. நான் உன்னை வற்புறுத்தவில்லை. போகிறேன். நிச்சயமாகப் போகிறேன்.

ஆனால் எங்கே, கடைசியாக என்னைப்பார்த்து, 'போய்வா' என்று சொல். அன்பாக விடை கொடு."

"போகிறாயா? நீ எங்கிருந்தாலும் சரி. சௌக்கியமாயிரு. என்னைப் பற்றி நினைத்துக்கொண்டு வருந்தாதே."

"இந்த ஜன்மத்தில் அது ஆகாத காரியம். இந்தா என்னைப் பார். போய் வருகிறேன்."

அவள் மறுபடி என்னமோ பேசினாள், ஆனால் அவன் அவள் பேசிக் கொண்டிருக்கும்போதே வெகுதூரம் வந்து விட்டான்.

அவன் மனதிலே, அவள் பேச்சுக்கள் பெரிய மாறுதலை ஏற்படுத்திவிட்டதை அவன் அறிவானா? அவள் துயரத்தோடு சொன்ன வார்த்தைகள் அவன் நெஞ்சிலே பாய்ந்து அவனை வேறு மனிதனாக்கி விட்டது. அவனைப் பைத்தியக்காரனாக்கி விட்டது. அவன் அவளைப் பிரிந்து, அப்பால் நதிமணலையும் தாண்டி, கிராமத்தைத் தாண்டி, சாலையில் இறங்கி நடந்து போய்க் கொண்டேயிருந்தான்.

அவன் போகும் திக்கையே பார்த்து வெகு நேரம் அவள் நின்றுகொண்டிருந்தாள். நேரம் ஏறிக்கொண்டே போயிற்று. ஏதோ ஒன்று தன்னுள்ளத்திலிருந்து பிரிந்து சென்றுவிட்டதாகத் தோன்றியது அவளுக்கு. இருள் நாற்புறமும் மெதுவாக வானத்திலிருந்து இறங்கி மூடத் தொடங்கியது.

* * *

மண்ணும், ஆறும், குன்றும், மேடும் இருளில் மௌனத்தில் ஆழ்ந்தது. அவள் மட்டும் அந்த நதிக்கரையிலே தனித்து நின்று கொண்டேயிருந்தாள். அந்த இருண்ட இரவிலே, ஆற்றங் கரையிலே, காலடியில்உருண்டு கிடக்கும் குடத்தைப் பார்த்துக் கொண்டு பேயால் அடிக்கப் பட்டவள் போல நின்று கொண்டேயிருந்தாள்.

அவளுக்குத் தன்னிடமே வெறுப்பு ஏற்பட்டது. அந்த நதி நீரிலே விழுந்து பிராணனை முடிக்கக் கருதினாள். இரண்டடி எடுத்து வைத்தாள் முன்னால். அப்போது எங்கிருந்தோ திகிலடைந்த பட்சியின் அலறும் குரல் அவள் நெஞ்சில் வந்து தாக்கி அவளைத் திகைக்கச் செய்தது. மறுபடி ஏதோ முடிவுக்கு வந்தவள்போல, இருளில் ஒரு திசையை நோக்கி நடந்தாள்.

* * *

அது அந்திச்சாயை மறையு முன்பு அவன் போன தடம் அல்லவா? அவனைத்தேடிக்கொண்டா போகிறாள் அவள்? அந்த பயங்கரமான இரவிலே மேடும், பள்ளமுமான அந்தப் பாழடைந்த பாதையிலே அவள் நடந்து போய்க் கொண்டிருந்தாள். அவள் மனதிலே ஒரே ஒரு எண்ணம் மாத்திரம் சுழன்று கொண்டிருந்தது. அது எப்படியாவது அவனைத் தேடிக் கண்டு பிடித்து விடுவதென்பதே.

அவள் விடியும் வரை நடந்தாள். வழியில் ஒருவரையும் அவள் காணவில்லை. விடியற்காலை, கிழக்கு வானத்தின் ரத்தச் சிகப்பு அவள் கண்களுக்குத் தெரிந்தபோது, ஒரு மனிதன் அவளுக்கு முன்னால் போவது தெரிந்து கூப்பிட்டாள்: "யார் அது?"

அவனா அது? இல்லை. இல்லை. அவன் யாரோ? எங்கு போகிறானோ? அவன் திரும்பிப் பார்த்தான். ஆனால், ஒன்றும் பேசவில்லை. பேசாமல் மேல் நடந்தான்.

* * *

அன்று உச்சிப்பொழுது வரை நடந்துகொண்டே யிருந்தாள். நல்ல மத்தியான வேளையில் ஒரு கிராமத்திற்கு வந்து சேர்ந்தாள். ரொம்ப களைத்திருந்ததால், ஒரு வேப்பமரத்தின் நிழலில்படுத்தவள் அப்படியே தூங்கிவிட்டாள். மறுபடி தூக்கத்திலிருந்து அவள் விழித்தபோது யார் யாரோ பக்கத்தில் பேசுவது கேட்டது. அவர்களிடம் கேட்டாள்:

"நேற்று இந்த வழியாக ஒரு மனிதன் வந்தானா" என்று.

"ஆமாம். ஒரு பைத்தியக்காரன் இந்த வழியாகப் போனான். நேற்று சாயங்காலம் எல்லோரும் பார்த்தோம்."

'ஆமாம்' என்றனர் எல்லாரும். அங்கிருந்த ஒரு பெண் பிள்ளை அவளிடம் கேட்டாள்:—"உனக்கு அவன் உறவா" என்று. அவளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. தெரியாத கதையைச் சொல்லி அர்த்தம் கேட்பது போலிருந்தது.

அடையாளம் சொல்லிக் கேட்டாள். அவனேதான் என்றனர் எல்லோரும்.

"பைத்தியமா! பைத்தியமா பிடித்துவிட்டது உனக்கு" என்று அழுதாள். அருகிலிருந்தவர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

* * *

அவன் அந்த இருள் சூழ்ந்த சாலையிலே நடந்து போய்க்கொண்டிருந்தான். அவன் வாய் மட்டும் முணு முணுத்துக் கொண்டேயிருந்தது. அவன் உருவம் இருளுடன் கலக்க ஆசை கொண்டுவிட்டது. இப்போது அவனுக்கும், மரத்து நிழலுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. அவன் போய்க்கொண்டே யிருந்தான்.

முடிவே யில்லையோ வென்று சொல்லும்படி அந்த நீண்ட சாலையும் அவனுக்கு வழி விட்டுக் கொண்டே யிருந்தது.

சாலை அவனுக்கு வழி விடுகிறது! வாஸ்தவம். ஆனால் அவளுக்கு? கடவுளா? ஆம், கடவுள் விட்ட வழிதான் இதுவும்!

ஓரங்க நாடகம்:

திரைக்குப் பின்...

[ஆர். டி]

["திரைக்குப் பின் என்ன நடக்கிறது?" என்று அடிக்கடி கேள்வி கேட்கப்படுகிறது. நாடக அரங்கிலே இரவு பூசிய அரிதார மெல்லாம் பட்டப் பகலில் தான் வெட்ட வெளிச்சமாவது வழக்கம். அப்போதும் மேலே கண்ட கேள்விக்குப் பலவித மாகத்தான் பதில் அளிக்கப்பட்டு வருகிறது. ஆனல் கீழே வெளியாகும் சிறு வாழ்க்கை நாடகத்திலே திரைக்குப்பின் நடக்காத ஒரு விசித்திரத்தைப் பாருங்கள்!]

இரும்புக்கடை மானேஜர்:- அடே ராமா.

(பதில் ஒன்றும் வராததால் அப்பா ராமா, அடே ராமா அடராமா, என்று பலவிதமாகச் சத்தமாகவும், மெதுவாகவும் மானேஜர் கூப்பிட்டுப் பார்க்கிருர். கடைசியாக.........)

மா:- ஏ, சனியன்.

ஆபீஸ் பையன்:- இதோ வந்திட்டேன், சார்.

மா:- ஏண்டா கழுதை, கூப்பிட்டது கேக்கலே?

பை:- கேக்கலேண்ணு யாரு சார் சொன்ன?

மா:- காது கேட்டுமா வராமல் இருந்தே?

பை:- என்னைத்தான் கூப்பிடறீங்கண்ணு எனக்கு எப்படி சார் தெரியும்?

மா:- அட ராமா.

பை:- பாத்தீங்களா? பாத்தீங்களா.

மா:- என்னத்தையடா?

பை:- 'அட ராமா' ங்றது தான். சிலசமயம் என்னைக் கூப்பிடறீங்க. சில சமயம் கடவுளைக் கூப்பிடறீங்க.

மா:- (சிரித்துக் கொண்டு) கடவுள் கூடவந்து விடுவார் போல் இருக்கு. நீ தான் ஆசாமி போனல் போனது தான்.

பை:- இல்லீங்க சார். கார்த்தாலே இருந்து மூணு ஆள் ஆச்சே.........

மா:- உஸ், சத்தம். பக்கத்திலே குமாஸ்தா எல்லாம் யாரும் இல்லையே?

பை:- பரவா இல்லீங்க சார். உங்களுக்குக் கடன் தொல்லை இருக்கிறது யாருக்குத் தெரியாது? நீங்க பாட்டுக்கு.........

மா:- சீ, வாயை மூடு. எனக்கா உபதேசம் பண்றே? இப்போ நான் என்ன சொல்றேன் தெரியுமா?

பை:- சொன்னல்ல தெரியும்?

மா:- அது தாண்டா சொல்றேன் சாயங்காலம் வரை யாரு வந்து என்னைக் கேட்டாலும்.........

பை:- வழக்கம் போலே சொல்லீடறேன். ஊருக்குப் போய் எட்டு நாள் ஆச்சு.........

மா:- அடேய், அதிகப்பிரசங்கி. முந்தாநாள் அந்த ஆசாமியைக் கடை வீதியிலே கண்டு, இன்னைக்கு வரச்சொல்லி இருக்கிறேன்.

பை:- அப்படியானு மேலே உடனே மெத்தைக்கே கூட்டியாந்திடறேன்.

மா:- தடி ராமா, சொல்லறதுக்கு முந்தாதே.

பை:- எனக்குத் தெரியாதுங்களா. பால்க்காரன் தடியும் கையுமாத் தானே வந்து நின்ஞன்? அவனெ மேலே கூட்டியாந்தனு? மளிகைக் கடைக்காரன் குதிரை வண்டியிலே வந்து இறங்கினுனே. பீமசேனன் மாதிரிதானே இருந்தான். மேலே விட்டேனு? அப்புறம் வந்து.........

மா:- பேஷ். கெட்டிக்காரன். இன்னைக்கு என்ன செய்யவேணும் தெரியுமா?

பை:- சொல்லவே மாட்டீங்கறேங்களே?

மா:- ஒருத்தர் வருவார். பாக்கறதுக்கு 'ஜம்' மின்னு இருப்பார். பயிந்துக் கிடாதே. இண்ணைக்கே ஆயிரத்தையும் கொடுப்பதாக வேறே சொல்லி இருக்கிறேன். என்ன பண்றது? உம், அவர் வருவார். வந்ததும், "இப்பத்தான் மானேஜர் வெளியே போனுர்" என்ன? அந்த மாதிரி சொல்லோணும் தெரிஞ்சுதா?

(ஏன்னவோ சிறு சத்தமாகிறது.)

மா:- (ஜன்னலில் எட்டிப் பார்த்து) பாரு, பாரு, (பிறகு திரும்பி) இல்லே, இல்லே, நீ கீழே போய் உன் இடத்திலே உட்காரு. போ என்ன, சொன்னது ஞாபகம் இருக்கட்டும்.

(பையன் கீழே போய்க் கொஞ்ச நேரத்தில் ஒரு கார் வந்து நிற்கிறது. காரிலிருந்து ஒரு கனவான் இறங்கி, நேராக மெத்தைப் படிக்கட்டை நோக்கிப் புறப்பட்டார்.)

பை:- சார்.

கனவான்:- (திரும்பி) என்ன, மானேஜர் இருக்காரு?

பை:- அதுதான் சார் சொல்ல வந்தேன் சார்.........

கன:- (நிற்காமல்) என்னப்பா என்ன? மானேஜர் இல்லையா? (பையன் அவருக்கு முன்னுல் ஓடி வழி மறித்துக் கொண்டு)

பை:- சொல்றேன் கேளுங்கள். நீங்கபாட்டுக்குப் போறீங்களே மேலே?

கன:- (சிரித்துக் கொண்டு) சொல்லப்பா சொல்லு.

பை:- மானேஜர் இல்லே. வெளியே போயிருக்கிருர். எப்போ வருவார்னு தெரியாது.

கன:- எப்போ வருவார்னு தெரியாதா?

பை:- ஆமாம், எப்போ வருவார்னு தெரியாது. மேலே யாருமில்லீங்க. அங்கே ஒருத்தருமே இல்லே.

கன:- ஒருத்தருமே இல்லையா?

பை:- ஆமாங்க. யாரும் இல்லே.

கன:- என்ன, குமாஸ்தாக்கள் கூடவா?

பை:- ஆமாங்க. அவுகெல்லாம் வருவாங்க, போவாங்க. நேரம் காலம் சொல்லறதுக்கு இல்லே.

கன:- நேரம் காலம் சொல்றதுக் கில்லையா? என்னது? மேனேஜர் வெளியே போனவர் எப்ப

வருவார்ணு சொல்றதுக்கில்லே. குமாஸ்தாக்கள் வர்ர நேரங் காலம் சொல்றதுக்கில்லே உம்...

பை:- நானும் அதையே திருப்பிச் சொல்லோணுமா? நீங்கொ போயிட்டு வாங்க சார். மேலே ஒருத்தருமே கிடையாது.

கன:- (சிரித்துக் கொண்டு) சரி, தம்பி. நீ யாரு?

பை:- நான் ஆபீஸ் பையன். எந்த நேரமும் இந்த இடத்திலே என்னைப் பாக்கலாம். (சிரித்துக் கொண்டே வந்தவர் காரில் ஏறிப் புறப்படுகிறார்.)

(கொஞ்ச நேரத்துக்குப் பிறகு மானேஜர் அறையிலுள்ள டெலிபோன் மணி ஒலிக்கிறது. மானேஜர் ரிஸீவரைக் கையிலெடுக்கிறார்)

தூரல்:- ஹல்லோ. இது "செவன் டு" தானே?

மா:- ஆமா, இரும்புக்கடை மானேஜர் தான் பேசறேன்.

தூ:- என்ன, என்ன? மானேஜரா? மானேஜரா பேசறது? அதுக்குள்ளே வந்திட்டீரா?

மா:- ஆமாம். நானேதான். கடையை விட்டு எங்குமே போகலேயே? நீங்க யாரு?

தூ:- என்னய்யா சுத்த அபத்தமா இருக்கு. இதிலே பொய் வேறேயா? இப்பதான் கடைக்கு வந்து கையும் மெய்யுமா பாத்திட்டு வாரேன். எங்கும் போகலேயாம். ராமச்சந்திரன் தான் பேசறேன்.

மா:- ஓஹோ ஹோ, முதலாளியா? நான் ......நான்......எ...ங்குமே போகலேயே?

ராமச்சந்திரன்:- சே. சே. வெளியே போனால் எப்போ வருவார்ணு சொல்ல முடியாது! குமாஸ் தாக்களுக்கு நேரம் கீரம் ஒண்ணுமில்லே. அது என்ன கடையா குட்டிச்சுவரா? உங்க சித்தப்பா வீடுண்ணு நெனேச்சுக் காரியம் பண்றாப்பலே இருக்கு. உம்மைக் குறை சொல்வதிலே என்ன ஐயா இருக்கு? எல்லாம் என்னைத்தான் சொல்ல வேணும் மேலே செய்ய வேண்டியதை நேரிலே பேசிக்கிறேன்.

[கடக்கென்று ரிஸீவரைக் கீழே வைக்கும் சத்தம். இரும்புக்கடை மானேஜர் சோர்ந்த முகத்தோடு வெளியே வந்து, உக்கிரமாக, "அட ராமா" என்று கூப்பிட்டுக் கொண்டே கீழே பார்க்கிறார். அங்கே பையன் ராமன் ஒரு ஆளோடு 'மல்' லுக் கொடுத்துக் கொண்டிருப்பது கனவில் தெரிவது போல் அவருக்குக் காட்சி அளிக்கிறது!]



மலர் மணம்

"வாழ்க்கை லட்சியம்" என்னும் தொடர் இந்த இதழில் ஆரம்பமாயிருக்கிறது. தமிழ் நாட்டு இலக்கிய பிரமுகர்கள் தங்கள் தங்கள் வாழ்க்கை லட்சியத்தைப்பற்றி இந்தத் தொடரில் எழுதுகிறார்கள். முதல் கட்டுரையை ஹிந்துஸ்தான் ஆசிரியர் ரா. நாராயணன் பி. ஏ; பி. எல். உதவியிருக்கிறார். ரா. நாவின் இலக்கியம் தனிச் சிறப்புக் கொண்டது. அவருடைய உள்ளத்தை 'ஒரு அழகிய பூந்தோப்பு' என்றே சொல்லவேணும். ஏனென்றால் ஆழ்ந்த அறிவும் விசாலப் போக்கும், தெளிந்த ஞானமும் மேலான பண்பும் சேர்ந்து, அந்த இதயத்திலே பல நறுமலர்கள் புஷ்பிப்பதற்குக் காரணமாயிருக்கின்றன. இங்கே வெளியாகும் 'வாழ்க்கை லட்சியம்' ஒரு இனிய மலர். மிக இனிமையாகப் பேசுவது போலவே, இனிமையாக எழுதும், ரா. நா. வின் எண்ணங்கள் சிந்தனைக் குரியவை.

சாதாரண மனிதன் சுலபமாகப் படித்துப் பொருள் தெரியும் விதத்தில் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதப்படும் என்று நாம் ஆரம்பத்தில் சொல்லியிருந்தோம். ஆம், இலக்கிய, இலக்கணப் பயிற்சியில்லாத ஒருவனை, பண்டைத் தமிழ்க் காவியங்களின் அருமை பெருமைகளை உணரச் செய்வது மிகச் சிறந்த தென்றே எல்லாரும் போற்றினார்கள். இந்த இதழில் வெளியாகும் சிலப்பதிகாரப் பகுதி நிச்சயம் எல்லாரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும் என்பதில் சந்தேகமில்லை. கோவலன், கண்ணகி நம் நெஞ்சை அப்படியே அள்ளிக் கொள்கிற விதமாகக் காட்சி அளிக்கிறார்கள். கவிஞரின் மந்திர சக்தியும், அபூர்வ அழகும் எப்படிப்பட்ட தென்பதை ஆர். கே. எஸ். அவர்கள் தெள்ளிய பூப் போன்ற மதுரமான நடையில் வர்ணிக்கிறார்கள். இலக்கிய விற்பன்னர்கள் முதல், சகலரும் இதைப் போற்றுவதால் நாம் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

ஸ்ரீமதி ஜெயலட்சுமி ஆர். ஸ்ரீனிவாசன் அழகாகக் கதைகள் எழுதுகிறவர். "லட்சுமி கடாட்சம்" என்ற இவருடைய அருமையான சிறுகதைத் தொகுதி வெளிவந்திருக்கிறது. இங்கே பிரசுரமாவது ஒரு கவர்ச்சிகரமான கன்னடக் கதையின் மொழிபெயர்ப்பு.

'கோவில்க் காளை' என்ற கதையின் ஆசிரியை ஸ்ரீமதி க. லக்ஷ்மி மனோ தத்துவங்களை ஆராய்வதில் மிக்க விருப்பம் கொண்டவர். அதுவும் குழந்தை உள்ளத்தில் எழுகிற உணர்ச்சிகளைச் சித்திரிப்பதற்கு நமக்கும் குழந்தை உள்ளம் வேண்டும். அதில் சகோதரி லக்ஷ்மி பூரண வெற்றியும் பெற்றிருக்கிறார்.

அன்பர் ராமராவ் மராட்டி இலக்கியத்தின் வளம் முழுமையும் கண்டு அனுபவித்தவர். காண்டேகர், படகே, ஸ்ரீமதி சாந்தாபாய் நாஸிக்கர் பி.ஏ. முதலிய மராட்டி இலக்கிய ஆசிரியர்களைப் பற்றி பேச ஆரம்பித்து விட்டாரானல் நேரம் போவது தெரியாது. வாழ்க்கையிலே புரட்சி வேண்டும் என்கிறோம். இலக்கியத்திலே புரட்சி வேண்டும் என்கிறோம். "பேசிக்கொண்டே இருந்தால் அதெல்லாம் வந்து விடுமா?" என்று அடிக்கடி கேட்பார். ஒரு பிரபல மராட்டி சிறுகதை ஆசிரியையுடைய புரட்சி கரமான கதைகளை ரொம்ப பாராட்டுவார். அப்படி மலர்ந்த ஒரு அபூர்வ சித்திரமே இவர் இங்குத் தந்துள்ள "புதுக் கதை."

திரு. கோதண்டராமன் வரைந்துள்ள 'தர்ம சங்கடம்' என்ற வாழ்க்கைச் சித்திரத்தில் ஒரு 'தர்ம சங்கடமான' பிரச்சனைக்கு முடிவு தேடப்படுகிறது. இப்பேர்ப்பட்ட சிந்திக்கத்தகும் விஷயங்களும் நமக்கு அவசியம் வேண்டியது தான்.

"இன்பக் காட்சி"களைப் படம் பிடித்துக் காட்டும் கே. வி. தமிழ் இலக்கிய இலக்கணங்களை முறையாகப் பயின்று புலமை பெற்றிருப்பது போலவே ஆங்கிலத்தில் ஹோமர், மில்டன், ஷேக்ஸ்பியரிலிருந்து சமீபத்திய ஆங்கிலத் துரித வெளியீடுகளான எட்டணப் புத்தகம் வரை வாசித்துக் கொண்டே இருப்பவர். மற்றும் தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய பாஷைகளில் உள்ள கவிதா நயங்களையும் அறிந்தவர். இனிமையாகப் பாடும் ஆற்றலும் இவருக்கு உண்டு. இவருடைய 'எண்ணக் கடல்' ஒரு அரிய விருந்துதான்.

பியர்ல் பக் என்னும் பிரபல ஆசிரியையப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? நோபல் பரிசு பெற்ற இந்த ஆசிரியை, சீனத்துக் குடியானவர்கள் வாழ்வையும், சாதாரண சீனத்துப் பாமர மக்கள் வாழ்வையும் சித்திரித்து எழுதிய நாவல்களும், நவீனங்களும், உலகப் பிரசித்தி பெற்றவை. 'இலக்கியத்தில் வாழ்க்கை இடம் பெற வேண்டும். வாழ்வைப் பிரதி பலித்து காட்டுவதுதான் இலக்கியம்' என்பது இவருடைய கொள்கை. இவரது கொள்கைப்படியே காரியத்திலும் செய்து காட்டி விட்டார். இப்படி தமிழ்நாட்டில் முயலும் ஆசிரியர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அப்பேர்ப்பட்டவர்களின் முதல் வரிசையில் வைத்து எண்ணத் தக்கவர் திரு ரா. வெங்கடாசலம் அவர்கள்.

திரு வெங்கடாசலத்தின் கட்டுரைகள் 'வசந்த'த்தை அடிக்கடி அலங்கரிக்கும்.

மாதாமாதம் ஒளியும், எழிலும் பூரணமாய் நிறைந்த கலை மணங்கமழும் அற்புதமான வர்ணச் சித்திரங்கள் மேலட்டையை தேஜோமயமாக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்.

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ் : நார்த் பீச் ரோட், மதராஸ்

மதராஸ் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், மவுன்ட் ரோட், திருவல்லிக்கேணி, தியாகராயநகர், மயிலாப்பூர், புரசைவாக்கம்.

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

அதிகார மூலதனம்	...	ரூ,	1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ.	60,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் (28—5—43)	...	ரூ.	27,55,229
ரிஸர்வும் மற்ற நிதிகளும் (25—5—43)	...	ரூ.	29,44,259

மொத்த ஆஸ்தி 7 கோடிக்கு மேல்.

எல்லாவித பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்.

வேண்டிய விவரங்களுக்கு பாங்கின் எந்த ஆபீசுக்காவது எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

செக்ரடரி: N. கோபால அய்யர்.

விளம்பரதாரர்களுக்கு

விளம்பரத்தில் உபயோகிக்கும் பிளாக்குகளையும், விளம்பர மேட்டர்களையும் பிரதி ஆங்கில முதல் தேதிக்குள் காரியாலயத்துக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

அறிவிப்பு:

முன்பணம் இன்றி 'வசந்த'த்தில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டாது. தனிப்பட்ட விளம்பரம் தருபவர்கள் தயவு செய்து இதைக் கவனிக்கவும்.

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's Underwear Sport Shirts etc.

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP"
COIMBATORE.

ஏஜண்டுகளுக்கு

வசந்தத்திற்கு ஏஜண்டுகள் இல்லாத ஊர்களில் ஏஜண்டுகள் தேவை. டிபாசிட் கட்டக் கூடியவர்கள் மட்டுமே விண்ணப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்:
வசந்தம் காரியாலயம்
கோயமுத்தூர்.

THE VASANTHA DYING WORKS.

181. Oppanakara Street
Coimbatore.

Phone No. 155. Estd., 1921.

Proprietor
C. M. Subramanya Chettiar
CONTRACTOR
To
THE VASANTHA MILLS, LIMITED.
SINGANALLUR.

For all kinds of dying border yarn and tie yarn etc., undertakes any variety of colour dying at reasonably cheap rates for dying all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

PHONE 230.
TEL. ROYAL.

The
ROYAL HINDU
RESTAURANT
COIMBATORE

அன்பர்களுக்கு:

வசந்தம் முன் பிரதிகள் கைவசமில்லை. ஸ்டாம்புகளோ, மணியார்டரோ அவைகளுக்காக தயவு செய்து அனுப்பாதீர்கள்.

— மானேஜர்

தி இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்.

தலைமை ஆபிஸ்:

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங், எஸ்பிளனேட், மதருஸ்.

பிராஞ்சுகள்:

ஆலப்புழை, பம்பாய், கண்ணனூர், கோயமுத்தூர், தேவக்கோட்டை, காரைக்குடி, மதுரை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, சேலம், சிவகெங்கை.

வெளியிடப்பட்டு வசூலான மூலதனம்	...	...	ரூ.	50,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	...	...	ரூ.	22,27,000
ரிஸர்வ் நிதி	...	...	ரூ.	7,00,000

கனம் எம். ஸிடி. எம். சிதம்பரம் செட்டியார், சேர்மன்.

பிக்ஸட் டிபாசிட்டுகளும் கீழ்க்கண்ட விதத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்

6—மாதத்துக்கு	...	...	2%
12 ,,	...	...	2¼%
24 ,,	...	...	2½%

எல்லாவித பாங்கு அலுவல்களும் ஏற்றுக் கொண்டு நடத்தப்படும்.

எஸ். டி. சதாசிவம், ஜெனரல் மேனேஜர்.

வசந்தம் சந்தா விவரம்

ஒருவருஷத்துக்கு ரூ	9 0 0
தனிப் பிரதி விலை அணா	0 12 0

நீங்கள் சந்தாதாரராகச் சேர்ந்து விட்டால் பிரதி தமிழ் மாதம் முதல் தேதிகளில் 'வசந்தம்' உங்களைத் தேடி வந்து விடும்.

விளம்பர விவரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்:

வசந்தம் காரியாலயம்

4/12 A. திருச்சி ரோடு

கோயமுத்தூர்.

தமிழ்நாடு ...
199787.
சென்னை ...

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25.

வசந்தா மில்ஸ்

(லிமிடெட்.)

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-ஆம் கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சி பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:

20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முருக்கு, காரம், சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

மல்	சர்டிங்
லாங்கிளாத்	சதர்
வேஷ்டிகள்	டவல்

தயாரிக்கிறோம்

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.

600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

கைகளுக்கு நம்பிக்கையும் நாணயமுமான கடை எது

தந்தி; "ராஜா" டெலிபோன் நெ. 218

கோவை
P.A. ராஜு செட்டியார் & பிரதர்
சுவர்ண மாளிகைக்கு
குடும்ப சகிதம் விஜயம் செய்யுங்கள்.

அழகு பொலியும் :-:
ஆபரணங்களை பார்வையிடுங்கள்

★ நீரோட்டமுள்ள வைரங்கள்

★ பவுன் நகைகள்

★ வேலைப்பாடமைந்த வெள்ளிப் பாத்திரங்கள்

★ கண்ணைக்கவரும் கல் ஆபரணங்கள்

★ நூதன இனுமல் நகைகள்

ஏராளமாக இருக்கின்றன

P. A. R. சீல் போட்ட நகைகளையே பார்த்து வாங்குங்கள்.

தபால் பெட்டி நெ. 139

P. A. ராஜு செட்டியார் & பிரதர்
வைரம், பொன், வெள்ளி, இரத்தினங்கள் வியாபாரம்,
பெரிய கடை வீதி, :: கோயமுத்தூர்.

Printed at the Vasanta Mills Press, and Published by A. Krishnaswamy, at 4/12. A, Trichy Road, Coimbatore. Editior : R. Thirugnanasambandam.